# நாட்டுப்புறவியல்

# நாட்டுப்புறவியல்

# பொருளடக்கம்


Title Page
Table Of Contents
A0611. நாட்டுப்புறவியல் - வரலாறு
பாட ஆசிரியரைப் பற்றி
பாடம் - 1 A06111 நாட்டுப்புறவியல் - ஓர் அறிமுகம்
பாட அமைப்பு
1.0 பாட முன்னுரை
1.1 நாட்டுப்புறவியல்
1.2 நாட்டுப்புறப் படைப்புகள்
1.3 நாட்டார்
1.4 வாய்மொழி இலக்கியமும் எழுத்து இலக்கியமும்
1.5 தொகுப்புரை
பாடம் - 2 A06112 தமிழக நாட்டுப்புறவியல் வரலாறு
பாட அமைப்பு
2.0 பாட முன்னுரை
2.1 நாட்டுப்புறவியல் - வரலாறு
2.2 நாட்டுப்புறவியல் - பகுப்பும் பண்பும்
2.3 நாட்டுப்புறவியல் - பாடல்களும் கதைகளும்
2.4 நாட்டுப்புறவியல் - பதிவுகள்
2.5 நாட்டுப்புறவியல் - வளர்ச்சி
2.6 தொகுப்புரை
பாடம் - 3 A06113 நாட்டுப்புறவியல் இலக்கிய வகைமைப்பாடுகள்
பாட அமைப்பு
3.0 பாட முன்னுரை
3.1 நாட்டுப்புறவியல் - வகைமைப்பாடு
3.2 நாட்டுப்புற இலக்கியம்
3.3 நாட்டுப்புறக் கலைகள்
3.4 தொகுப்புரை
பாடம் - 4 A06114 நாட்டுப்புறவியலும் பிற துறைகளும்
பாட அமைப்பு
4.0 பாட முன்னுரை
4.1 நாட்டுப்புறவியலும் பிற துறைகளும்
4.2 நாட்டுப்புறவியலும் மொழியியலும்
4.3 நாட்டுப்புறவியலும் உளவியலும்
4.4 நாட்டுப்புறவியலும் சமூகவியலும்
4.5 நாட்டுப்புறவியலும் மானுடவியலும் (Folklore and Anthropology)
4.6 நாட்டுப்புறவியலும் மண்ணியலும் (Folklore And Geology)
4.7 நாட்டுப்புறவியலும் வரலாறும் (Folklore and History)
4.8 தொகுப்புரை
பாடம் - 5 A06115 நாட்டுப்புறவியல் - செய்தி சேகரிப்பும் கள ஆய்வும்
பாட அமைப்பு
5.0 பாட முன்னுரை
5.1 களத் தேர்வில் கவனிக்க வேண்டியவை
5.2 தரவுகளின் வகைகள்

5.3 அணுகுமுறைகள்
5.4 தொழில் நுட்பக் கருவிகளின் பயன்பாடு
5.5 பதிவு செய்தல்
5.6 தொகுப்புரை
பாடம் - 6 A06116 நாட்டுப்புறவியல் கோட்பாடுகள்
பாட அமைப்பு
6.0 பாட முன்னுரை
6.1 கோட்பாடு
6.2 அமைப்பியல் கோட்பாடு
6.3 வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு
6.4 சூழல் கோட்பாடு
6.5 தொகுப்புரை
A06111 தன் மதிப்பீடு : விடைகள் - I
A06111 தன் மதிப்பீடு : விடைகள் - II
A06112 தன் மதிப்பீடு : விடைகள் - I
A06112 தன் மதிப்பீடு : விடைகள் - II
A06113 தன் மதிப்பீடு : விடைகள் - I
A06113 தன் மதிப்பீடு : விடைகள் - II
A06114 தன் மதிப்பீடு : விடைகள் - I
A06114 தன் மதிப்பீடு : விடைகள் - II
A06115 தன் மதிப்பீடு : விடைகள் - I
A06115 தன் மதிப்பீடு : விடைகள் - II
A06116 தன் மதிப்பீடு : விடைகள் - I
A06116 தன் மதிப்பீடு : விடைகள் - II

# **A0611.** நாட்டுப்புறவியல் - வரலாறு

A06111 நாட்டுப்புறவியல் – ஓர் அறிமுகம்
A06112 தமிழக நாட்டுப்புறவியல் வரலாறு
A06113 நாட்டுப்புறவியல் இலக்கிய வகைமைப்பாடுகள்
A06114 நாட்டுப்புறவியலும் பிற துறைகளும்
A06115 நாட்டுப்புறவியல் – செய்தி சேகரிப்பும் கள ஆய்வும்
A06116 நாட்டுப்புறவியல் கோட்பாடுகள்

# பாட ஆசிரியரைப் பற்றி



பெயர் : முனைவர் எஸ்.முத்துலட்சுமி

கல்வித்தகுதி : எம்.ஏ., (தமிழ்)
எம்.ஏ., (இதழியல்)
பிஎச்.டி.,

பணி : இணைப் பேராசிரியர் மற்றும்
தேர்வு ஆணையர்.
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர்
கல்லூரி, மதுரை.

வெளியீடுகள் : 6 நூல்கள்

(1). சாண்டில்யனின் நாவல்கள்- ஓர் ஆய்வு
(2). மருதம் தழை
(3). காந்தியத் தத்துவங்கள்
(4). புதிய தேடல் – மக்கள் தொடர்புத்துறை
(5). இலக்கு+பகிர்வு
(6). இணைவோம் இணையத்தில்

ஆய்வுக்
கட்டுரைகள் : 70

# பாடம் - 1

# A06111 நாட்டுப்புறவியல் - ஓர் அறிமுகம்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தமிழ் இலக்கிய வரலாற்றில் நாட்டுப்புற இலக்கியம் என்பது மிகவும் முக்கியத்துவம் பெற்ற பகுதியாகும். இதன் சிறப்புகளை அறிமுகப்படுத்தும் வகையில் இப்பாடப் பகுதி அமைந்துள்ளது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படித்து முடிக்கும்போது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறுவீர்கள்.

- நாட்டுப்புற இலக்கியத்தின் சிறப்பினைத் தெரிந்து கொள்ள முடியும்.
- நாட்டுப்புற மக்கள் என்று அழைக்கப்படுவதன் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியும்.
- வாய்மொழி இலக்கியம் தான் எழுத்திலக்கியத்தின் முதற்படி. இதனைப் புரிந்து கொண்டால்தான் தமிழ் இலக்கியத்தின் சிறப்பினை அறிந்து கொள்ள இயலும். இப்பாடப் பகுதி இவையனைத்தையும் விளக்குகின்றது.

# பாட அமைப்பு

1.0 பாட முன்னுரை
1.1 நாட்டுப்புறவியல்
1.2 நாட்டுப்புறப் படைப்புகள்
1.3 நாட்டார்
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
1.4 வாய்மொழி இலக்கியமும் எழுத்திலக்கியமும்
1.5 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 1.0 பாட முன்னுரை

பொதுவாக, இலக்கியம் என்பது நாட்டு மக்களின் வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி என்று கூறுவர். இங்குக் கிராம மக்களின் வாழ்க்கை முறைகளையும், பழக்க வழக்கங்களையும் படைப்புகளையும் குறித்த இலக்கியமே நாட்டுப்புறவியல் இலக்கியம் ஆகும். நாட்டுப்புறவியல் என்றால் என்ன என்பது பற்றிய செய்திகள் இங்குத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

## 1.1 நாட்டுப்புறவியல்

நாட்டுப்புறவியல் என்றால் என்ன? இச்சொல்லுக்கான பொருளை முதலில் புரிந்து கொண்டால் தான் நாட்டுப்புற இலக்கியம் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். இதற்கான விளக்கத்தை இரண்டு நிலைகளில் அறிந்து கொள்ளலாம்.

### 1.1.1 விளக்கம்

நாட்டுப்புறவியல் என்பதைப் பற்றிப் பல கருத்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- அகராதிப் பொருள்

ஒரு குறிப்பிட்ட சொல்லுக்கான பொருளை (meaning) வழங்குவது அகராதி (Dictionary). இதன்மூலம் சொல்லின் பொருளை நன்கு அறிந்து கொள்ள முடியும். நாட்டுப்புறவியல் என்பது குறித்து அகராதி தரும் கருத்தாவது: ‘மக்களுடைய அல்லது நாட்டினுடைய அல்லது ஓர் இனத்தினுடைய கற்றல் மற்றும் அறிவு சிறப்பாகப் பழங்காலத்திலிருந்து வழிவழியாக வழங்கி வருவது’ என்பதாகும்.

- அறிஞர்கள் கருத்து

அறிஞர்கள் ‘நாட்டுப்புறவியல்’ என்ற சொல்லுக்குப் பதில் நாட்டார் வழக்காறு என்ற சொல்லையும் பயன்படுத்தியுள்ளனர். ஆய்வறிஞர் நா.வானமாமலை அவர்களால் பயன்படுத்தப்பட்ட சொல் ‘நாட்டார் வழக்காறு’ என்பதாகும். இவர் வழியைப் பின்பற்றி அறிஞர் தே. லூர்து என்பாரும் நாட்டுப்புறவியல் என்பதற்கு ‘நாட்டார் வழக்காறு’ என்ற சொல்லையே பயன்படுத்துகிறார்.

மேனாட்டு அறிஞர்கள் ‘Folk lore’ என்ற சொல்லை ‘நாட்டுப்புறவியல்’ என்பதற்கு ஈடாகப் பயன்படுத்தியுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆய்வாளர் ஆலன் டண்டி என்பார் ‘Folk’ என்னும் மக்கள்; காட்டுமிராண்டி நிலையிலுள்ள அல்லது நாகரிக முதிர்ச்சியற்ற மக்களுக்கும், நாகரிகமடைந்துள்ள அல்லது கல்வியறிவு பெற்ற மக்களுக்கும் இடைப்பட்டவர்கள் என்று கூறுகின்றார். இவரது கருத்தைக் கீழ்க்காணும் ஆங்கிலப் பகுப்பு விளக்குகி◌றது.

Savage or Primitive Folk or Peasant Civilized Elite

Pre-Non-Literate 1) Illiterate 1) Literate

2 ) Rural 2) Urban

3) Lower Stratum 3) Upper Stratum

எனவே ‘Folk’ எனப்படுவோர் மேனாட்டார் கருத்து விளக்கத்தின்படி, கல்வியறிவற்றவர், கிராமத்தில் வாழ்பவர், தாழ்ந்த சமூக நிலையில் உள்ளவர் என்பது பெறப்படுகிறது. அடுத்து ‘lore’ என்ற சொல்லை, ‘படைப்பு’ எனக் கொள்ளலாம். அது வழங்கப்படும் சூழல், பாடம் (Text), அமைப்பு இவற்றைக் கொண்டு முடிவு செய்யப்படலாம் என்றும் எடுத்துரைக்கின்றனர்.

இவ்வாறு நாட்டுப்புறவியல், நாட்டார் வழக்காற்றியல், நாட்டுப் படையல் என்பன

Folk lore என்ற ஆங்கிலப் பெயருக்கு இணையாகப் பயன்படுத்தப்படுகின்றன. 'Folk lore' என்ற சொல்லின் அமைப்பிலிருந்து இந்நாட்டுப்புறவியல் தொடர்பான பல்வேறு கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டு, இதைப் பற்றிய ஆய்வில் பயன்படுத்தப்படுகின்றன.

### 1.1.2 நாட்டுப்புற மக்கள்

நாட்டுப்புறவியல் இலக்கியத்தைப் படைப்பவர் நாட்டுப்புற மக்கள் ஆவர். எனவே இம்மக்கள் யாவர்? அவர்களது படைப்புகள் எத்தகு சூழலில், எத்தகு அமைப்பில் உருவாகின்றன என்பனவற்றை இப்பகுதியின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

- படைப்பாளன்

ஒரு நாட்டுப்புறப் பாடலைப் படைத்தவர் இவர்தான் என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஏனென்றால் அது மனத்தின் அனுபவ வெளிப்பாடாகக் கிராமத்துச் சூழலில் உருவாவது ஆகும். இப்பாடலின் தன்மைகள் குறித்து மேலும் தெரிந்து கொள்ளலாம்.

- படைப்பின் தன்மைகள்

நாட்டுப்புற பாடல்களுக்கு எனச் சில தனித்தன்மை வாய்ந்த பண்புகள் காணப்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல்,

- வாய்மொழியாகப் பரவும் தன்மையது (It is oral)
- மரபு வழிப்பட்டது (It is traditional)
- குறிப்பிட்டு இவர் தான் படைப்பாளர் என்று இல்லாதது (It is usually anonymous)
- பல்வேறு வடிவங்களாகத் திரிபடையும் பண்பினது. (It exists in different versions)
- ஒருவித வாய்பாட்டுக்குள் அடங்குவது (It tends to become formalized)

ஆகிய தனித்தன்மைகள் கொண்டது.

### 1.1.3 பாடல்களின் பதிவுகள்

கிராமத்து மக்களில் குரல் இனிமையும், பாடல்களைப் பாடும் பழக்கமும் உடையவர்களே நாட்டுப்புறப் பாடல்களைத் தங்களது உள்ளத்தில் பதிவு செய்து கொள்வார்கள். மரபு வழி என்பதால், முன்னோர் பாடியதைப் பின்பற்றி அக்குடும்பத்திலோ உறவிலோ, உள்ளவர் யாரேனும் பாடல்களைப் பாடிப் பாடி மனனம் செய்து கொள்வர் அப்பாடல்கள் மறைவதில்லை. நாட்டுப்புறப் பாடல்கள் வாய்மொழிப் பாடல்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஓலைச் சுவடியும், அச்சுக் கலையும் இல்லாத காலத்தில் காற்றில் கலந்த கவிதைகளாக இப்பாடல்கள் விளங்கின. இப்பாடல்களில், பெரும்பாலும் மனனம் செய்வதற்கு ஏற்ற வகையில் எதுகை, மோனை, ஒரே சொல்லே திரும்பத் திரும்ப வருதல், ஒரு தொடரில் வந்த இறுதிச் சொல் அடுத்த வரியில் முதலில் வருதல் என்னும் அந்தாதி அமைப்பில் வருதல் ஆகிய கூறுகளே இருக்கும். மேலும் ஒருவர் பாடியதைப் போன்றே அடுத்தவர் பாடினாலும், ஒவ்வொருவரும் அவரவர் கற்பனைத் திறனுக்கும் நயத்திற்கும் ஏற்பப் பாடல்களைப் பாடிப் பரப்புதல் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நாட்டுப்புற மக்களே நாட்டுப்புற இலக்கியத்தின் படைப்பாளர்கள் என்று கூற வேண்டும். இப்பாடல்கள் கூட்டு முயற்சியில் உருவானவை. மேலும் மரபு வழியாகப் பரவும் பாரம்பரியச் சிறப்பினை, போக்கினைக் கொண்டவை. இப்பாடல்களை இன்னார் தான் பாடவேண்டும். இப்படித்தான் பாடவேண்டும் என்ற கட்டுப்பாடு என்பது எல்லாம் கிடையாது.

## 1.2 நாட்டுப்புறப் படைப்புகள்

நாட்டுப்புற மக்களின் படைப்புக்களை நாட்டுப்புற இலக்கியம், கலை என்ற இருபிரிவினுள் அடக்க முடியும். மேலும், நாட்டுப்புறக் கலை என்பதில் நம்பிக்கைகள், ஆடல், பொருள்சார் பண்பாடு (Material Culture) ஆகியவற்றையும் சேர்த்துக் கூறுதலுண்டு.

### 1.2.1 நாட்டுப்புற இலக்கியம்

நாட்டுப்புற மக்களால் பழக்கத்தில் பயின்று வழக்கத்தில் நிலைபெற்ற பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், புராணங்கள் என்பன நாட்டுப்புற இலக்கியங்களாகும். இதில் நாட்டுப்புறப் பாடல்கள் (Folk Songs) என்பனவற்றை நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள் சூழல் அடிப்படையில் சிந்தித்து எட்டாக வகுத்து உரைக்கின்றனர். அவையாவன,

1) தாலாட்டுப் பாடல்கள்

2) குழந்தைப் பாடல்கள்

3) காதல் பாடல்கள்

4) தொழில் பாடல்கள்

5) கொண்டாட்டப் பாடல்கள்

6) பக்திப் பாடல்கள்

7) ஒப்பாரிப் பாடல்கள்

8) பனிமலர்ப் பாடல்கள் (மேற்குறிப்பிட்ட பிரிவுகளுக்கு உட்படாத பாடல்கள்)

என்பவைகளாகும்.

- நாட்டுப்புறக் கதைகள் (Folk Tales)

நாட்டுப்புற மக்களுக்கு முறைசாராக் கல்வி (Non-formal Education) போன்று, அறக்கோட்பாட்டை (Ethics) வலியுறுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு கதைகள் சொல்லப்பட்டு வருகின்றன. கதைகளைக் கீழ்க்காணும் முறையில் பகுத்து உரைப்பர். அவையாவன:

1) மனிதக் கதைகள்

2) விலங்குக் கதைகள்

3) மந்திர தந்திரக் கதைகள்

4) தெய்வக் கதைகள்

5) இதிகாச புராணக் கதைகள்

6) பல்பொருள் பற்றிய கதைகள்

என்பனவாகும்.

• நாட்டுப்புறக் கதைப் பாடல்கள்

நாட்டுப்புறக் கதைப்பாடல் என்பது ஓரிடத்தில் வழங்கப் பெறும் புகழ்மிக்க கதையினைப் பாடலாகப் பாடுவதாகும். இவ்வாறு கதையைப் பாடலாகக் கூறுவது அல்லது பாடலில் கதை பொதிந்து வருவது கதைப் பாடல் எனப்படும். கதைப் பாடலில்

1) காப்பு அல்லது வழிபாடு

2) குரு வணக்கம்

3) வரலாறு

4) வாழி

என்ற நான்கு பகுதிகள் கட்டாயம் இடம் பெற்று இருக்கும். மேலும் இக்கதைப் பாடல்களில் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் பற்றிய தகவல்களும் இடம் பெறுதல் உண்டு.

• பழமொழிகள்

பழமையான மொழிகளே பழமொழிகள் ஆகும். அறிவாலும், அனுபவத்தாலும் பழுத்துப் போன மொழிகள் நாட்டுப்புற மக்களால் நயம்படக் கூறப்படும் பொழுது அது பழமொழி என்றாகிறது. இதைச் சொலவடை, முதுமொழி, பழஞ்சொல், முதுசொல் என்றும் கூறுவர். பழமொழிகளை,

1) அளவு அடிப்படை (Size Basis)

2) பொருள் அடிப்படை (Subject Basis)

3) அகர வரிசை அடிப்படை (Alphabetical Basis)

4) அமைப்பியல் அடிப்படை (Structural Basis)

5) பயன் அடிப்படை (Functional Basis)

என்ற பிரிவுகளால் ஆய்வு செய்வர்.

• விடுகதைகள் (Riddles)

நாட்டுப்புற மக்கள் தங்களின் அறிவுத் திறத்தைக் காட்டுவதற்காகப் புதிர்ப் பண்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு கருத்தைக் கூறுவார்கள். அதில் ஏதாவது ஒரு கருத்து மறைந்து இருக்கும். அதைக் கண்டுபிடித்து விடை கூறவேண்டும். இவ்விடுகதைகள்

நாட்டுப்புற விடுகதைகள் (Folk Riddles)
இலக்கிய விடுகதைகள் (Literary Riddles)

என்ற இருநிலையில் உள்ளன எனலாம்.

• புராணங்கள் (Myths)

‘புராதனம்’ என்னும் வடசொல்லில் இருந்து உருவானதே ‘புராணம்’. ‘புராணம்’ என்பது வழிவழியாக வந்த இறைவன், இறைவி பற்றிய கருத்துகள் அடங்கிய கதைகள் எனலாம். வேதங்களுக்கு அடுத்தபடியாகப் புராணங்கள் போற்றப்படுகின்றன. சைவம், வைணவம் என்ற சமயங்களுக்கு உரிய புராணங்கள் பல உள்ளன. நாட்டுப்புற மக்களின் கடவுள் வழிபாட்டில் இடம்பெறும் சிவன், முருகன், திருமால் போன்ற கடவுளர்க்குப் புராணங்கள் உள்ளன. புராணங்களை,

1) மகா புராணங்கள்

2) இதிகாச அமைப்பிலானவை

3) சாதிப் பெருமை விளக்குவன

4) ஊர்ச் சிறப்பைக் கூறுவன – தலபுராணம்

என்று பகுத்துக் கூறலாம்.

இவ்வாறு நாட்டுப்புற இலக்கியம் என்பது அக்கிராம மக்களின் மண்ணின் மணத்தோடு, உள்ளத்தில் உள்ளதை உள்ளபடியே எடுத்துக்கூறல் என்ற அமைப்பில், இசை நயத்தோடு, இலக்கணக் கட்டுப்பாடு என்பது இல்லாது படைக்கப்படுவது ஆகும். படைப்பாளன் இவன் தான் என்று அறுதியாகக் கூற முடியாதபடி எல்லாரும் தாம் என்று கூறும் வகையில் படைக்கப்படுவது ஆகும்.

• நம்பிக்கைகள்

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையில் இலக்கியம், கலைகள், கைவினைப் பொருட்கள் போன்று இடம் பெறும் மற்றொரு முக்கியக்கூறு நம்பிக்கை (Belief) என்பதாகும். நம்பிக்கையினை மனிதனின் மூன்றாவது கை என்பர். இந்நம்பிக்கை மனிதனின் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்விலும் இடம் பெறுவதாகும். இயற்கையின் மழை, விலங்கு, பறவை குறித்தும்; மனிதரின் பிறப்பு, பருவமடைதல், விருந்தினர் வருகை, உழவு, என்பவை பற்றியும்; திசை, நட்சத்திரம், ராசி, கோலமிடுதல், விதி பற்றிய சிந்தனை, இறப்பு போன்ற பலவற்றிலும் கிராமத்து மக்களிடம் காணப்படும் அழுத்தமான நம்பிக்கை மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இந்நம்பிக்கைகளில் காரண காரியங்களை ஆராய முடியும். அறிவியல் போன்று வன்மை, மென்மைகளை ஆராய்தல் என்னும் போது கிராமத்து மக்களின் உள்ளப்பாங்கு, பண்பாடு ஆகியவற்றை அறிய முடியும்.

### 1.2.2 நாட்டுப்புறக் கலைகள்

நாட்டுப்புற மக்களின் உணர்ச்சியின் வெளிப்பாடாக அமையும் ஆடல், பாடல் ஆகியன நாட்டுப்புறக் கலைகளாகும். இக்கலைகள் தாம் கிராம மக்களை வாழ்விக்கும் உயிர்த்துடிப்பு மிக்கவை. இவை மக்களின் அழகியல் உணர்வுகளின் மையமாக விளங்கி ஐம்புலன்களையும் ஈர்த்து, கவலையைப் போக்கி நாட்டின் செல்வமாக விளங்குகின்றன. இக்கலைகளை,

1) சமூகச் சார்புக் கலைகள்

2) சமயச் சார்புக் கலைகள்

என்று பிரித்து உரைக்கலாம்.

இவற்றில் இடம்பெறும் ஆட்டங்கள் எனப்படும் கலைகள்,

1) சிலம்பாட்டம் 2) காவடியாட்டம்

3) கரக ஆட்டம் 4) மயிலாட்டம்

5) கும்மியாட்டம் 6) ஒயிலாட்டம்

7) கோலாட்டம் 8) பின்னல் கோலாட்டம்

9) பொய்க்கால் குதிரையாட்டம் 10) தேவராட்டம்

11) சேவையாட்டம் 12) சக்கையாட்டம்

13) கழியல் ஆட்டம் 14) சிம்ம ஆட்டம்

15) வேதாள ஆட்டம் 16) பொடிக்கழி ஆட்டம்

17) பகல் வேஷம் 18) கரடி ஆட்டம்

19) வர்ணக் கோடாங்கி 20) புலி ஆட்டம்

21) பூத ஆட்டம் 22) பேய் ஆட்டம்

23) கணியான் ஆட்டம் 24) வில்லுப் பாட்டு

25) கூத்து 26) தெருக்கூத்து

27) கழைக் கூத்து 28) பாவைக் கூத்து

29) தோற்பாவைக் கூத்து

என்பவைகளாகும்.

• கைவினைப் பொருட்கள்

மேலும் நாட்டுப்புற மக்களின் கைவினையின் ஆற்றல் திறத்தால் உருவாகும் பொருட்களுக்குத் தனித்தன்மை மிகுந்த சிறப்புகள் உண்டு. இத்தகு பொருட்களும் நாட்டுப்புற மக்களின் கலை நயத்தால் உருவாகும் தன்மையன என்பதால் இக்கைவினைப் பொருட்களும் கலை என்பதில் இடம் பெறும்.

கிராமத்து மக்கள் காலங்காலமாகப் பாரம்பரியமாகச் செய்துவரும் பொருட்கள் உண்டு. இவர்களது கைவினைத் திறத்தைக் கண்டு மக்கள் வியந்து நிற்பார்கள். இவர்களது கைவினைகள் (Folk Crafts):

1) மண்பாண்டக் கலை 2) காகிதப் பொம்மைகள் செய்தல்

3) மரப் பொம்மைகள் செய்தல் 4) பாய் பின்னுதல்

5) மரவேலைப்பாடு 6) உலோகச், சிற்ப வேலைப்பாடு

7) கல் சிற்ப வேலைப்பாடு 8) சப்பரம்,தேர், தெய்வம் அலங்கரிக்கும் கலை

9) நெசவுக் கலை 10) தஞ்சாவூர்த் தட்டு, நெல்மணி, ஏலக்காய் மாலை செய்தல்

## 1.3 நாட்டார்

நாட்டுப்புறத்து மக்களாம் கிராமத்து மக்களை நாட்டார் என்றும் கூறுவதுண்டு. இச்சொல் குறித்த தகவல்கள் சிலவற்றை அறிந்து கொள்வது மிகவும் தேவையானதாகும். 'நாட்டார்' என்ற சொல் மக்களுள் ஒரு நிலப்பகுதியினர் என்ற பொருளில்தான் நாட்டுப்புற இலக்கியத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட சாதியினரைக் குறிப்பதற்கும் 'நாட்டார்' என்ற சொல் இக்காலத்தில் பயன்படத் தொடங்கி விட்டது. இதனால், 'நாட்டார்' என்பது நாட்டுப்புறத்தாரை மட்டுமே குறிக்கும் என்பதை நாட்டுப்புறவியல் இலக்கியம் கற்பவர்கள் தெளிவுபட முதற்கண் அறிந்து கொள்ள வேண்டும்.

### 1.3.1 நாட்டார் – சொல்லாட்சி

நாட்டுப்புறவியல் அறிஞர் நா. வானமாமலை, முதன்முதலில் நாட்டுப்புறத்தாரை 'நாட்டார்' என்று குறிப்பிட்டு அவர்களது வரலாற்றினை, இலக்கியத்தைக் குறித்து எழுதுவதை 'நாட்டார் வரலாறு' என்று எடுத்துக் கூறினார். தமிழ்ப் பேரகராதி நாட்டார் என்ற சொல் குறித்துப் பல்வேறு விளக்கங்களைத் தருகின்றது.

- தேசத்தார்
- நாட்டு மகாசனம்
- நாட்டாண்மைக்காரர்
- கள்ளர், செம்படவர் முதலிய சாதியினரின் பட்டப் பெயர்கள்
- தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்த ஒரு விவசாய வகுப்பார்

அகராதியின் கருத்துப்படி 'நாட்டார்' என்பது ஒரு கூட்டத்தாருக்கு உரியது என்பதாக இல்லை. மேலும் 'நாட்டார்' என்ற சொல்லாட்சி தமிழகத்தில் பல்வேறு ஊர்களில் ஒரு குறிப்பிட்ட சாதி மக்களைச் சுட்டுவதாக வழங்கப்படுகிறது. ஆனால் இத்தகு வரன்முறைகளுக்கு உட்படாத சொல்லாக, நாட்டுப்புறத்தாரே 'நாட்டார்' என்று நாட்டுப்புறவியல் அறிஞர்கள் விளக்கம் தந்தனர். 'நாட்டார்' என்பதே, ஆங்கிலத்தில் குறிக்கப் பெறும் folk என்னும் சொல்லுக்கு இணையாக இந்த அறிஞர்கள் தரும் தமிழ்ச் சொல்லாகும். இச்சொல்லின் அடிப்படையில் நாட்டுப்புறவியல் தொடர்பாகப் பல்வேறு கலைச் சொற்களையும் உருவாக்கியுள்ளனர். அச்சொற்களைத் தெரிந்து கொள்வது நலம் பயப்பதாகும்.

- கலைச்சொற்கள் பட்டியல்

  - நாட்டுப்புற வழக்காறு – Folk lore
  - நாட்டுப்புறவியல் – Folk loristics
  - நாட்டுப்புற இலக்கியம் – Folk Literature
  - நாட்டுப்புறப் பாடல் – Folk Song

• நாட்டுப்புறக் கலை – Folk Art

• நாட்டுப்புற நம்பிக்கைகள் – Folk Beliefs

இச்சொற்களை அறிந்து கொண்டால் இவ்விலக்கியம் குறித்துப் படிப்பதற்குத் துணையாக இருக்கும்.

தன்மதிப்பீடு : வினாக்கள் – I

## 1.4 வாய்மொழி இலக்கியமும் எழுத்து இலக்கியமும்

வாய்மொழி இலக்கியம், எழுத்து இலக்கியம் என்ற சொற்றொடர்களே இவ்விலக்கியங்கள் மொழியப்படும் தன்மையாலும் எழுதப்படும் தன்மையாலும், வழங்கப்படுவன என்பதை விளக்குகின்றன எனலாம்.

### 1.4.1 வாய்மொழி இலக்கியம்

தொடக்க நிலையில் மனிதனால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் ஓலைச் சுவடியில் பதிவு பெறுவதற்கு முன்பு வாய்மொழியாக ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தான் பதிவு செய்யப்பட்டன. பின்னர் மனிதனின் அறிவியல் கண்டுபிடிப்பான அச்சு இயந்திரத்தால் இத்தகு வாய்மொழி இலக்கியங்கள் எழுத்து இலக்கியங்களாகப் பதிவாயின. எனவே இலக்கியத்தின் தோற்றம் வாய்மொழியினதாக விளங்கியது. அதன் வளர்ச்சி நிலை எழுத்து இலக்கியமாக நிலைப்பாட்டினைப் பெற்றது என்று கூற இயலும். வாய்மொழி இலக்கியங்களுக்கும் எழுத்து இலக்கியங்களுக்கும் இடையே கருத்து, கற்பனை, எதுகை, மோனை, உவமை, உருவகம், அந்தாதி என்று யாப்புக் கூறுகளில் ஒற்றுமைகள் உண்டு. ஆனால் வாய்மொழி இலக்கியத்திற்கு ஒரு குறிப்பிட்ட படைப்பாளன் இல்லை. மரபு ரீதியாகப் பாரம்பரியமாகப் பயிற்றுவிக்கப்பட்டு, பழக்கத்தினால் நிலைப்பாட்டினைப் பெறுவது. எழுத்திலக்கியமோ படைப்பாளனின் பெயரோடு இலக்கணக் கட்டமைப்புக்கு உட்பட்டு எழுதிப் பாதுகாக்கப்படுவது. படித்த – கண்ணுக்குத் தெரியாத வாசகர்கள் பொருட்டு, செந்நெறி வாழ்வுக்காகப் படைக்கப்படுவது எழுத்திலக்கியத்தில் நாட்டுப்புறக் கூறுகளின் தாக்கம் இடம் பெறுவதுண்டு.

### 1.4.2 எழுத்திலக்கியம்

காலந்தோறும் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவை அந்நாளில் படித்த சிலரால் ஓலை முதலியவற்றில் எழுதப்பட்டன. அச்சுக் கலையின் வருகைக்குப் பின்பு மிகுதியாகப் பதிவு செய்யப்பட்டு எழுத்திலக்கியங்களாயின. இதில் நாட்டுப்புறக் கூறுகளான வாய்மொழி இலக்கியப் பண்புகள் காணப்படுகின்றன. வாய்மொழி இலக்கியம் பேச்சு நடையில் அமைவது, இப்பண்பு எழுத்திலக்கியத்தில் காணப்படுகிறது.

• ஒரே சொல்லாட்சியினைத் திரும்பத் திரும்பக் கூறுவதைச் சங்கப் பாடல்களில் காணமுடியும்.

• ஒரு கருத்தை மூன்றுமுறை அடுக்கிக் கூறும் தாழிசை எனப்படும் யாப்பின் கூறு சங்கப்பாடல்களிலும், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களிலும் உண்டு.

• மக்கள் வாழ்வில் பயின்று வந்த கண்ணகி – கோவலன் கதையே சிலப்பதிகாரக் காப்பியமாகப் படைக்கப்பட்டது.

• திருநாவுக்கரசரின் பழமொழிப் பதிகம் ஒவ்வொரு பழமொழியையும் எடுத்துரைக்கிறது.

• மாணிக்கவாசகரின் திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பொன்னூசல் முதலான பாடல்கள் நாட்டுப்புற மகளிர் விளையாட்டுக்கள் குறித்து எடுத்துரைப்பன.

• பெரியாழ்வாரின் தாலாட்டு, ஆண்டாளின் பாவைப் பாட்டு, குலசேகர ஆழ்வாரின்

தாலாட்டு என்பன நாட்டுப்புறப் பாடல்களின் தாக்கத்தின் வீச்சால் படைக்கப்பட்டவைகளே.

• இன்றும் மக்களின் தேர்தல் பிரசாரம், கோவில் விழாக்கள் போன்றவற்றில் நாட்டுப்புறப் பாடல்கள், கலைகள் இடம் பெற்று வருகின்றன.

• குறிப்பாக, இன்றைய நாளில் குடும்ப நலத் திட்டம், பசுமைப் புரட்சித் திட்டம், அறிவொளி இயக்கம் முதலானவற்றில் நாட்டுப்புறப் பாடல்கள் காலத்தின் தேவைக்கேற்பப் படைக்கப்படுகின்றன. இவ்வாறு வாய்மொழி இலக்கியத்தின் நீட்சியாக அழுத்தமான அமைப்பில் – அச்சுக் கலையின் செல்வாக்கால் எழுத்திலக்கியம் உருவாகி நிலைத்த தன்மையைப் பெற்றுள்ளது. மேலும் எவ்வெப்போது மக்களை ஒன்று சேர்க்கும் இயக்கங்கள் வலுப்பெற்றனவோ அப்போதெல்லாம் எழுத்திலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கம் மிகுதியாக இடம்பெறும் என்பதை அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## 1.5 தொகுப்புரை

அன்பர்களே! இதுவரை ‘நாட்டுப்புறவியல் – ஓர் அறிமுகம்’ என்ற பாடப் பகுதியில் உள்ள பல்வேறு தரவுகளைத் தெரிந்து கொண்டீர்கள். இதனால்,

- நாட்டுப்புறவியல் என்ற இலக்கியத்தின் தன்மைகளையும்,

- நாட்டுப்புறத்தார் – நாட்டார் – சொல்லாட்சியின் விளக்கத்தையும்,

- நாட்டுப்புற இலக்கியப் படைப்பின் பல்வேறு கூறுகளையும்,

- நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கம் எங்ஙனம் எழுத்திலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது என்பதையும் புரிந்து கொண்டீர்கள்.

தன்மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 2

## A06112 தமிழக நாட்டுப்புறவியல் வரலாறு

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

நாட்டுப்புறவியல் என்ற இலக்கிய வடிவம் தமிழகத்தில் எங்ஙனம் விளங்கியது என்பதைக் கூறுவது இப்பாடம். இதில் இந்த இலக்கியத்தின் வகைகள், அவற்றின் தோற்றம், வளர்ச்சி என்ற முறையில் கருத்துகளைக் கூறும் பொழுது வரலாறு என்பது தெளிவாகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படித்து முடிக்கும்போது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறுவீர்கள்.

- நாட்டுப்புறவியல் இலக்கியத்தின் சிறப்பினைத் தெரிந்து கொள்ள முடியும்.
- இலக்கியத்தின் நிலைத்த தன்மைக்கு அதன் தோற்றமும் வளர்ச்சியும் முக்கியமானவை. இதனை இப்பாடம் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.
- உலகளாவிய நிலையில் தமிழக நாட்டுப்புறவியலின் இடம் எத்தகைய நிலையில் உள்ளது என்பதை இதனைப் படித்தால் புரிந்து கொள்ள முடியும்.

# பாட அமைப்பு

2.0 பாட முன்னுரை
2.1 நாட்டுப்புறவியல் – வரலாறு
2.2 நாட்டுப்புறவியல் – பகுப்பும் பண்பும்
2.3 நாட்டுப்புறவியல் – பாடல்களும் கதைகளும்
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
2.4 நாட்டுப்புறவியல் – பதிவுகள்
2.5 நாட்டுப்புறவியல் – வளர்ச்சி
2.6 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள்- II

## 2.0 பாட முன்னுரை

கடந்த காலத்தின் நீட்சி நிகழ்காலம். நிகழ்காலத்தின் நீட்சி எதிர்காலம். இத்தகு மூன்று காலங்களிலும் நிற்கும் சிறப்பினை உடைய இலக்கியம் வந்த வழியினைக் கூறுவது இலக்கிய வரலாறு. இங்குத் தமிழக நாட்டுப்புறவியல் என்ற இலக்கிய வடிவத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் கால அடிப்படையிலும் (Periodical Method) ஆராய்ச்சி குறித்த சிந்தனைகளைப் புலப்பாட்டு நெறியினாலும் (Rhetoric Method) அறிந்து கொள்வதாக அமைவது இப்பாடப்பகுதி.

## 2.1 நாட்டுப்புறவியல் - வரலாறு

நாட்டுப்புற இலக்கியத்தை, எழுத்து இலக்கிய வடிவத்தின் முதல்நிலை என்றும், அடித்தள நிலை என்றும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்தகு நிலையில் நாட்டுப்புற இலக்கியம் என்பது அழகிய ஒரு நுண்கலை (Fine Art) என்று குறிப்பிட வேண்டும். பொதுவாகக் கலையின் சுவையினைக் கண்ணால் கண்டும், காதால் கேட்டும் அனுபவிக்க இயலும். ஆனால் இலக்கியத்தின் சுவையினைக் கருத்தால் மட்டுமே உணர முடியும். எனவே இலக்கியத்தின் வரலாற்றை அறிய வேண்டும் என்று எண்ணும் போது, அந்த இலக்கியத்தின் படைப்பாளனோடும் அந்த நூலோடும் சேர்த்தே சிந்திக்க வேண்டியுள்ளது. இவ்வாறு வரலாற்று ஆய்வில் படைப்பாளனையும் (Author) படைப்பையும் (Text) ஒருசேர இணைத்தே பார்க்க வேண்டியுள்ளது.

"தலைமை வாய்ந்த இலக்கிய வரலாறுகள் பலவும் நாகரிகப் பண்பாட்டு வரலாறுகளாகவோ அல்லது திறனாய்வுக் கட்டுரைகளின் தொகுதிகளாகவோ உள்ளன" என்று ரெனி வெல்லாக் தமது நூலில் கூறுவது குறிப்பிடத்தக்கது.

### 2.1.1 உலகளாவிய நிலையில் நாட்டுப்புறவியல்

மானுடம் தொடங்கிய காலம் முதலே நாட்டுப்புற வழக்காறுகள் தோன்றிவிட்டன. மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் இவற்றின் அடிப்படையில் எழுந்த படைப்புத்திறன் மிக்க வழக்காறுகள் இலக்கியமாகப் பரிணமித்தன. அவை, 1) பொது மக்களைச் சார்ந்த மரபுமுறைகள் (Popular Antiquities) என்றும், 2) பொது மக்கள் இலக்கியம் (Popular Literature) என்றும், 3) பொதுப் புராணவியல் (Common Mythology) என்ற பெயர்களிலும் வழங்கப்பட்டன.

ஆனால் வில்லியம் ஜான் தாமஸ் என்னும் ஆங்கிலேயர் கி.பி.1846ஆம் ஆண்டு நாட்டுப்புறவியலைக் குறிக்கும் 'Folklore' என்ற சொல்லை உருவாக்கி உலகுக்கு வழங்கினார். இச்சொல்லே பெருவாரியாக எல்லா நாடுகளிலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு, மனிதனின் சடங்கு முறைகள், நம்பிக்கைகள், கதைப் பாடல்கள், பழமொழி, நாட்டுப்புறப் பாடல் என வழக்காறுகள் அனைத்துமே நாட்டுப்புறவியல் இலக்கியம் என்பதாக அவர் குறிப்பிட்டார். மேலும், நாட்டுப்புறவியல் என்பது பழங்காலப் பண்பாட்டின் எச்சம் (Cultural Survival) என்பது அவர் கருத்தாகும். உலக நாடுகளில் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரெஞ்சு, ஜெர்மன், கனடா, மெக்ஸிகோ, ஜப்பான் ஆகிய நாடுகள் இவ்விலக்கியத்தின் பல்வேறு கூறுகளை, தத்தம் மண்ணின் மணம் வீசத் திறனாய்வு செய்து உலகளாவிய அளவில் நாட்டுப்புற இலக்கியத்தின் சிறப்பினை உணரும்படி செய்தன.

### 2.1.2 இந்திய அளவில் நாட்டுப்புறவியல்

மனித இனம் எவ்வளவு பழமை வாய்ந்ததோ, அந்த அளவு பழமை மிக்கது நாட்டுப்புறவியலாகும். இதில் இந்திய அளவில் எத்தகு நிலையில் நாட்டுப்புறவியல் விளங்கியது என்பதைக் காணும் போது, இந்தியாவில் நாட்டுப்புறவியல் துறை தனித்ததொரு துறையாக வளரவில்லை. ஆனால் இந்தியவியலின் (Indology) ஒரு பகுதியாகவே கருதப்பட்டது என்பது அறிஞர் கருத்தாகும். இந்திய நாட்டின் பாரம்பரியத்தைக் கூறும் வேதத்தில், குறிப்பாக ரிக் வேதத்தில் பழமையான நாட்டுப்புறப் பாடலும் கதைப்பாடலும் காணப்படுகின்றன. பஞ்சதந்திரக் கதை இந்திய நாட்டுப்புற இலக்கியத்தின் தலைமை இடத்தைப் பெற்றதாகும். புத்த ஜாதகக் கதைகள் நீதிநெறிக்

கதைகளாகும்.

இந்திய நாட்டின் காஷ்மீர்ப் பகுதி, இமாசலப் பிரதேசம், பஞ்சாப், அரியானா, மேற்கு வங்காளம், பீகார், அசாம், ஒரிசா, மேகாலயா, மணிப்பூர், அருணாசலப் பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத், ஆந்திரா, கர்நாடகா, கேரளம் என்று அனைத்துப் பகுதிகளிலும் நாட்டுப்புறக் கதைகளும், நாட்டுப்புறப் பாடல்களும் காணப்பட்டன என்பதை இந்திய நாட்டுப்புறவியல் வரலாற்றினைப் படிக்கும் பொழுது அறிய முடிகிறது.

### 2.1.3 தமிழக அளவில் நாட்டுப்புறவியல்

தமிழக நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை முறைகளை, நாகரிகத்தை உள்ளது உள்ளபடி எடுத்துரைக்கும் இலக்கியம் நாட்டுப்புறவியல் இலக்கியமாகும். இவற்றை நாட்டுப்புற மக்களின் மரபு வழிப்பட்ட படைப்புகள் (Traditional Creations) எனலாம் என்று அறிஞர் கூறுகின்றனர்.

வட வேங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்

என்பதால் வேங்கடம் முதல் குமரி வரை உள்ள தமிழ்மொழி பேசும் தமிழக மக்களின் வாழ்வியல் முறைகளை நாட்டுப்புற வழக்காறுகள் எடுத்துரைக்கின்றன.

இவ்விலக்கியத்தின் தோற்றத்தினையும் வளர்ச்சியையும் விளக்குவது வரலாறு ஆகும். இதனைக் காலப் பகுப்பின் வாயிலாக வரன்முறைப் படுத்தலாம்.

## 2.2 நாட்டுப்புறவியல் - பகுப்பும் பண்பும்

இந்திய அளவிலும், தமிழகத்திலும் நாட்டுப்புறவியலை, கால அடிப்படையில் பகுத்துள்ளனர். நாட்டுப்புற இலக்கியத்திலும் கலைகளிலும் காணப்படும் பொதுப்பண்புகளையும் அடையாளம் காட்டியுள்ளனர்.

### 2.2.1 காலப் பகுப்பு

இலக்கியம் காலத்தின் – சமுதாயத்தின் – கண்ணாடி என்றால், அவ்விலக்கியத்தின் நிலைத்த திறத்தினைக் காலப் பகுப்பின் வழி வகைப்பாடு செய்து தெளிவு பெற முடியும். இவ்வாறு மனித வாழ்வு காலத்தின் வழிச் செயல்படுகிறது என்றால் ஏற்க இயலும்.

- இந்திய நாட்டுப்புறவியல்

இந்திய நாட்டுப்புறவியல் வழக்காறுகளை அறிஞர்கள்

1) பண்டைக்காலம் (Ancient Period)

2) தற்காலத்தின் தொடக்கக் காலம் (Early Modern Period)

3) தற்காலம் (Modern Period)

என்று முக்காலங்களாகப் பகுத்து, இந்திய நாட்டு எல்லைக்குள் உள்ள மாநிலங்களின் படைப்புகளைத் திறனாய்வு செய்கின்றனர்.

- தமிழக நாட்டுப்புறவியல்

இந்திய நாட்டுப்புறவியல் வழக்காறுகளை அறிஞர்கள்

1) சேகரிப்புக் காலம் (1871 – 1959)

2) ஆய்வின் தொடக்கக் காலம் (1960 – 1969)

3) ஆய்வுகளின் வளர்ச்சிக் காலம் (1970)

என்று பகுத்து ஆராய்ச்சி செய்கின்றனர்.

### 2.2.2 பண்புகள்

நாட்டுப்புற வழக்காறு என்பது நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையில் இடம்பெற்ற இலக்கியம், கலைகள் என்பனவாகும். இவ்விரு பகுதிகளும் சில முக்கியமான பண்புகளைக் கொண்டு விளங்குகின்றன. அவையாவன:

1) நிலைத்த தன்மை உடையன

2) நிலையற்ற தன்மையும் உண்டு

3) இடையிலே நிறுத்தி வைக்கப்படுதலுண்டு

4) தள்ளி வைத்தல் என்பது உண்டு

5) மக்கள் விரும்பும் பண்பின

6) சுவையும், அழகியல் கூறும் கொண்டவை

7) சமூக அடையாளங்களைக் கொண்டவை

8) பார்வையாளன், படிப்பாளரின் மாற்றத்தையும் ஏற்கும் பண்பின.

இவ்வாறு நாட்டுப்புறவியல் என்பது மக்களின் படைப்பாக, மக்களுக்குச் சுவையூட்டும் படைப்பாக, மக்களின் வழியே நிகழ்த்தும் படைப்பாக விளங்கி வருகின்றது. இவ்விலக்கியத்தின் சிறப்பினைச் சான்றுகள் வழி அறியலாம்.

## 2.3 நாட்டுப்புறவியல் - பாடல்களும் கதைகளும்

நாட்டுப்புறவியலில் மக்களிடையே செல்வாக்குப் பெற்ற பாடல்கள் பல உள்ளன. அதைப்போல் மக்களிடம் மிகவும் அறிமுகமான கதைகளும் காணப்படுகின்றன.

### 2.3.1 பாடல்கள்

இம்மக்களின் வாழ்வில் தெய்வத்திற்கு முக்கிய இடமுண்டு. இதில் பிள்ளையார் மீது பக்தி கொண்டு பாடும் பாடலில், அவருக்குப் படைக்கும் பல்வேறு வகையான பணியாரமும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

மாட்டுக் கொளப் படையில்
மாவுருண்டை ஆயிரமாம்
எருதுக் கொளப் படையில்
எள்ளுருண்டை ஆயிரமாம்
ஆட்டுக் கொளப் படையில்
அதிரசம் ஆயிரமாம்
கண்ணுக் கொளப் படையில்
கடலுருண்டை ஆயிரமாம்
குட்டிக் கொளப் படையில்
கொழுக்கட்டை ஆயிரமாம்
பண்ணிக் கொளப் படையில்
பணியாரம் ஆயிரமாம்
இத்தனையும் ஒப்பதமாம் – எங்க
சப்பாணிப் பிள்ளையாருக்கு

(நாட்டுப்பாடல் – நா.வானமாமலை)

என்ற நாட்டுப்புறப் பாடல் வழங்கும் தகவல்கள் பலவாகும்.

இப்பாடலில் எதுகை, மோனையுடன், பேச்சு வழக்குச் சொற்களைக் கொண்டு, பிள்ளையார்க்குப் பிடித்தமான பணியார வகைகளை அடுக்கிச் சொல்லிச் செல்லும் பாங்கு பாராட்டுதற்குரியது. வாய்மொழி இலக்கியம் என்பதால் மனத்தில் பதிவு செய்து கொள்வதற்கு ஏற்ற முறையில் எளிய சொற்களால் இனிமை விளங்கப் பாடல் வரிகளைப் படைத்துள்ளனர்.

### 2.3.2 கதைகள்

நாட்டுப்புறவியலில் நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறக் கதைகள் இரண்டனுக்கும் மிக முக்கியப் பங்குண்டு. எந்த ஒரு கருத்தையும் பாடல் வாயிலாகவோ கதை வாயிலாகவோ சொல்லுதல் என்பது அன்று தொட்டு இன்று வரை நின்று நிலவிவரும் பண்பு ஆகும்.

நாட்டுப்புறக் கதைகளை அறிஞர்கள் அவரவர் தம் அடிக்கருத்தியல் (Theme) சிந்தனைக்கு ஏற்பப் பகுத்துக் கூறுகின்றனர். இதில் பிரிட்டானிகா கலைக் களஞ்சியம் (Encyclopedia Britannica Vol.9 P519) கீழ்க்காணும் வகையில் நாட்டுப்புறவியல் கதைகளைப்

பகுத்துக் கூறுகிறது.

1) புராணக் கதை (Myth)

2) பழங்கதை (Legend)

3) பொதுமக்கள் கதை (Popular Tale)

எடுத்துக்காட்டாக, நாள்தோறும் மக்களின் வாழ்வில் இடம்பெறும் கீழ்க்காணும் பழங்கதை ஒன்றினைத் தெரிந்து கொள்ளலாம்.

ஏழை விறகு வெட்டி காட்டுக்குச் செல்கிறான். விறகு வெட்டும் போது அவனது கோடரி கைதவறி ஆழமான குளத்தினுள் விழுந்து விடுகிறது. வருந்தி அழுகிறான். அவன் முன் ஒரு தேவதை தோன்றுகிறாள். ஒரு தங்கக்கோடரியை எடுத்து வந்து ”இதுவா உன்னுடையது?” என்று கேட்கிறாள். ”இல்லை” என்கிறான். அடுத்து வெள்ளிக் கோடரியை எடுத்து வந்து காட்டுகிறாள். ”இதுவும் இல்லை” என்கிறான். இறுதியில், அவனது இரும்புக் கோடரியை எடுத்து வந்ததும், ”இதுதான் என்னுடையது” என்கிறான். அவனது நேர்மையைப் பாராட்டி மூன்று கோடரிகளையுமே அவனுக்குக் கொடுத்து விடுகிறாள். அவன் மகிழ்வோடு வீடு திரும்புகிறான்.

இவ்வாறு வாழ்வின் அன்றாடப் பிரச்சனையே கதையின் கருவாக விளங்குகிறது. மனிதனின் நேர்மை உணர்வும், அது பாராட்டப்படும் பொழுது ஏற்படும் மகிழ்வும் பேசப்படுகின்றன. நாட்டுப்புறவியல் கதைகள் அறக்கருத்தை அறியவும் சமுதாயத்தை அறியவும் பயன்பட்டன. நாட்டுப்புறவியல் வழக்காறுகள் அவர்தம் வாழ்வோடு தொடர்பு கொண்டு வாழும் சிறப்பினையும் பெற்றன.

தன்மதிப்பீடு : வினாக்கள் – I

## 2.4 நாட்டுப்புறவியல் - பதிவுகள்

நாட்டுப்புற இலக்கியமானது காலம் காலமாக மக்களின் வாய்மொழி வழியாகவே பரப்பப்பட்டு வந்துள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. அவ்வாறு பரப்பப்பட்டதன் வழியே அவ்விலக்கியமானது ஒருவரிடமிருந்து மற்றவர்க்கும், ஒரு சமூகத்திலிருந்து மற்றொரு சமூகத்திற்கும், ஒரு பண்பாட்டிலிருந்து மற்றொரு பண்பாட்டிற்கும் பதிவு செய்யப்பட்டது. அவ்வாறே இன்றும் பல வழக்காறுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. வாய்மொழி வழியாகப் பதிவு செய்யப்படுகின்ற போது நாட்டுப்புற இலக்கியங்களினுடைய முக்கியமான பண்புகளில் ஒன்றான திரிபு வடிவம் என்பது ஏற்படுகின்றது.

இன்றைய காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நாட்டுப்புற இலக்கியங்களின் தேவை கருதி அவற்றினைப் பதிவு செய்வதில் சில படிநிலைகள் ஏற்பட்டுள்ளன. இப்படிநிலைகளில் குறிப்பாக நாட்டுப்புற இலக்கியங்கள் எழுத்தின் மூலமாகப் பதிவு செய்யப்படுகின்ற போது, மேற்குறித்த திரிபு வடிவம் என்பது நீங்கி, நிலைத்ததொரு வடிவம் ஏற்படுகின்றது. எழுத்தின் மூலமாகப் பதிவு செய்யப்படுவதனால் பதிவு செய்யப்படுகின்ற நாட்டுப்புற இலக்கியத்தின் பரவல் தன்மை விரிவடைகின்றது.

### 2.4.1 நூல்கள்

நாட்டுப்புறவியலைப் பற்றிய நூல்கள் பல வந்துள்ளன. அவற்றுள் குறிப்பாக நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறக் கதைப் பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள், நாட்டுப்புற நடனங்கள் போன்றவற்றிற்கு அதிகமான, தெளிவான நூல்கள் வந்துள்ளன எனக் குறிப்பிட்டுச் சொல்லலாம். தமிழ் நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றி மு.அருணாசலம் எழுதிய காற்றில் வந்த கவிதை என்னும் நூலே 1943இல் முதலில் வெளிவந்தது எனலாம். 1943இல் வெளிவந்த இந்நூலுக்குப் பிறகு இன்று வரை(1975) சுமார் 30 நூல்கள் வந்துள்ளன என்று சு.சண்முகசுந்தரம் தம்முடைய நாட்டுப்புற இயல் என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார். தஞ்சைத் asதமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆறு.இராமநாதன் தொகுத்து வெளியிட்டுள்ள நாட்டுப்புறப் பாடல் நூல் சிறப்பானது. இத்தொகுப்பில் ஒவ்வொரு வட்டாரத்திற்கெனப் பகுதி பிரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழில் முதன்முதலில் 1869இல் கதைப்பாடல் வெளியிடப் பட்டதாகக் குறிப்பிடுவர். இதில், ஏ.என்.பெருமாள் எழுதிய கதைப் பாடல் பற்றிய நூல் (1987) குறிப்பிடத்தக்கது. இக்கதைப் பாடல்களுள் நல்லதங்காள் கதை, மதுரைவீரன் கதை போன்ற கதைப் பாடல்கள் பற்றிய ஆய்வுகளும், நூல்களும் தொடர்ந்து வெளிவருகின்றன. இவ்வாறாக நாட்டுப்புற இலக்கியம் தொடர்பான பல சிறந்த நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் மு.வை.அரவிந்தனின் நாட்டுப்புறப் பாடல்கள், செ.அன்னகாமுவின் ஏட்டில் எழுதாக் கவிதைகள், ஆறு.இராமநாதனின் நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், நாட்டுப்புறக் கதைகள், தமிழில் புதிர்கள்-ஓர் ஆய்வு, அ.நா.பெருமாளின் நாட்டார் கதைகள், ச.வே.சுப்ரமணியத்தின் தமிழில் விடுகதைகள் போன்று பல நூல்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

### 2.4.2 இதழ்கள்

நாட்டுப்புறவியல் துறையின் வளர்ச்சிக்கு இதழ்களின் பங்கு குறிப்பிடத் தகுந்தது. தொடக்க நிலையில் தாமரை, கலைமகள், மஞ்சரி போன்ற இதழ்களில் நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழி போன்றவை இடம் பெற்றுள்ளன. இவை

தவிர அமுதசுரபி, ஆனந்த போதினி, ஆனந்தவிகடன், கல்கி, சுதேசமித்திரன், தீபம் போன்ற இதழ்களிலும் இடம் பெற்றுள்ளன. மேலும், நாட்டுப்புறவியல் துறை சார்ந்தே வெளிவந்த, வெளிவரக் கூடிய சில இதழ்களை நாம் இங்குக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நா.வானமாமலை அவர்களால் பாளையங்கோட்டையில் 1964இல் ஆராய்ச்சி என்ற இதழ் தொடங்கப்பட்டு, அதில் நாட்டுப்புறவியல் மற்றும் நாட்டுப்புறவியலோடு தொடர்புடைய பிற துறைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகத்தின் காலாண்டு இதழான நாட்டுப்புறவியல் என்ற இதழ் 1983இல் வெளிவந்தது. 1987இல் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுக் கழக இதழான நாட்டார் வழக்காற்றியல் என்ற இதழ் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

### 2.4.3 மக்கள் தொடர்புச் சாதனங்கள்

மக்கள் தொடர்புச் சாதனங்களாகக் குறிப்பிடப்படுகின்ற வானொலி, தொலைக்காட்சி போன்றவை நாட்டுப்புறவியலுக்கு மிகவும் பயனுள்ளவையாக விளங்குகின்றன. வானொலியும், தொலைக்காட்சியும் கற்றவர்களிடம் மட்டுமல்லாது கல்லாத பாமரர்களிடமும் பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளன. இம் மக்கள் தொடர்புச் சாதனங்கள் நாட்டுப்புறவியலுக்குப் பயனுள்ளவையாக அமைகின்றன என்பதற்குப் பல சான்றுகள் இருப்பினும் இங்கு நாம் ஒரு சான்றினைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். பேரா.அ.மு.பரமசிவானந்தம் தமது வாய்மொழி இலக்கியம் என்ற நூலை எழுதுவதற்கு வானொலியின் ஊக்கமே காரணம் என்று கூறுகின்றார். எனவே வானொலியின் வழி நாம் இதன் பயனை உணர்ந்து கொள்ள முடிகின்றது. மேலும், திரு.செ.அன்னகாமு திருச்சி வானொலி நிலையத்தில் தம்முடைய ஏட்டில் எழுதாக் கவிதைகள் ஒலிபரப்பப்பட்டு ஒலிப்பதிவும் செய்யப்பட்டுள்ளது என்று கூறுவதன் மூலம் வானொலி நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களுக்கும் பயனுள்ளதாக விளங்குவதை அறிய முடிகின்றது.

இன்றளவில் குறிப்பாக மதுரை, திருச்சி, தூத்துக்குடி போன்ற வானொலி நிலையங்கள் நாள்தோறும் சில குறிப்பிட்ட நேரங்களில் நாட்டுப்புற நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்து வருகின்றன. தொலைக்காட்சி நிறுவனங்கள் பெரும்பாலும் தமிழர் திருநாள் போன்ற விழா நாள்களில் நாட்டுப்புற நிகழ்ச்சிகளையும் நாட்டுப்புறம் தொடர்பான விளம்பரங்களையுமே ஒளிபரப்பி வருகின்றன.

### 2.4.4 கல்வி நிறுவனங்கள்

எந்த ஒரு படைப்பும் நிலையான தன்மையினைப் பெறவேண்டுமானால் அப்படைப்பு நாள்தோறும் மக்களின் பயன்பாட்டில் இடம்பெற்றுக் கொண்டே இருக்கவேண்டும். அப்பொழுது தான் அப்படைப்பு மக்களால் மறக்கப்படாமல் வாழும். அதே சமயம் மறைக்கப்படாமலும் போற்றப்படும். இவ்வகையில் நாட்டுப்புறவியல் நிலைப்பாட்டினைப் பார்க்கும்போது இவ்விலக்கியம் காலத்தின் தேவைக்கு ஏற்பத் தனது தனித்தன்மையை இழக்காமல் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது.

குறிப்பாகக் கல்வி நிறுவனங்களும், ஆய்வுகளும் நாட்டுப்புற இலக்கியத்தின் நுணுக்கங்களைக் கண்டறிவதில் மிகுந்த முனைப்போடு செயல்பட்டு வருகின்றன. எனவே மக்கள் வழக்காற்று இலக்கியம் அறிவு சார்ந்த மக்களின் சிந்தனைக்கு உரியதாக நிலைத்த பதிவினைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## 2.5 நாட்டுப்புறவியல் - வளர்ச்சி

நாட்டுப்புறவியல் இன்று பல்வேறு நிலையில் வளர்ந்து கொண்டு வருகின்றது. குறிப்பாக, நாட்டுப்புறவியல் தொடர்பாகப் பல கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. பல ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்றன. பிற துறைகளுடன் தொடர்பு படுத்தி ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையையும் எய்தியுள்ளது.

### 2.5.1 கருத்தரங்குகள்

நாட்டுப்புறவியல் தொடர்பான கருத்துக்களைப் பலர் அறிந்து கொள்ளவும், அக்கருத்துகளை வீச்சுடன் ஆராய்ந்து தெளிவு பெறவும் 'ஆய்வுக் களம்' என்பது முக்கியமான ஒன்று. நீண்ட நெடுங்காலமாக இது போன்ற கருத்தரங்குகள் எல்லாத் துறைகளிலும் நடைபெற்று, கருத்தரங்குகளில் விவாதிக்கக் கூடிய கருத்துகள் நூல்களாக வெளிவருவது மிகவும் பயன் விளைவிக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

அத்தகைய கருத்தரங்குகளின் முயற்சியே நாட்டுப்புறவியல் துறையின் வளர்ச்சிக்கு அடிகோலியது. அத்தகைய முயற்சிகள் இத்துறையில் தற்போது முழு முனைப்புடன் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் குறிப்பாக, தூய சவேரியர் கல்லூரியின் நாட்டுப்புறவியல் துறை, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை போன்றவை பல கருத்தரங்குகளை நடத்தி வருகின்றன. நாட்டுப்புறவியல் துறையோடு இணைந்துள்ள பல்வேறு துறைகளுடன் தொடர்பு கொண்டு இத்துறையின் வளர்ச்சியில் அக்கறை காட்டி வருகின்றன.

### 2.5.2 ஆய்வுகள்

நாட்டுப்புறவியல் ஆய்வினைப் பொதுவாகப் பரிணாம வரலாற்றாராய்ச்சி, குறிப்பிட்ட கால ஆராய்ச்சி என இருவகையாக அறிஞர்கள் வகைப்படுத்துவர். தொடக்க நிலையில் நாட்டுப்புறவியல் ஆய்வானது நாட்டுப்புற இலக்கியங்களை வரையறை செய்தல், வகைப்படுத்தல், அவற்றின் தோற்றம், அவற்றின் பண்பும் பயனும் காணுதல் ஆகிய முறைகளிலே ஆய்வு செய்வதாக அமைந்திருந்தது. நாட்டுப்புறவியல் துறையின் தற்போதைய வளர்ச்சி நிலையில் ஆய்வானது கோட்பாட்டோடு பொருத்திப் பார்க்கும் முயற்சியினை எட்டியுள்ளது. அவற்றுள் அமைப்பியல் ஆய்வு, செயல்திற ஆய்வு, உளவியல் ஆய்வு, வரலாற்றுமுறை ஆய்வு போன்ற ஆய்வு முறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இன்றைய நிலையில் பொதுவாக அனைத்துப் பல்கலைக் கழகங்களும் நாட்டுப்புறவியல் தொடர்பான ஆய்விற்கு ஆதரவு தந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### 2.5.3 பிறதுறைத் தொடர்பு

நாட்டுப்புறவியல் வழக்காறுகள் ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு தனித்தனித் துறையாகச் சிந்தித்து எழுதும் அளவுக்கு அளவில்லாக் கருத்துக்களையும், தரவுகளையும் கொண்டு விளங்குகின்றன. ஒவ்வொரு பகுதியையும் உளவியல், மொழியியல், மானிடவியல், சமுதாயவியல் என்று பிற துறைகளோடு இணைத்துச் சிந்திக்கும் பொழுது எதிர்காலத்தில் எல்லாத் துறைகளிலும் நாட்டுப்புறவியல் ஓரிடத்தைப் பெற்றுவிடும். மேலும் அதன் வளமையில் அந்தந்தத் துறைகளில் தனக்கெனச் சிறந்த பங்களிப்பினைச் செய்து வளப்படுத்திக் கொள்ளமுடியும். இவ்வாறு நாட்டுப்புறவியலின் சிறப்புகள் வளப்பம் மிக்கவைகளாக உள்ளன.

## 2.6 தொகுப்புரை

நாட்டுப்புறவியல் கற்கும் நண்பர்களே! இதுவரை நாட்டுப்புறவியல் வரலாற்றினை

1) உலக அளவில்

2) இந்திய அளவில்

3) தமிழக அளவில்

என்று தெரிந்து கொண்டீர்கள். இதனால் தமிழக அளவில் இதன் சிறப்பைப் புரிந்து கொள்ள முடிந்தது.

நாட்டுப்புறவியல் தோற்றமும் வளர்ச்சியும் காலப் பகுப்பின் வாயிலாகத் தெளிவாக அறிந்து இருப்பீர்கள்.,

நாட்டுப்புறவியலின் பதிவுகளின் மூலம் நாட்டுப்புறவியலின் வழக்காற்றின் நிலைப்பாடு தெரிந்து கொள்ளமுடியும்.

எதிர்காலத்தில் எவ்வாறு நாட்டுப்புறவியல் விளங்க வேண்டும் என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீங்கள் நாட்டுப்புற இலக்கியத்தின் வரலாற்றினை அறிந்து கொண்டீர்கள். இல்லையா?

தன்மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 3

# A06113 நாட்டுப்புறவியல் இலக்கிய வகைமைப்பாடுகள்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

நாட்டுப்புற இலக்கியத்தை ஒட்டு மொத்தமாகப் படிக்கும் பொழுது மிகப் பரந்து பட்டதாகத் தோன்றும். எனவே இவ்விலக்கியத்தை ஏதாவது ஒரு கருத்தியல் (ideology) அடிப்படையில் பகுத்தும் தொகுத்தும் படிக்கும் பொழுது சிறப்பாகப் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறு இந்தப் பாடப்பகுதி நாட்டுப்புற இலக்கியத்தை வகைமைப் படுத்தி விளக்கும் பணியைச் செய்கிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படித்து முடிக்கும்போது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறுவீர்கள்.

- நாட்டுப்புற இலக்கியத்தின் வகைமை – வகை இவ்விரண்டிற்குமான வேறுபாட்டை உணரலாம்.
- நாட்டுப்புற இலக்கியத்தின் வகைமைகள் எவை? அவற்றுள் வகைகள் எவை? எவை? என்று அறிந்து கொள்ளலம்.
- ஒவ்வொரு பிரிவின் சிறப்புகளையும் புரிந்து கொள்ள முடியும்.
- வகைமை – வகைப்படுத்தலுக்கான காரணிகளையும் அணுகுமுறைகளையும் அறிந்து கொள்ள முடியும்.
- நாட்டுப்புறவியல் இலக்கியத்தின் தனித்தன்மைகளைப் புரிந்து கொள்ள இயலும்.
- நாட்டுப்புறவியல் இலக்கிய ஆய்வில் முனைவதற்கு இப்பாடப்பகுதி உறுதுணை செய்யும்

# பாட அமைப்பு

3.0 பாட முன்னுரை
3.1 நாட்டுப்புறவியல் – வகைமைப்பாடு
3.2 நாட்டுப்புற இலக்கியம்
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
3.3 நாட்டுப்புறக் கலைகள்
3.4 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 3.0 பாட முன்னுரை

மக்களால் காலங் காலமாக மரபு வழியாக உண்டாக்கப்பட்ட ஆக்கங்கள் (Creations)தான் நாட்டுப்புறவியல் வழக்காறு என்பது. மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த இந்த நாட்டுப்புற வழக்காறுகளைப் பகுத்துக் காணும் முயற்சி, அதனைப் பயில்பவர்கள் தெளிவினைப் பெறுவதற்காகத் தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## 3.1 நாட்டுப்புறவியல் - வகைமைப்பாடு

நாட்டுப்புறவியல் துறையில் வகைமைப்பாடு என்பது அண்மைக் காலத்தில்தான் வளர்ந்தது. வகைப்பாடு என்று குறிக்காமல் வகைமைப்பாடு என்று குறிப்பதனால் வகைமைப்பாட்டிற்குள் வகைப்பாடு அடங்கும் என்று கொள்க.

- வகைமை

வகைமை என்பது உள்ளடக்கத்தாலும், உருவத்தாலும், வழங்கப்படும் சூழலாலும் தனித்த இயல்புகளைக் கொண்ட வழக்காற்றுத் தொகுதியேயாகும். தனித்த இயல்பினை வேறுபடுத்துவதன் மூலமாகவும் வகைமை என்பதனை அறியமுடிகின்றது. வகைமை என்பது உருவாக்கப் படுவதில்லை, இயல்பாகவே மரபில் இருக்கின்றது.

- வகைமையும் வகைப்பாடும்

வகைமைப்பாட்டிற்குள் வகைப்பாடு என்பது அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளோம். அதனைச் சான்றுடன் விளக்குகின்ற போது வகைமை என்பதிற்கும் வகை என்பதிற்குமான வேறுபாடு சற்றுத் தெளிவாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. அதாவது, நாட்டுப்புற வழக்காறுகளில் ‘கதை’ என்பதனை வகைமையாகக் கொள்ளலாம். இந்த நாட்டுப்புறக் கதை வகைமைக்குள் புராணக் கதைகள், பழமரபுக் கதைகள், தேவதைக் கதைகள், வேடிக்கைக் கதைகள் போன்றவற்றினை அவற்றிற்கான வகைகளாகச் சுட்டலாம்.

### 3.1.1 வகைமைப்பாடு – வகைகள்

நாட்டுப்புற வழக்காறுகளைப் பொதுவாக வகைமைப் படுத்தும் போது இரண்டு வகையாகப் பிரிப்பர். அவை, 1) இனவகைமை, 2) ஆய்வு வகைமை என்பனவாகும். இவற்றுள் இனவகைமை என்பது ஒரு வழக்காறு. அவ்வழக்காற்றினை வழங்குகின்ற இன மக்களால் எப்பெயரால் சுட்டி அழைக்கப்படுகின்றதோ, அப்பெயரினாலேயே வகைமைப்படுத்துவதற்கு ‘இனவகைமை’ என்று பெயர். ‘ஆய்வு வகைமை’ என்பது ஆய்வாளர்களால் ஆய்வு வசதிக்காக ஏற்படுத்தப்பட்ட வகைமை ஆகும். இந்த ஆய்வு வகைமையே நாட்டுப்புறவியல் துறைசார்ந்த ஆய்வுகளிலும், ஆய்வாளர்களாலும் பெரும்பாலும் சுட்டப் படுகின்றது என்பது இங்குக் குறிக்கத்தக்கது. பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்படுகிற இந்த ஆய்வு வகைமை என்பதும் மரபோடு அதாவது இன வகைமையோடு ஒத்துப் போகக் கூடியதாக இருந்தால்தான் சரியானதாக அமையும்.

- இயல்புகள்

மேற்குறிப்பிட்ட வகைமைக்கான இயல்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். இன வகைமை என்பது வட்டாரம் சார்ந்து அமைவது, சிக்கலானது, தெளிவற்றது, நாட்டுப்புற மக்களின் அறிவு எல்லைக்கு உட்பட்டது. ஆய்வு வகைமை என்பது பாதுவானது, சிக்கலற்றது, ஆய்வாளர்களால் உருவாக்கப்படக் கூடியது, தெளிவானது, அறிவியல் சார்ந்தது. இவற்றை இந்த இரண்டு வகைமைகளுக்கான இயல்புகளாகக் குறிப்பிடலாம்.

- பிரிவுகள்

நாட்டுப்புறவியல் வகைமையினை எளிமையாகப் புரிந்து கொள்வதற்கு, பொதுவாக நாட்டுப்புறவியலினை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அவை,

1) நாட்டுப்புற இலக்கியம் 2) நாட்டுப்புறக் கலைகள்

என்பனவாகும். இந்த இரு பெரும் வகைமைப்பாட்டிற்குள் பலவகையான வகைப்பாடுகளும் பிரிக்கப்பட்டுள்ளன.

## 3.2 நாட்டுப்புற இலக்கியம்

“நாட்டுப்புற இலக்கியத்தின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பதிந்துள்ளன. நாட்டுப்புற இலக்கியமானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ அதைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும்” என்கிறார் முனைவர் சு.சக்திவேல் (நாட்டுப்புற இயல் ஆய்வு : பக்கம் : 22). எனவே நாட்டுப்புற இலக்கியம் மண்ணின் மணத்தைப் பரப்பும் சிறப்பினைக் கொண்டது. நாட்டுப்புற இலக்கியம் என்ற வகைமைப்பாட்டிற்குப் பல வகையினைக் காண முடியும். அவை,

1) நாட்டுப்புறப் பாடல்கள்

2) நாட்டுப்புறக் கதைகள்

3) நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

4) நாட்டுப்புறப் பழமொழிகள்

5) விடுகதைகள்

6) புராணங்கள்

முதலியனவாகும். இனி இவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

### 3.2.1 நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல்கள் முன்னைப் பழமைக்கும் பழமை வாய்ந்தவை. பின்னைப் புதுமைக்கும் புதுமையாகவும் விளங்குகின்றன. இப்பாடல்கள் இனியவை, எளியவை, எழுதப்படாதவை, வாயில் பிறந்து, செவிகளில் நிறைந்து உள்ளத்தில் பதிவு பெறுபவை. இப்பாடல்கள் என்று பிறந்தவை, எவரால் பாடப்பெற்றவை என்று உறுதியாக அறுதியிட்டுச் சொல்ல முடியாத பெருமையினைக் கொண்டவை. இப்பாடல்கள் எழுத்திலக்கியப் பாடல்களைப் போன்று எதுகை, மோனை, இயைபு, இரட்டைக் கிளவி என்ற யாப்பிலக்கணத்தின் கட்டுக் கோப்பில் அமைந்துள்ளன.

- நாட்டுப்புறப் பாடல் வகைப்பாடு

நாட்டுப்புறப் பாடல்கள் அவை பாடப்படும் சூழல், நிகழ்வுகளின் தன்மை இவற்றை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப் படுகின்றன. முனைவர் சு. சக்திவேல் சூழல் அடிப்படையில் எட்டாகப் பிரித்து, அவற்றில் உட்பிரிவுகளையும் வகைப்படுத்தியுள்ளார்.

- தாலாட்டுப் பாடல்கள்

தாலாட்டுப் பாடல் என்பது தாய்மை உணர்வின் வெளிப்பாடாகும். அப்பாடல்களில் வெளிப்படும் உணர்வுகளின் தன்மையினை நான்கு கூறுகளாகப் பிரித்துள்ளார்.

1) குழந்தை பற்றியன.

2) குழந்தைக்குரிய பொருள்கள் பற்றியன.

3) குழந்தைகளின் உறவினர் பெருமை பற்றியன.

- குழந்தைப் பாடல்கள்

குழந்தைப்பாட்டுகள் குழந்தை உள்ளத்தைப் புலப்படுத்துவனவாக அமைந்திருக்கும். அதில் பொருள் அமைவதைவிட ஓசை நிறைவுகளே அதிகமாகக் காணப்படும். இப்பாடல்களை மேலும்,

1) குழந்தை வளர்ச்சிநிலைப் பாடல்கள்.

2) (குழந்தைப் பாடல்கள்) மற்றவர்கள் பாடுவது.

3) சிறுவர் பாடல்கள்.

என்றும் பிரித்துப் பார்க்கலாம்.

- காதல் பாடல்கள்

காதல் பாடல்களை இருவகையாகப் பிரிக்கலாம். 1) காதலர்களே பாடுவது, 2) காதலர்கள் அல்லாதவர்கள் தொழில் செய்யும் போது பாடுவது. ஆனால் பெரும்பாலும் நாட்டுப்புறக் காதல், தொழில் செய்யுமிடங்களில் தான் பிறக்கிறது. வண்டிக்காரன் பாடும் தெம்மாங்குப் பாடல்களில் காதல் சுவையைக் காணலாம். உறவில் இன்பம் காண்பதும், பிரிவில் வேதனையடைவதும் பாடலின் பொருளாக அமையும்.

- தொழில் பாடல்கள்

மனிதர்கள் கூடித் தொழில் செய்யும்போது அக்கூட்டுறவில் பிறப்பவை தொழில் பாடல்கள். தொழில் பாடல்களிலே அன்பு மலர்வதையும், பாசம் பொங்குவதையும், உழைப்பின் ஆர்வத்தையும், நன்மையில் ஈடுபாட்டையும், தீமையில் வெறுப்பையும் காணலாம். தொழில் பாடல்கள் தொழிலாளர்களது இன்ப துன்பங்களையும், நெஞ்சக் குமுறல்களையும், ஆசாபாசங்களையும், விருப்பு, வெறுப்புகளையும் வெளியிடுகின்றன. தொழில் பாடல்களை ஏலோலங்கிடி பாட்டு, தில்லாலங்கடி பாட்டு, தெம்மாங்குப் பாட்டு, ஏற்றப் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு என்றெல்லாம் வழங்குவர்.

- கொண்டாட்டப் பாடல்கள்

மனிதன் தன் மகிழ்ச்சியினை ஆடியும் பாடியும் பலரோடு கலந்து கொண்டாடுகிறான். அவ்வெளியீட்டில் தொன்மையான கலைச் சிறப்பையும் மக்களது பண்பாட்டின் சிறப்பினையும் அறியமுடியும். மனிதனின் உழைப்பிற்குப்பின், அவனது மனமானது ஆடல், பாடல்களில் ஈடுபடுகிறது. இப்பாடல்களை அகப்பாடல், புறப்பாடல் என்று பிரிக்கலாம்.

- அகப்பாடல்

சமூகத்திலுள்ள பலரும் இணைந்து குழுவாகப் பாடப்படுவது. பூப்புச் சடங்குப் பாடல், திருமணம், பரிகாசம், நலுங்கு, ஊஞ்சல், வளைகாப்புப் பாடல்கள் போன்றவற்றைக் கூறலாம்.

- புறப்பாடல்

பலரும் கலந்தாடும் கும்மி, கோலாட்டம் போன்ற ஆட்டங்களில் பாடப்படும் பாடல்களைப் புறப்பாடல்கள் எனலாம்.

- பக்திப் பாடல்கள்

ஆதி காலத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். இயற்கையின் சக்திகளைத் தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். அதிலிருந்து விழாக்களும், பண்டிகைகளும், பலிகளும் தோற்றம் பெற்றன. இவ்வழிபாடுகளை மூன்று நிலைகளில் மக்களிடையே காணமுடியும்.

1) இயற்கை வழிபாட்டுப் பாடல்கள்.

2) சிறுதெய்வப் பாடல்.

3) பெருந்தெய்வப் பாடல்.

சான்று : இயற்கை வழிபாட்டுப் பாடல்

சந்திரரே சூரியரே
சாமி பகவானே
இந்திரரே வாசுதேவா
இப்பமழை பெய்யவேணும்
மந்தையிலே மாரியாயி
மலைமேலே மாயவரே
இந்திரரே சூரியரே
இப்பமழை பெய்யவேணும்

இப்பாடலில் தொன்று தொட்டு வரும் இயற்கை வழிபாட்டைக் காணலாம். நிலா, மழை, ஒளி, பாம்பு, பசு ஆகியவற்றை நாட்டுப்புற மக்கள் வழிபடுகின்றனர். அவ்வாறு வழிபடும்போது இத்தகைய இயற்கைப் பாடல்களைப் பாடுகின்றனர்.
ஒப்பாரிப் பாடல்கள்

இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது பாடப்படும் பாடல்களை ஒப்பாரி என்பர். இறந்தவர்களின் இழப்பை எண்ணி, இறந்தவர்களையும் தம்மையும் ஒப்புச் சொல்லி அதாவது ஒப்பிட்டுப் பாடுவது ஒப்பாரியாகும். இறந்தவரின் பெருமையும் அவரது குணநலன்களும் பிறரால் போற்றப்பட்ட முறையும், ஒப்பாரி பாடுகின்றவர்கள் இறந்தவரை நேசித்த முறையும், தன்னுடைய நிலைமை, குடும்பத்தின் நிலைமை, ஈமச் சடங்குகள் பற்றிய விவரங்களும் அப்பாடல்களில் கூறப்படுவதுண்டு.

- பன்மலர்ப் பாடல்கள்

ஒரே பாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட தன்மை இருப்பின் அப்பாடல் பன்மலர்ப் பாடல் எனப்படும்.

### 3.2.2 நாட்டுப்புறக் கதைகள்

நாட்டுப்புற மக்களிடையே கதை கூறுவது என்பது பொதுவான பண்பாகும். மக்கள் தங்களது வாழ்வியல் நீதிகளுக்காகவும், பொழுது போக்கிற்காகவும் கதைகளை

உரைத்தனர். இன்றளவும் உரைத்து வருகின்றனர். நாளையும் கதையினைக் கூறுவார்கள். ஏனென்றால் கதையினைக் கூறுபவரும், கதையினைக் கேட்பவரும் அந்தந்தக் கதைகளோடு தங்களையும் இணைத்துக் கதை கேட்கின்றனர்.

- கதைகளின் வகைகள்

முனைவர் சு. சக்திவேல் நாட்டுப்புறக் கதைகளை 6 வகையாகப் பிரிக்கின்றார்.

1) மனிதக் கதைகள்

2) மிருகக் கதைகள்

3) மந்திர – தந்திரக் கதைகள்

4) தெய்வீகக் கதைகள்

5) இதிகாச புராணக் கதைகள்

6) பல்பொருள் பற்றிய கதைகள்

- கதைகளின் சிறப்புக் கூறுகள்

இக்கதைகளின் முக்கிய நோக்கம் மக்களுக்கு அறக்கோட்பாட்டை உணர்த்துவதே ஆகும். வளரும் குழந்தைகளுக்கு அது நீதி போதனைக் களஞ்சியமாகத் திகழ்கிறது. வாழ்க்கைப் பிரச்சனை, ஆசை, துன்பம், சாதிப் பூசல், காதல், ஒழுக்கம், வேதனை, முட்டாள்தனம், பொறாமை, மன உணர்வெழுச்சி, கள்ள நட்பு, மந்திரம், புத்திசாலித்தனம், நீதி முதலியவற்றைக் கூறுவதாக அமையும். மொத்தத்தில் இக்கதைகள் பயன்பாட்டு இலக்கியம் ஆகின்றன. சமூக வரலாற்றை அறியப் பெரிதும் துணைபுரிகின்றன. பண்பாட்டுக் கூறுகளை மீட்டுருவாக்கம் செய்கின்றன. பழங்காலச் சமுதாயச் செய்திகளையும், சமகாலச் செய்திகளையும் இவற்றால் அறிய முடிகின்றது.

### 3.2.3 நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

தனிமனித வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளை – பிறப்பு முதல் இறப்பு வரைக்கும் – கதையினைப் போன்று அதே சமயம் பாடலாகப் பாடுவது கதைப் பாடலாகும். காப்பியத்தில் தன்னிகரில்லாத் தலைவனின் வளப்பம் மிகுந்த செயல்பாடுகள் எழுதப்படுகின்றன அல்லவா? அதைப் போல நாட்டுப்புறக் கதைப்பாடலில் கதைத் தலைவனின் வீர தீரச் செயல்கள் பாடப்படும். கதைப் பாடல்கள் வரலாறுகள் அல்ல. அவை வீரக் காவியங்கள், மனிதப் பண்பின் உயர்ந்த அம்சங்களைப் போற்றுபவை என்கிறார் நா. வானமாமலை (ஐவர் ராசாக்கள் கதை. ப.53). இவை கதைப்பாடல்களின் இயல்புகள் என்றே கூறலாம்.

- கதைப் பாடலின் தன்மை

கதைப் பாடலில் கீழ்க்காணும் முக்கியக் கூறுகள் காணப்படுகின்றன.

1) கதையில் நிகழ்ச்சிப் போக்கு உண்டு. (Action)

2) பாத்திரங்கள் வாயிலாக விளக்கப் பெறும். (Characters)

3) கதைக் கரு உண்டு (Theme)

4) வீரப்பண்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பெறும். (Prominence of Heroism)

5) உரையாடல் (Dialogue) உண்டு,

6) திரும்பத் திரும்ப வரல் (Repetition)

- கதைப் பாடலின் அமைப்பு

கதைப் பாடலின் அமைப்பில் நான்கு முக்கியப் பகுதிகள் உள்ளன. அவையாவன,

1) காப்பு அல்லது வழிபாடு.

2) குரு வணக்கம்

3) வரலாறு

4) வாழி

என்பவையாகும்.

சான்று : கதைப் பாடல்கள்

1) முத்துப்பட்டன் கதை

2) நல்லதங்காள் கதை

3) அண்ணன்மார் சுவாமி கதை

- கதைப் பாடலின் வகைகள்

முனைவர் சு. சக்திவேல் கதைப் பாடல்களை மூன்றாக வகைப்படுத்துகிறார்.

1) புராண, இதிகாச தெய்வீகக் கதைப் பாடல்கள்

2) வரலாற்றுக் கதைப் பாடல்கள்

3) சமூகக் கதைப் பாடல்கள்

### 3.2.4 நாட்டுப்புறப் பழமொழிகள்

பழமொழி என்ற சொல்லே மிகப் பழமையானவற்றை உணர்த்துவதாகும். பலரது அறிவையும் ஒருவரது நுண்ணுணர்வையும் அதிலிருந்து பெறுகின்றன. அறிவின் சுருக்கமே பழமொழி எனலாம். பழமொழிகள் மக்களது வாழ்வுடன் வாழ்வாகப் பின்னிப் பிணைந்துள்ளன. மக்களின் வாழ்வில் நாளும் பழக்கத்தில் உள்ள மொழி, எதுகை மோனையுடன் ஒரு கருத்தினைக் கூறுதல், விளக்கம் செய்யும் வகையில் எடுத்துக் கூறுதல் ஆகியவற்றைக் கொண்டதே பழமொழியாகும். இவை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் மிக்கவைகளாகும்.

- பழமொழியின் இயல்புகள்

1) பழமொழியின் முக்கிய இயல்பு, சுருக்கம், தெளிவு, பொருத்தமுடைமை.

2) அறவுரையையும், அறிவுரையையும் கொண்டிருக்கும்.

3) ஒவ்வொரு பழமொழியும் விளக்கக் கூறு (Descriptive element) ஒன்றினைப் பெற்றிருக்கும்.

4) பழமொழிக்கு ஒரு சொல்லில் அமைவதில்லை.

- பழமொழி வகைப்பாடு

முனைவர் சு. சக்திவேல் தமிழ்ப் பழமொழிகளை ஐந்து வகையாக வகைப்படுத்துகிறார்.

1) அளவு அடிப்படை (Size Basis)

2) பொருள் அடிப்படை (Subject Basis)

3) அகரவரிசை அடிப்படை (Alphabetical Basis)

4) அமைப்பியல் அடிப்படை (Structural Basis)

5) பயன் அடிப்படை (Functional Basis)

### 3.2.5 விடுகதைகள்

விடுகதை என்பது ஏதாவது ஒரு கருத்தைத் தன்னிடம் மறைத்துக் கொண்டு கூறுவது. இதனை அறிவுத்திறத்தோடு ஆராய்ச்சி செய்யும் பொழுது, குறைந்த பட்சம் சிந்தனை செய்யும் பொழுதுதான் புலப்படும். மேலும் 'விடுகதை' என்ற நாட்டுப்புற வழக்காற்றில் ஈடுபாடும் விருப்பும் உடையவர்களால் விடுகதையிலுள்ள 'புதிருக்கு' (புரியாத நிலையிலுள்ளது) விடையினைக் கூறமுடியும். இவ்வாறு விடுகதை என்பது,

1) அறிவு ஊட்டும் செயல்

2) சிந்தனையைத் தூண்டுதல்

3) பயனுள்ள பொழுது போக்கு

என்ற வகையில் அமைந்து மக்களின் வாழ்வில் இடம் பெற்றுள்ளது.

- விடுகதையின் வகைகள்

விடுகதைகளை, பயன்பாட்டு அடிப்படையில் நான்கு வகையாகப் பிரிக்கின்றார் டாக்டர் ச. வே. சுப்ரமணியம் அவர்கள். அவை,

1) விளக்க விடுகதைகள் (Descriptive Riddles)

2) நகைப்பு விடுகதைகள் (Witty question Riddles)

3) கொண்டாட்ட விடுகதைகள் (Ritualistic Riddles)

4) பொழுதுபோக்கு விடுகதைகள் (Recreative Riddles)

விடுகதையை அமைப்பியல் ஆய்வின் அடிப்படையில் இரண்டாக வகைப்படுத்தலாம். அவை,

1) உருவகமில்லாதது (Literal)

சான்று :

'சிவப்புச் சட்டிக்குக் கறுப்பு மூடி' – என்பது குன்றி மணியைக் குறிக்கும்.

2) உருவகமுடையது.

சான்று :

'செத்துக் காய்ந்த மாடு சந்தைக்குப் போகுது' – என்பது கருவாட்டினைக் குறிக்கிறது.

இவ்வாறு விடுகதைகளும் பழமொழிகளும் மக்களின் வாழ்வில் பயனுள்ள வகையில் பொழுதைக் கழிப்பதற்கும், சிந்திப்பதற்கும் துணை நின்று உள்ளன. இன்றும் விடுகதை, பழமொழி இவற்றை, தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட வானொலியின் பண்பலை ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில், நிலையத்தார் வானொலி கேட்பவர்களிடம் தொலைபேசி வழிக் கேட்பதையும் கேட்க முடியும். நாட்டுப்புற வழக்காறும் நாகரிகம் மிகுந்த மக்களின் வாழ்க்கையில் மக்கள் தொடர்புச் சாதனங்களில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

### 3.2.6 புராணங்கள்

புராணக் கதைகள் மனித மனத்தின் அடித்தளத்தில் உள்ள எண்ணங்களை மையமாகக் கொண்டவை. அத்தகைய புராணக்கதைகள் அன்று முதல் இன்றுவரை வாழ்ந்து வருகின்றன. அறிவியல் வளர்ச்சியில்லாத காலத்தில் மனித வாழ்வில் அனுபவித்த முரண்பாடுகள், விந்தைகள், சிக்கல்கள் ஆகியவற்றுக்குத் தீர்வாகப் புராணக்கதைகள் இருந்துள்ளன. சடங்குகள் தான் புராணங்கள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்துள்ளன. சமயத்தின் ஆழ்ந்த நோக்கு, அடிப்படைக் கருத்துகள் புராணங்களில் தோய்ந்து கிடக்கின்றன.

- புராணங்களின் வகைகள்

தமிழிலுள்ள புராணங்களை மக்களிடையேயுள்ள,

1) வாய்மொழிப் புராணங்கள் (Oral Puranas)

2) எழுத்திலக்கியப் புராணங்கள் (தல புராணங்கள்)

என்று பகுத்து ஆராயலாம்.

#### தன்மதிப்பீடு : வினாக்கள் – I

## 3.3 நாட்டுப்புறக் கலைகள்

நாட்டுப்புற வழக்காறுகளில் நாட்டுப்புற இலக்கியம் தவிர்த்த மற்ற அனைத்து வழக்காறுகளையும் நாட்டுப்புறக் கலைகளுக்குள் அடக்கம் செய்யலாம். பின்பு அதனை மூன்று வகைகளாகப் பகுத்து அறியலாம். அவை,

1) நாட்டுப்புறப் பழக்கங்கள் (Folk Practices)

2) நாட்டுப்புறக் கலைகள் (Folk Arts)

3) நாட்டுப்புற அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் (Folk Science)

### 3.3.1 நாட்டுப்புறப் பழக்கங்கள்

வாழ்க்கை முறைகளின் கூட்டுச் சேர்க்கைதான் பண்பாடு என்ற ஒன்றை உருவாக்குகின்றது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் சடங்குகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் இவை தாம் அச்சமுதாயத்தின் பண்பாட்டின் அடையாளத்தைக் காண வழி வகுக்கின்றன. சமுதாயத்தின் பழக்கங்கள் என்பனவற்றுள்,

1) நம்பிக்கைகள்

2) வழக்கங்கள்

3) சடங்குகள்

4) விழாக்கள்

5) விளையாட்டுகள்

போன்றவை அடங்கும்.

- நம்பிக்கைகள்

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு, அம்மக்களின் சமுதாயத்தால் பாதுகாக்கப் படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்ச உணர்வின் அடிப்படையில் அமைகின்றன. இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்கள் நடக்கின்ற போது மனித மனம் அதற்கு ஒரு காரணத்தைப் படைக்கின்றது. அதுவே நாளடைவில் நம்பிக்கையாக மாறிவிடுகின்றது. சகுனங்கள் பார்ப்பதும் இந்த நம்பிக்கைக்குள் அடங்கும்.

- நம்பிக்கையின் வகைகள்

நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் கணக்கற்றவை. அவற்றில் சில,

1) குழந்தை பற்றிய நம்பிக்கைகள்

2) பருவமடைதல் பற்றிய நம்பிக்கைகள்

3) மழை பற்றிய நம்பிக்கைகள்

4) நட்சத்திர நம்பிக்கைகள்

5) கடவுள் பற்றிய நம்பிக்கைகள்

6) உணவு, ஆடை, அணிகலன்கள் பற்றிய நம்பிக்கைகள்

7) மரணம் பற்றிய நம்பிக்கைகள்

8) கனவு பற்றிய நம்பிக்கைகள்

- சகுனங்கள்

1) நல்ல சகுனம்

2) கெட்ட சகுனம்

3) பல்லி சகுனம்

என்பனவற்றைக் கூறலாம்.

- வழக்கங்கள்

நாட்டுப்புற மக்களிடையே சில வழக்கங்கள் நடைமுறையில் இன்றளவும் காணப்படுகின்றன. அவை பின்வரும் நம்பிக்கைகள் சார்ந்தவை:

1) பெண்களுக்கு முழங்கால்வரை முடி வளர்ந்திருந்தால் தனது கணவனை விரைவில் இழப்பாள்.

2) செவ்வாய்க்கிழமையன்று மயிர் வெட்டினால் தரித்திரம் வரும்.

3) அகன்ற நெற்றியுடையவர்கள் அறிவாளிகள்.

4) ஆண்களுக்கு வலது கண் துடித்தல் நல்லது.

5) ஆண்களுக்கு இடது கண் துடித்தல் கெட்டது.

6) பெண்களுக்கு இடது கண் துடித்தல் நல்லது.

7) ஒருவர் தும்மும்போது ‘நீண்ட நாள் வாழ்க’, ‘நூற்றாண்டு வாழ்க’ எனக் கூறுவர்.

8) மறைவிடத்தில் மச்சம் இருப்பின் நல்லது.

9) திருமண நேரத்தில் மகன் அருகில் தாய் செல்லக் கூடாது.

10) சுபகாரியங்களை முதல் பிறைநாளன்று செய்யக் கூடாது.

- சடங்குகள்

நாட்டுப்புற மக்கள் தங்களது வாழ்வில் இன்பம், துன்பம் என்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் சடங்கு செய்தல் என்பது முக்கியம். திருமணம், மரணம், குழந்தைப் பேறு, தெய்வ வழிபாடு என்று எல்லாவற்றிலும் சடங்குகள் இடம்பெறுகின்றன.
சான்று : திருமணச் சடங்கு

திருமணம் என்றால் பந்தல் போட்டு, அனைவருக்கும் வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பர். நலுங்கு செய்தல், திருநீற்றுக் காப்பு இடல், அம்மி வலமாக வந்து அரசாணி முன்பு தாலி கட்டுதல் முதலியன சடங்குமுறைகள் ஆகும்.

- விழாக்கள்

விழாக்கள் பெரும்பாலும் மதச் சார்புடையனவாகவோ, தொழில் சார்புடையனவாகவோ இருக்கும். தொழில் சார்புடைய விழாக்கள் தொழில் சிறப்படைய வேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டாடப் படுகின்றன. சமயச் சார்புடைய விழாக்களில் தெய்வ வழிபாடு கலந்திருக்கும்.

1) தமிழ் வருடப் பிறப்பு

2) சித்திரா பௌர்ணமி

3) வைகாசி விசாகம்

4) பிட்டுத் திருவிழா

5) விநாயக சதுர்த்தி

6) தீபாவளி

7) கார்த்திகை தீபம்

8) நவராத்திரி

9) பொங்கல் விழா

நாட்டுப்புறத் தெய்வங்களோடு தொடர்புடைய விழாக்கள் என்று முனைவர் க. காந்தி சிலவற்றைக் குறிப்பிடுகிறார். அவை :

1) தேர்த் திருவிழா

2) செடல் போடும் திருவிழா

3) தீமிதி உற்சவம்

4) கம்பம் திருவிழா

5) மொந்தையன் திருவிழா

6) ஊரணிப் பொங்கல்

7) மயானக் கொள்ளை

8) காத்தவராயன் கழுவேற்றம்

போன்றவைகளாகும்.

- விளையாட்டுகள்

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை அறிவதற்கு விளையாட்டுகளும் பெரிதும் உதவுகின்றன. இவ்விளையாட்டுகளை ஐந்து வகையாகப் பிரிக்கின்றனர்.

1) சிறுவர் விளையாட்டு

சிறுவர்கள் மட்டும் கூடி விளையாடுவது.

சான்று : பம்பர விளையாட்டு, தேர் விளையாட்டு.....

2) சிறுமியர் விளையாட்டு

சிறுமியர்கள் மட்டும் கூடி விளையாடுவது.

சான்று : பூப்பறிக்க வருகிறோம், பூசணிக்காய் விளையாட்டு.

3) சிறுவர் சிறுமியர் விளையாட்டு.

இருபாலாரும் கூடி விளையாடுவது.

சான்று : நொண்டி, நிலாப் பூச்சி, சாட்டு பூட்டு.

4) மகளிர் விளையாட்டு.

சான்று : பல்லாங்குழி, தட்டாங்கல், தாயம்.

5) ஆடவர் விளையாட்டு.

சான்று : சடுகுடு, பதினைந்தாம்புலி, உறியடி விளையாட்டு, சேவல் கட்டு, எருது கட்டு.

### 3.3.2 நாட்டுப்புறக் கலைகள்

நாட்டுப்புற மக்களின் கலைகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். அவை,

1) நிகழ்த்து கலைகள் (Performing Arts)

2) நிகழ்த்தாக் கலைகள் (Non – Performing Arts)

- நிகழ்த்து கலைகள்

நிகழ்த்து கலைகளை மேலும் இரண்டாகப் பிரித்து,

1) சமூகச் சார்புக் கலைகள்

2) சமயச் சார்புக் கலைகள்

எனலாம். இந்நிகழ்வுகள் குறிப்பிட்ட கலைஞர்களால் நிகழ்த்தப்படுவன.

- நாட்டுப்புற நாடகம்

விழாக்களின் போது நடத்தப்படும். பெரும்பாலும் இரவில் தொடங்கி விடிய விடிய நடைபெறும். வள்ளி் திருமணம் போன்ற நாடகங்கள் நாட்டுப்புற மக்களிடையே சிறப்புற்றவை. இந் நாடகங்கள் தற்காலச் சமுதாயத்திற்கு ஏற்பவும் வசனங்களில் சில மாற்றங்களை உள்வாங்கிப் பேசும். இதைப் பெரும்பாலும் நகைச்சுவைப் பகுதியில் காணலாம். நாட்டுப்புற நாடகக் கூறுகளாகத் தற்போது சமூக விழிப்புணர்வு, தேர்தல் பிரச்சாரம், மக்கள் தொகைக் கட்டுப்பாடு போன்ற கருத்துகளும் உள்ளடங்கியுள்ளன எனலாம்.

- நாட்டுப்புற இசை

நாட்டுப்புற இசையினை வில்லுப்பாட்டில் காணமுடியும். இதில் வில்லுடன், இசைக் கருவிகளாக உடுக்கு, குடம், தாளம், கட்டை என்பனவற்றையும், பம்பை, உறுமி, தக்கை, துந்துபி என்ற நான்கு கருவிகளையும் சேர்த்து எட்டு வகையான பக்கக் கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. இந்த வில்லுப்பாட்டும் தற்பொழுது சமுதாயக் கருத்துகளை மக்களிடையே கொண்டு சேர்க்கப் பயன்படுத்தப் படுகின்றது.

- நாட்டுப்புற நடனம்

நாட்டுப்புறவியலில் நடனம் என்று குறிக்காமல் ஆட்டம் என்று தான் வழங்கப்படுகிறது. கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கணியான் ஆட்டம் போன்ற ஆட்டங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

- கூத்து

கூத்து என்பது பழமையின் சின்னமாக, பண்பாட்டின் எச்சமாக விளங்குகின்றது. தெருக்கூத்தின் வளர்ச்சிதான் நாடகம் என்றும் கூறலாம்.

- கூத்தின் வகைகள்

1) பாவைக் கூத்து,

2) கழைக் கூத்து,

3) தெருக்கூத்து

எனப்படும்.

- நிகழ்த்தாக் கலைகள்

இக்கலைகளை நாட்டுப்புற மக்களின் தொழில் சார்ந்த கலைகள் என்று தான் குறிப்பிட வேண்டும். இத்தொழில்கள், மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்டவை. கோயில்கள், தெய்வங்கள் இவற்றை அழகு படுத்துவதற்காகச் செய்யப்படுவன எனலாம்.

- மண்பாண்டக் கலை

நாட்டுப்புற மக்களிடையே மண்பாண்டக் கலை மிகவும் சிறப்புப் பெற்றது. கலையழகுடன் கைத்திறனையும் காட்டி மண்பாண்டம் செய்வதையே பெரும் கலையாக்கிவிட்டனர். பல நிறங்களுடன், உருவ அமைப்பில் மாற்றமும் செய்து கலையழகுடன் பொருந்திய பொருட்களை உருவாக்குகின்றனர். கிராமங்களில் காணப்படும் ஐயனார் சிலைகள் இவர்களின் கைவண்ணத்திற்குச் சான்றாகும்.

- பாய் பின்னுதல்

பாய் பின்னும் தொழில் நம்மிடையே பல தலைமுறையாக நடைபெற்று வருகிறது. பத்தமடைப் பாய் நெசவும், பனை ஓலையால் கூடை முடைதலும் கைத்தொழிலின் சிறந்த சான்றாகும்.

- சிற்ப வேலைப்பாடு

மரத்திலும், உலோகத்திலும், கல்லிலும் சிற்பங்கள் செதுக்கப் படுகின்றன. கோவில் தேர்களில் அழகான சிற்பங்களைக் காணலாம். உலோகங்களில் தெய்வச் சிலைகளும், பாவை விளக்குகளும் செய்யப் படுகின்றன. உலோகத்தால் செய்வது போன்று கல்லிலும் சிற்பங்கள் செதுக்குவர்.

- நாட்டுப்புற ஆடைகள்

நாட்டுப்புற மக்களின் ஆடைகள் பருத்தியால் ஆனவை, எளிமையானவை. ஆனால் வளர்ந்து வரும் நாகரிகத்திற்கு ஏற்ப அவர்களுடைய ஆடைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அப்படியென்றால் அவர்களுக்கென்ற தனிப்பட்ட அடையாளத்தை அங்கு எதில் காணலாம் என்றால், அம்மக்களின், நம்பிக்கை சார்ந்த சடங்குகளிலும், தெய்வ வழிபாடுகளிலும் காணலாம். அந்த நிகழ்வின் போது எவ்வகை ஆடை அணிகின்றனர், நிறம் என்ன? போன்றவற்றைக் கொண்டு அவர்களின் பண்பாட்டின் தனித் தன்மைகளை அறிய முடியும்.

### 3.3.3 நாட்டுப்புற அறிவியல் மற்றும் தொழில் நுட்பம்

இப்பகுதியில்,

1) நாட்டுப்புற மருத்துவம்

2) நாட்டுப்புறத் தொழில் நுட்பவியல்

3) நாட்டுப்புறக் கட்டடக் கலை

என்று மூன்று வகைகளைப் பார்க்கலாம்.

- நாட்டுப்புற மருத்துவம்

நாட்டுப்புற மக்கள் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்கிறோம். நாட்டுப்புற மருத்துவத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை,

1) மந்திர சமய மருத்துவம்

2) இயற்கை மருத்துவம்

- மந்திர சமய மருத்துவம்

இவ்வகை மருத்துவம் மந்திரம், சடங்கு போன்றவற்றோடு தொடர்பு உடையதாக இருக்கும்.நாட்டுப்புற மக்களின் மருத்துவ மந்திரச் சடங்குகள் மந்திரித்தல், திருநீறு போடல், கோடாங்கி கேட்டல், பார்வை பார்த்தல், நேர்த்திக் கடன் செய்தல், பேயோட்டல், செய்வினை செய்தல் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இந்த மருத்துவர்களை அம்மக்கள் பூசாரி, பேயோட்டி, பாம்புக்கடி மருத்துவர், எலும்பு முறிவு வைத்தியர், மந்திரவாதி, சாமியாடி, அருளாடி, நாட்டு வைத்தியர் எனப் பல பெயர்களால் அழைக்கின்றனர். மக்களது நோயினைத் தீர்ப்பதற்கு மத மந்திரத்தைத் தழுவி நிற்பதனை மந்திர சமய மருத்துவம் (Magio – religious medicine) எனலாம்.
இயற்கை மருத்துவம்

மூலிகை, தாது போன்ற பொருட்கள், மருந்துகள் முதலியவற்றை இயற்கை நாட்டுப்புற மருத்துவம் என்பர். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உட்கொள்ளும் மருந்து, வெளிப்பூச்சு மருந்து என இருவகையுண்டு. இயற்கை நாட்டுப்புற மருத்துவம் மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே உள்ளது. பண்டைய மனிதனின் மருத்துவ அறிவை, நம்பிக்கையை இதன் மூலம் அறியலாம்.
சான்று : மஞ்சள் காமாலை நோய்

1) கீழாநெல்லி, மஞ்சள் கரிசலாங்கண்ணியை அரைத்து மோரில் கலந்து மூன்று நாள் சாப்பிட வேண்டும். உப்பில்லாத பால்சோறு சாப்பிட வேண்டும்.

2) சித்திர மூலம் மஞ்சள் காமாலையைக் குணமாக்கும்.
நாட்டுப்புறத் தொழில் நுட்பவியல்

நாட்டுப்புற மக்கள் மரபு வழியாகக் கடைப்பிடித்து வரும் முறைகளைக் கையாண்டு பொருட்களைத் தயாரிக்கின்றனர். அந்தந்த இடத்திலுள்ள மூலப்பொருள்களைக் கொண்டு கைவினைப் பொருட்களாகக் கலை அம்சம் கொண்ட பொருட்களை மட்டுமின்றி, மனித வாழ்வுக்குப் பயன்படுத்தும் செக்கு, கலப்பை, மாட்டுவண்டி போன்ற பொருட்களையும் தயாரித்து, அதிலும் அவர்களின் தொழில் நுட்பத்தை வெளிப்படுத்துகின்றர்.

- கட்டடக் கலை

நாட்டுப்புறக் கட்டடக் கலையில் மரபு வழிப்பட்ட திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. கட்டடம் கட்டுபவரே வீட்டின் அமைப்பைத் தீர்மானிப்பார். அவ்வீட்டின் அமைப்பு பெரும்பாலும் அப்பகுதியிலுள்ள மற்ற வீடுகளின் அமைப்பு போன்றிருக்கும். முன்னோர் கட்டிய கட்டட அமைப்பின் மாதிரியாகவும் இருக்கும். நாட்டுப்புறக் கட்டடக் கலையில் பயன்படுத்தும் பொருட்கள், கருவிகள், தொழில் நுட்ப முறைகள் மற்ற கட்டடக் கலைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டுப்புற மக்கள் வசிக்கும் வீடுகளைத் தரையமைப்பு, கூரை ஆகியவற்றின் அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தி உள்ளனர்.

1) நீண்ட சதுரத் தரை அமைப்பும் மட்டமான கூரையும்

2) நீண்ட சதுரத் தரை அமைப்பும் சாய்வான கூரையும்

3) வட்டமான தரை அமைப்பும் கூம்பு வடிவக் கூரையும்.

## 3.4 தொகுப்புரை

நாட்டுப்புற இலக்கிய வகைமைப்பாடு என்ற இப்பகுதியில் நாட்டுப்புற வழக்காறுகள் தனித்தனியாகப் பகுத்துக் காணப்பட்டுள்ளன.

நாட்டுப்புற இலக்கிய வகைமை – வகை இவ்விரண்டிற்குமான வேறுபாட்டை விளக்கி வகை என்பது வகைமைக்குள் அடங்கும் என்பதை இப்பாடம் தெளிவுபடுத்துகிறது.

நாட்டுப்புற வழக்காறுகள் நாட்டுப்புற இலக்கியம்,நாட்டுப்புறக் கலைகள் என்று இரண்டாக வகைமைப்படுத்தப் பட்டுள்ளன.

நாட்டுப்புற இலக்கியத்தின் வகைகள் ஒவ்வொன்றாக விளக்கப்பட்டுள்ளது.

நாட்டுப்புறக் கலைகளையும் மூன்றாக வகைப்படுத்தி அவற்றையும் தனித்தனியாக விளக்குகிறது, இப்பாடம்.

நாட்டுப்புற வழக்காறுகளைப் பற்றி வகைமைப்படுத்திப் பார்ப்பதன் மூலம் அம்மக்களின் பண்பாட்டினை அறிய முடியும்.

தன்மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 4

# A06114 நாட்டுப்புறவியலும் பிற துறைகளும்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

நாட்டுப்புறவியல் பிற துறைகளோடு இணைத்துப் படிக்கும் வகையில் அமைந்துள்ள ஒரு பாடப் பகுதியாகும். இவ்வாறு நாட்டுப்புறவியலை எங்ஙனம் மற்ற துறைகளோடு சேர்த்துப் படிக்கலாம் என்பதை இப்பாடப் பகுதி எடுத்துக் கூறி விளக்குகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படித்து முடிக்கும் போது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறுவீர்கள்.

- நாட்டுப்புறவியல் தனித்துப் படிக்கக் கூடிய பாடம் அல்ல என்பது புரியும்.
- நாட்டுப்புறவியலைப் பிற துறைகளோடு சேர்த்துக் (Interdisciplinary) கற்கும் பொழுது பல புதிய தரவுகளையும் புதிய கருத்தியல்களையும் (ideologies) பெற முடிகிறது.
- நாட்டுப்புறவியலின் வீச்சின் பரப்பு புலப்படுகிறது.
- நாட்டுப்புறவியலின் தனித் தன்மைகளையும்,சிறப்புகளையும் மேலும் புரிந்து கொள்ள இப்பாடப் பகுதி துணை செய்கிறது.

# பாட அமைப்பு

4.0 பாட முன்னுரை
4.1 நாட்டுப்புறவியலும் பிற துறைகளும்
4.2 நாட்டுப்புறவியலும் மொழியியலும்
4.3 நாட்டுப்புறவியலும் உளவியலும்
4.4 நாட்டுப்புறவியலும் சமூகவியலும்
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
4.5 நாட்டுப்புறவியலும் மானுடவியலும்
4.6 நாட்டுப்புறவியலும் மண்ணியலும்
4.7 நாட்டுப்புறவியலும் வரலாறும்
4.8 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

## 4.0 பாட முன்னுரை

நாட்டுப்புறவியல் என்றால் என்ன என்பதையும் அதன் வரலாற்றையும் வகைப்பாடுகளையும் முந்தைய பாடங்களில் படித்தோம். இப்பாடப் பகுதி நாட்டுப்புறவியல் என்ற துறையானது (discipline) பிற துறைகளோடு குறிப்பாக மொழியியல் (Linguistics), சமுதாயவியல் (Sociology), மானுடவியல் (Anthropology), உளவியல் (Psychology), வரலாற்றியல் (History) போன்றவற்றோடு இணைத்துப் படிக்கக் கூடிய அளவுக்குத் தரவுகளை உடைய சிறப்பினைக் கொண்டது என்பதை இப்பாடப் பகுதி விளக்குகிறது. நாட்டுப்புறவியலின் வளமையையும் சிறப்பையும் இப்பாடப் பகுதியின் மூலம் கூடுதலாகப் புரிந்து கொள்ள முடியும். மேலும் நாட்டுப்புறவியல் துறையினை ஒரு கட்டத்திற்குள் அடக்கி விடாது அடுத்த கட்டத்திற்கு அல்லது அடுத்த படிநிலைக்கு (next step) எடுத்துச் செல்லும் சிறப்பினைக் கூறுவதே இப்பாடப் பகுதியாகும்.

## 4.1 நாட்டுப்புறவியலும் பிற துறைகளும்

நாட்டுப்புறவியல் என்பது சமூக அறிவியல் சார்ந்த ஆய்வுத் துறையாகும். இத்துறை ஆய்வு இன்று பல்துறை இணைப்பு ஆய்வாக (Interdisciplinary Study) விளங்குகிறது. ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, நாட்டு நடப்பை 'உள்ளது உள்ளபடி' என்ற முறையில் ஆராய்வதுதான் நாட்டுப்புறவியல். இத்துறை மொழியியல், சமூகவியல், மானுடவியல், உளவியல், வரலாற்றியல் போன்ற பிற துறைகளின் கூறுகளையும் தன்னுள் கொண்டுள்ளது. சில நடைமுறைக் காரணங்களுக்காக ஒவ்வொரு துறைக்குமான எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன என்றாலும், அறிவார்ந்த தளத்தில் ஆய்வு என்று வருகின்ற போது இந்த எல்லைகள் வலுவிழந்து போகின்றன. அறிவியல் சார்ந்த எந்த ஒரு துறையையும் ஒரு தனித்த கோட்பாட்டை மட்டுமே கொண்டு முழுமையாக விளக்கிட முடியாது. ஒவ்வொரு துறையும் பிற துறையிடமிருந்து சில கருத்துகளைப் பெற்றே தீர வேண்டும். அதனால் தான் நாட்டுப்புறவியல் துறையும் பிற துறைகளின் வாயிலாக வளர்ந்துள்ளது. அதே வேளையில் பிற துறைகளுக்குப் பல புதிய பார்வைகளையும் தந்திருக்கின்றது.

நாட்டுப்புறவியலைப் பிற துறைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதால் பல புதிய பார்வைகள், உண்மைகள் அல்லது சிந்தனைகள் தோன்றுகின்றன. அதன் மூலம் பல புதிய வாய்பாட்டு உருவாக்கத்திற்கும், பின்பு புதிய கோட்பாட்டு உருவாக்கத்திற்கும் தொடர்ந்து இட்டுச் செல்லுகிறது. அவ்வாறு ஆராயும் போது வாய்பாடுகள் மாறலாம், கோட்பாட்டுப் பார்வைகளும் மாறுவதற்கு இடம் உண்டு.

## 4.2 நாட்டுப்புறவியலும் மொழியியலும்

நாட்டுப்புற வழக்காறுகள் அடிப்படையில் மொழி நிகழ்வுகளே. நாட்டுப்புறக் கோட்பாடுகள் உருவானதில் மொழியியலின் பங்கு குறிப்பிடத்தக்கது. எனவே மொழியியல் கருத்தாக்கங்கள் (theories) நாட்டுப்புறவியலுக்கு இன்றியமையாதவை. மனிதனின் பிறப்போடு பிறப்பாய் வாழ்வோடு வாழ்வாய்ப் பின்னிப் பிணைந்து நிற்பது மொழி. நமது கருத்தைப் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக இருப்பது மொழி. மனித வாழ்விலும் நாகரிகத்திலும் மொழியின் பங்கு மிகச் சிறப்பானதாகும். அம்மொழியைப் பற்றிய ஆய்வை மொழியியல் (Linguistics) என்கிறோம். ஒரு மொழியின் இயல்பை உள்ளவாறு ஆராய்ந்து கூறுவது விளக்க மொழியியல் (Descriptive Linguistics). பல்வேறு காலங்களில் அமைந்த மாற்றத்தை ஆராய்வது வரலாற்று மொழியியல் (Historic Linguistics). மொழியில் ஏற்படும் மாற்றங்களை ஒலியனியல் (Phonology) மாற்றம், உருபனியல் (Morphology) மாற்றம், சொற்றொடரமைப்பு மாற்றம் (Syntax), சொல் பொருள் (Semantics) மாற்றம் என மொழியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.2.1 நாட்டுப்புறவியலும் மொழியியல் அறிஞரும்

மொழியியல் ஆய்வு நெறிமுறை நாட்டுப்புறவியல் ஆய்வு முறைக்கு மாதிரியாக அமைந்தது. நாட்டுப்புறவியலின் தந்தை எனக் கருதப்படும் ஜேக்கப் கிரிம் (Jacob Grim) மொழி நூல் (Philology) துறையைச் சார்ந்தவர். இவர் மொழியியலில் பயன்படும் ஒப்பு ஆய்வை நாட்டுப்புற இயலுக்கும் பயன்படுத்தினார்.

ஜேக்கப் கிரிமின் ஆய்வினைப் பின்பற்றி மாக்ஸ் முல்லர் (Max Muiller) (கி.பி.1823-1900) என்னும் ஆய்வாளர் புராணங்களைப் பற்றி ஆராயலானார். இவர் வடமொழியிலும், ஒப்பாய்விலும் வல்லுநர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் பொதுவான தோற்றம் பற்றிய கோட்பாட்டினை முன்மொழிந்தார். இந்தோ- ஐரோப்பிய மொழிகளின் தோற்றம் ஒரு முந்தைய தாய்மொழி மூலத்துக்கு இட்டுச் செல்வதாக இக்கோட்பாடு அமைந்தது. இந்த ஒப்பியல் முறையைக் கொண்டு பார்க்கும் போது நாட்டார் வழக்காற்றியல் துறையிலும் ஒரே தன்மையான கூறுகள் முந்தைய மக்களிடம் இருந்து வந்திருக்க வேண்டும் என்பது தான் கருத்து.

### 4.2.2 வாய்மொழிப் பாடலும் பயன்பாடும்

வாய்மொழிக் கதைப் பாடல் என்பது எழுதப்படாத, ஆனால் மொழிப்பயன்பாடு மிக்கது. கதைப் பாடல் பாடுபவரது மொழித் திறனை 'வாய்பாடு' என்பதன் மூலம் அறியலாம். அதாவது 'வாய்பாடு' என்றால் என்ன என்பதை முந்தைய பாடப் பகுதியில் பார்த்தோம். அந்த வாய்பாட்டினைப் பயன்படுத்துவோன் யாப்பு பற்றி எதுவும் அறியாதவன். என்றாலும் அவனது பாடலில் யாப்பு அமைதி, ஓசை நயம் போன்றவை தாமாகவே அமைந்திருக்கும். அவை அப்பாடலை மனனம் செய்வதற்குப் பயன்படுகின்றன. பாடல் :

ஒருகளஞ்சு பொன் தருவோம் ஒண்ணுதலே மருத்துவமே
ரெண்டுகளஞ்சு பொன் தாறோம் நாசகியே வளர என்றாள்
மூணு களஞ்சு பொன் தாறோம் மொய் குழலே மருத்துவமே
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
பத்துக்களஞ்சு பொன் தருவோம் பாவையரே மருத்துவமே

இப்பாடலில் மொழித் திறனைப் பார்க்க முடிகிறது.

## 4.3 நாட்டுப்புறவியலும் உளவியலும்

மனித மன அமைப்புப் பற்றியும், அதன் இயங்கியல் குறித்தும் ஆய்வு செய்த சிக்மண்ட் ஃப்ராய்டு என்பாரின் ஆய்வு உளவியல்; மானுடவியல், இலக்கியம், தத்துவம், வரலாறு, சமயம், மருத்துவம் போன்ற புலங்களுக்குப் புதிய பார்வையைத் தந்தது எனலாம். ஃப்ராய்டு பாலுணர்வு அல்லது காம இச்சையை அடிப்படையாகக் கொண்டதே மனம் என்ற கருத்தாக்கம் உடையவர். அவர் எடுத்துக் கூறிய கருத்தாக்கங்களான நனவு மனம் (Conscious), நனவடங்கு மனம் (Sub- conscious), நனவில் மனம் (Unconscious), இச்சை உணர்ச்சி (Id), தன்முனைப்பு (Ego), பண்பாட்டுணர்ச்சி (Super Ego) ஆகியவை நாட்டுப்புறவியல் ஆய்வில் தாக்கத்தை ஏற்படுத்தின. நாட்டுப்புறக் கதைகள், புராணங்கள், தொல்பழங்கதைகள், பழமொழிகள், குலக்குறி வழிபாடு, விலக்குகள் (Taboos) மற்றும் பல பிற வழக்காறுகளின் அர்த்தங்களின் ஆழத்தைக் கண்டறிய ஃப்ராய்டின் சிந்தனை வழிகாட்டியது. ஃப்ராய்டு உளவியல் வழியில் நாட்டுப்புற வழக்காறுகளை ஆராய்வதில் ஆர்வம் காட்டினார்.

## 4.4 நாட்டுப்புறவியலும் சமூகவியலும்

சமூகத்தைப் பற்றிய அறிவியல் சமூகவியல் எனப்படும். இதன் முக்கியக் குறிக்கோள் தனி மனிதனையும் மனித சமுதாயத்தையும் ஆராய்வதுதான். நம்பிக்கைகளும் வழக்காறுகளும் நடைமுறைகளும் சமூக நிறுவனங்களும் இதனால் ஆராயப்படுகின்றன. சமூக நிறுவனங்கள் சமயம், அரசியல், பொருளாதாரம், குடும்பம் இவற்றுடன் நெருங்கிய தொடர்புடையன. இவற்றின் இயக்கத்தையும் இயக்காற்றலையும் ஆராய்வதே சமூகவியலின் தலையாய பணியாகும்.

நாட்டுப்புறவியலின் சில கூறுகளும் சமூகவியல் அடிப்படையில் காணப்படுகின்றன. நாட்டுப்புறவியலாளரும், சமூகவியலாளரும் சமூக அமைப்பினைப் பற்றி ஆராய்கின்றனர். பழமொழிகளும் கதைகளும் சாதி அடிப்படையில் அமைந்த சமூக உறவை விளக்குகின்றன. சிக்கலான மனப்பான்மையைக் (complex attitude) குறித்து ஆராய, நாட்டுப்புற இலக்கியங்கள் உதவுகின்றன. சமூகத்தில் காணப்படும் பெரும் பாரம்பரிய மரபு (Great tradition) சிறு பாரம்பரிய மரபு (Little tradition) இவற்றிற்கு இடையே உள்ள சிக்கலான உறவை நாட்டுப்புறவியல் விரிவாக விளக்கிக் காட்டுகிறது.

நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக் கொண்டு நாட்டுப்புறவியல் மக்களது வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இனி இதில் எந்த விதத்தில் சமூகம் பற்றிய கருத்துகள் அமைந்துள்ளன என்று பார்க்கலாம்.

சமூக வாழ்க்கையைப் பற்றி முழுமையாக அறியக் குடும்பம், வழக்கம், ஒழுக்கம், மதம் போன்றவற்றை ஆராய்தல் அவசியம். சமூகவியலாளர் இதனைச் சமூகத்தின் நிறுவன அமைப்பு என்பர். இவற்றை நாட்டுப்புறவியலில் காணமுடியும்.

குடும்பம் சமூகத்தின் மூலக்கூறு. குடும்ப அமைப்புகளைக் கொண்டு கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம் என இருவகைப் படுத்தலாம். தாலாட்டுப் பாடல்கள் மூலம் குடும்ப உறவு முறைகளையும், சடங்குகளையும் அறிந்து கொள்ளலாம்.

இன்றைய சமுதாயத்தில் கூட்டுக் குடும்ப அமைப்பு மறைந்து தனிக் குடும்ப அமைப்பை நோக்கிச் செல்வதை நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் அறிகிறோம். அதே போன்று பலதார மணம் அருகி ஒருதார மணத்தை நோக்கிச் செல்லும் பண்பையும் பார்க்கிறோம்.

வாழ்வு தொடர்பான பழக்க வழக்கங்கள், சடங்குகள், சாவு தொடர்பான பழக்க வழக்கங்கள், சடங்குகள் போன்றவற்றையும் காணலாம்.

சான்று :

1. சாதிப் பிரச்சனை

முத்துப் பட்டன் கதைப் பாடல், சின்னத் தம்பி போன்ற கதைப் பாடல்கள் மூலம் சாதிப் பிரச்சனைகளைத் தெள்ளத் தெளிவாக அறிய முடிகிறது.

2. சொத்துரிமை

பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாத நிலையைக் காட்டும் கதைதான் நல்லதங்காள். ஒப்பாரிப் பாடல்களின் வாயிலாகக் கணவனை இழந்த பெண்ணின் ஆதரவு அற்ற நிலை பற்றி அறிய முடியும்.

### 3. வீர வழிபாடு

கதைப் பாடலின் தலைவர்களான காத்தவராயன், மதுரை வீரன் போன்றோரைத் தெய்வமாக வழிபடுதல் என்பது அத்தலைவர்களின் வீரத்தைப் போற்றும் மரபாகும். இந்த மரபினைச் சங்க காலத்தின் நடுகல் வழிபாட்டோடு தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

தன்மதிப்பீடு : வினாக்கள் – I

## 4.5 நாட்டுப்புறவியலும் மானுடவியலும் (**Folklore and Anthropology**)

தொடக்கக் காலத்திலிருந்து இன்றுவரை மனிதனின் உருவத் தோற்றம், பண்பாட்டு வளர்ச்சி இவற்றை ஆராய்வதே மானுடவியலாகும். மானுடவியலில் பலவகை உண்டு. அவை ஆதி மனிதனைப் பற்றி ஆராயும் மானுடப் பரிணாமம் (Human Evolution), இனக்குழுக்களின் உருவத் தோற்றத்தை ஆராயும் உருவத்தோற்ற மானுடவியல் (Physical Anthropology), வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனிதனின் சமூகவாழ்க்கையை ஆராய்கிற தொல்பொருளியல், மனிதப் பண்பாடு அதன் மூலக்கூறுகள், அமைப்பு, மாற்றங்கள் போன்றவற்றை ஆராயும் பண்பாட்டு மானுடவியல் போன்றவைகளாகும்.

சமூக அறிவியல் புலங்களில் மானுடவியல் புலம் நாட்டுப்புறவியலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. நாட்டுப்புறவியல் மானுடவியலின் ஒரு பிரிவாக இருப்பதுடன் பல்வேறு மானுடவியல் கூறுகளையும் தன்னுள் கொண்டு விளங்குகிறது. இரண்டிற்கும் சில வேற்றுமைகளும் காணப்படுகின்றன.

ஒற்றுமைகள்

இவ்விரண்டு இயல்களும் மனிதப் பண்பாட்டை ஆராய்வனவாகும்.

நாட்டுப்புறவியலாளர் பிறப்பு முதல் இறப்பு வரையிலுள்ள சடங்குகளை நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் ஆராய்கிறார். பண்பாட்டு மானுடவியலாளர் சமூக அமைப்பின் கீழ் இவற்றை ஆராய்கிறார்.

மானுடவியலாளர் ஓர் இனத்தின் பண்பாட்டினை ஆராயும் போது அவ்வின மக்களிடையே காணப்படும் பழங்கதைகள், நம்பிக்கைகள் முதலியவற்றை ஆராயாவிட்டால் அவரது ஆய்வு முழுமை பெறாது.

மரபு வழிப்பட்ட நம்பிக்கைள், கலை, கைவினைப் பொருட்கள், சடங்குகள், பழக்க வழக்கங்கள், முதலிய ஆய்வுகள் நாட்டுப்புறவியலுக்கும் மானுடவியலுக்கும் பொதுவானவையாகும்.

வேறுபாடுகள்

நாட்டுப்புறவியலும், மானுடவியலும் மிக நெருங்கிய தொடர்புடையவை என்றாலும் இரண்டிற்கும் இடையே சில குறிப்பிடத் தக்க வேற்றுமைகளும் காணப்படுகின்றன. அவற்றையும் தெரிந்து கொள்வது அவற்றை மேலும் புரிந்து கொள்ள உதவும்.

மானுடவியலாளரைப் பொறுத்தவரை நாட்டுப்புறவியல் என்பது பண்பாட்டின் ஒரு பகுதியே தவிரப் பண்பாட்டின் முழுமையான ஒன்றல்ல.

பொதுவாக மானுடவியலாளர் தங்கள் இனத்தின் பண்பாடுகளைத் தவிர்த்துப் பிற பண்பாடுகள் பற்றிப் படிப்பதையே முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால் நாட்டுப்புறவியலாளரோ தங்களது இனத்தின் பண்பாடு பற்றியும் தமக்கான சில குறிப்பிட்ட மரபுகளைப் பற்றியும் ஆர்வம் கொண்டுள்ளனர். ஆனால் தற்போது இவ்விரண்டு துறைகளிலுமே மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## 4.6 நாட்டுப்புறவியலும் மண்ணியலும் (**Folklore And Geology**)

பூமி பல மண் அடுக்குகளைக் கொண்டுள்ளது. இவ்வடுக்குகளில் பல உயிரியல் எச்சங்கள் (Fossils) படிந்துள்ளன. இவ்வாறான மண் அடுக்குகளின் வரலாற்றைப் படிப்பதற்காக உருவான மண்ணியல் ஒரு முக்கியமான அறிவியல் துறையாகப் பரிணாமம் பெற்றுள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாட்டுப்புறவியலின் கோட்பாடுகளுக்கு மண்ணியலும் (Geology) உயிரியலும் (Biology) பல மாதிரிகளைத் தந்துள்ளன. மண்ணியலின் பரிணாம வாதக் கருத்து நாட்டுப்புறவியலாளர்களையும் பாதித்தது. இதன் மூலமாகக் கீழ்க்கண்ட கருத்துகள் பெறப்பட்டன. அவை,

கடந்தகாலப் பண்பாட்டு மரபுகள் பல தலைமுறைகளாக ஒன்றிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பட்டுத் தற்காலத்தே பண்பாட்டு எச்சங்களாக மிஞ்சியுள்ளன எனக் கருதத் தூண்டியது.

ஒரு காலத்தில் உயிர்ப்புடன் விளங்கிய பண்பாட்டுக் கூறுகளே இன்றையே நாட்டுப்புற வழக்காறுகளாக உள்ளன எனக் கருதப்பட்டது.

இந்த மண்ணியல் கருத்தாக்கத்தின் பின்னணியில் நாட்டுப்புறவியல் கருத்தாக்கமும் புரிந்துகொள்ளப்பட்டு, நாட்டுப்புற வழக்காறுகள் சாக மறுத்து இன்றளவும் உயிருடன் இருக்கும் பழைய காலத்துப் பண்பாட்டு எச்சங்கள் தாம் என்பது உறுதி செய்யப்பட்டது.

## 4.7 நாட்டுப்புறவியலும் வரலாறும் (Folklore and History)

வரலாறு என்பது ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் கடந்த கால நிகழ்வைப் பற்றிக் கூறுவது ஆகும். வரலாற்றிற்குக் கல்வெட்டுக்களும், செப்புப் பட்டயங்களும், எழுத்திலக்கியமும் சான்றாகத் திகழ்வதைப் போல, நாட்டுப்புற இலக்கியங்களும் சான்றாகத் திகழ்கின்றன. இந்திய நாட்டுத் தொல் வரலாற்றை அறிய 1) மரபு, 2) தொல்பொருள் ஆய்வு, 3) ஒப்பு இலக்கியம் முதலியவற்றையும் பயன்படுத்துகின்றனர்.

மனிதனுடைய கடந்த காலத்தைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறுவதால், நாட்டுப்புறவியலையும் வரலாற்று அறிவியல் (Historical Science) என்று கூறுவர்.

வரலாறும் நாட்டுப்புறவியலும் மக்களுடைய எழுதப்படாத மரபுகளைப் பற்றி ஆராய்கின்றன.

வரலாற்றுப் பேரறிஞரும் நாட்டுப்புறவியல் பேரறிஞரும் பண்பாட்டு வரலாற்று மீட்டுருவாக்கத்தில் (Reconstruction of cultural history) ஆர்வம் உடையவர்கள்.

மரபு என்பது நாட்டுப்புறவியலுக்கும் வரலாற்றிற்கும் பொதுவானதாகும். வாய்மொழி மரபு நாட்டுப்புறவியலின் உயிர்நாடியாகும்.
சான்று :

நாட்டுப்புற இலக்கியத்தின் மூலம் ஒரு நாட்டின் வரலாற்றையும் அரசியல், சமூக வரலாற்றையும் அறிந்து கொள்ளலாம். கதைப் பாடல்களில் வரலாற்றுக் கதைப்பாடல்கள் (Historical Ballads) வரலாற்றை அறியப் பெருந்துணையாக உள்ளன.

இராமப்பய்யன் கதைப் பாடல் (கி.பி.1623 – 59) சடைக்கத் தேவனுக்கும் திருமலை நாயக்கரின் தளபதி இராமப்பய்யனுக்கும் நடந்த போரை விவரிக்கின்றது.

கட்டபொம்மன் கதைப் பாடலில் (கி.பி.1761 – 1799) ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்த முதல் வீரன். பாஞ்சாலங்குறிச்சிக்கும் எட்டயபுரத்துக்கும் ஏற்பட்ட பகைமை, ஆங்கிலேயருக்கும் கட்டபொம்மனுக்கும் ஏற்பட்ட மோதல், வெள்ளையம்மாளின் வீரம் அனைத்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தின், சமுதாய வரலாற்றை அறியலாம்.

நாட்டுப்புறவியல் துறையை மேற்கூறப்பட்ட துறைகளோடு மட்டுமல்லாது, புதியதாகத் தோன்றி வளர்ந்து வரும் மற்ற துறைகளோடும் ஒப்பிட்டு ஆராய்வதற்கும் இடம் உண்டு. அத்தகு ஆய்வுகளை, கண்டிப்பாக இனி வரும் ஆய்வாளர்கள் மேற்கொள்வார்கள்.

## 4.8 தொகுப்புரை

இப்பாடத்தில் நாட்டுப்புறவியலின் சிறப்புகள் புலனாகின்றன.

நாட்டுப்புறவியலின் மொழியியல் சிறப்புகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

நாட்டுப்புறவியலில் காணப்படும் உளவியல் கருத்துகளையும் காணலாம்.

நாட்டுப்புறவியலின் வழக்காறுகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனை பற்றியும் அறிய முடிகிறது.

நாட்டுப்புறவியலில் காணப்படும் பண்பாட்டு மரபினை மானுடவியலோடு ஒப்பிட்டும் பார்க்கப்படுகிறது.

நாட்டுப்புற இலக்கியத்தை மண்ணியல் அடிப்படையிலும் காணலாம்.

நாட்டுப்புறவியலில் காணப்படும் வரலாற்றுக் கூறுகளையும் பார்க்கிறோம்.

தன்மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 5

## A06115 நாட்டுப்புறவியல் - செய்தி சேகரிப்பும் கள ஆய்வும்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

நாட்டுப்புறவியல் வழக்காறு என்பது வாய்மொழி இலக்கியம் ஆகும். இவ்வாய்மொழிப் பாடல்களைப் பாடுவோரிடமும், கலைகளை நிகழ்த்துவோரிடமும் சென்று அவற்றைப் பற்றிய தரவுகளைப் பெறுவது செய்தி சேகரிப்பு, கள ஆய்வு எனப்படும். இவ்விரு செயல்பாடுகளையும் எடுத்துக் கூறி விளக்குவது இப்பாடப் பகுதியாகும்.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படித்து முடிக்கும்போது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறுவீர்கள்.

- தரவுகளைப் பெறுவதில் உள்ள நடப்பியல் சிக்கல்களைத் (Practical Problems) தெரிந்து கொள்ள முடியும்.
- தரவுகளைப் பெறுவதற்காகச் செல்பவர் எத்தகு பண்புகளை உடையவராக இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்.
- தரவுகளைத் தொகுத்து வகைப்படுத்தல் எங்ஙனம் என்பதைப் புரிந்து கொள்ள இயலும்.
- பதிவு செய்தல் என்பது எப்படிப்பட்ட நுணுக்கமான பணி என்பதை அறியலாம்.
- நாட்டுப்புறவியல் படைப்பாளிகளின் (Creators) முனைப்பும் தயக்கமும் பற்றி இப்பாடத்தைப் படிப்பதால் அறிய முடிகிறது.

## பாட அமைப்பு

5.0 பாட முன்னுரை
5.1 களத் தேர்வில் கவனிக்க வேண்டியவை
5.2 தரவுகளின் வகைகள்
5.3 அணுகுமுறைகள்
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
5.4 தொழில் நுட்பக் கருவிகளின் பயன்பாடு
5.5 பதிவு செய்தல்
5.6 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள்- II

## 5.0 பாட முன்னுரை

நாட்டுப்புறவியல் ஆய்வில் களப்பணி (field work) என்பது உயிர்ப்பு மிகுந்த பணியாகும். “நல்ல தொடக்கம் பாதிப் பணி முடிந்தது” என்று கூறுவதைப் போல, நாட்டுப்புறவியல் வழக்காறுகளைப் படிக்கவும் ஆராய்ச்சி செய்யவும் முற்படும் பொழுது, அந்தந்தக் களத்திற்குச் சென்று தரவுகளைப் பெறுவது நடந்தால், அதுவே பாதிப் பணி முடிந்ததைப் போல எண்ண முடியும். இப்பாடப் பகுதி, நாட்டுப்புறவியல் வழக்காற்றில் – கள ஆய்வியல் என்னும் தலைப்பில் நாட்டுப்புறப் பாடல்களை மட்டுமே எடுத்துக் கொண்டு விளக்குகிறது.

## 5.1 களத் தேர்வில் கவனிக்க வேண்டியவை

ஆய்வாளர் தனது ஆய்வுக்குத் தேவையான தரவுகளைச் சேகரிக்கத் தகவலாளிகளிடம் தாமே நேரடியாகச் சென்று தொடர்பு கொண்டு சேகரிக்க வேண்டியுள்ளது.

### 5.1.1 ஆய்வுக் களம்

ஆய்வாளர் களத்திற்குச் செல்வதற்கு முன்பே கவனிக்க வேண்டிய செயல்பாடுகள் குறித்து இனிப் பார்க்கலாம்

சான்றாக :

வில்லுப்பாட்டைப் பற்றி ஆய்வாளர் ஒருவர் ஆய்வு செய்ய முனைகிறார் என்றால் அவர் தமிழகத்தில் தென் மாவட்டங்களுக்கே களப்பணிக்குச் சென்றாக வேண்டும். பிற மாவட்டங்களில் வில்லிசை அதிகமாக வழக்கில் இல்லை. அதுபோன்று தெருக்கூத்தைப் பற்றி ஆய்வு செய்யும் ஆய்வாளர் தமிழகத்தின் வட மாவட்டங்களையே களப் பணிக்கான களமாகத் தேர்வு செய்ய வேண்டும். தென் மாவட்டங்களில் தெருக்கூத்துகளைக் காணவியலாது.

அதே போன்று களப்பணிக் களத்தைத் தேர்ந்தெடுக்கும் போது ஆய்வாளரின் நண்பர், உறவினர் போன்றோர் அக்களத்தில் வாழ்பவராக இருந்தால், அம்மக்களோடு தொடர்பு கொள்ள, உறவினை ஏற்படுத்திக் கொள்ள வசதியாக இருக்கும்.

### 5.1.2 கள ஆய்வில் செய்ய வேண்டியவை

நாட்டுப்புறவியல் ஆய்வாளர் ஆய்வு செய்யப்போகும் ஆய்வுக் களத்தைத் தேர்ந்தெடுத்த பின்னர், களம் பற்றிய விளக்கங்கள் அடங்கிய நூல்களைத் தொகுக்க வேண்டும். மேலும் அவை குறித்து மானுடவியலார், சமூகவியலார், வரலாற்றாய்வாளர், மொழியியல் துறையினர் போன்றோர் கள ஆய்வு செய்து நூல்கள் வெளியிட்டிருப்பின் அவற்றையும் தொகுத்து அறிய வேண்டும்.

1) மக்களின் பண்பாடு பற்றிய பொதுவான செய்திகளையும் கற்றறிதல் வேண்டும்.

2) அக்களத்தைக் குறித்துத் தொல்லியலாளர்கள் ஏதேனும் நூல்கள் எழுதியிருப்பின், அவற்றையும் சேர்த்துப் படித்தறிதல் வேண்டும்.

3) அக்களத்தைச் சார்ந்த சங்கத்தினர் பல்வேறு பொருள் குறித்துச் சிறு குறிப்புகள் வெளியிட்டிருப்பின், அவற்றைத் தொகுத்து அப்பகுதியைப் பற்றி அறிதல் அவசியம்.

4) பயணிகளுக்குரிய வழிகாட்டி நூல்கள் வெளியிடப்பட்டிருப்பின், அவற்றைப் படித்தறிதல் தேவையானதாகும்.

5) மக்கள் நல்வாழ்வுத் துறையின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறையினர் வெளியிட்டுள்ள அரசாங்க வெளியீடுகளைச் சேகரித்தல் வேண்டும்.

6) தேசிய, வட்டார, வரலாறுகள் போன்றவற்றைத் தொகுத்தறிதல், பத்திரிகைச் செய்திகளைத் திரட்டுதல் முக்கியம்.

7) நாட்குறிப்புகள், வட்டார மக்களுள் முக்கியமானோர் பற்றிய வரலாறு அறிதல் வேண்டும். அப்பகுதி மக்களைப் பற்றி, அப்பகுதியில் வாழும் எழுத்தாளரால் ஏதேனும் நாவல்கள் எழுதப்பட்டிருப்பின், அவற்றையும் படித்துணருதல் வேண்டும்.

மேலும் கள ஆய்வு செய்யப் போகும் இடம், அங்குச் செல்வதற்கான சாலை வசதிகள், அருகிலுள்ள பெரிய ஊர்கள், போக்குவரத்து வசதிகள், அங்குள்ள மக்களின் உணவுப் பழக்கங்கள் போன்ற செய்திகளை அறிந்து கொள்வதன் மூலம் ஆய்வாளர், கள ஆய்வின் போது தம்மைப் புதுமனிதராகக் காட்டாமல் பழகிய மனிதராக அறிமுகம் ஆகிறார்.

- பால் இன வேறுபாடு

கள ஆய்வின் போது ஆய்வாளர் எதிர்கொள்ள நேரிடும் பால் பாகுபாட்டுச் சிக்கல்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) ஆண் ஆய்வாளர் ஆண் தகவலாளியை அணுகும்போது ஏற்படும் சிக்கல்கள்.

2) ஆண் ஆய்வாளர் பெண் தகவலாளியை அணுகும்போது ஏற்படும் சிக்கல்கள்.

3) ஆண் ஆய்வாளருக்குப் பொது நிகழ்வுகளில் ஏற்படும் சிக்கல்கள்.

4) பெண் ஆய்வாளருக்குப் பொது நிகழ்வுகளில் ஏற்படும் சிக்கல்கள்.

5) பெண் ஆய்வாளர் பெண் தகவலாளியை அணுகும்போது ஏற்படும் சிக்கல்கள்.

6) பெண் ஆய்வாளர் ஆண் தகவலாளியை அணுகும்போது ஏற்படும் சிக்கல்கள்.

இச்சிக்கல்களை எல்லாம் ஆய்வாளர் முன்கூட்டியே தெளிவாக்கிக் கொண்டால், களப்பணியில் தான் சந்திக்கும் ஆண், பெண் தகவலாளிக்கு ஏற்ப நடந்து களப்பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

- வயது அடிப்படையில்

பாடல் வகைகள், எந்தெந்த வயதினரிடம் நடைமுறை வாழ்க்கையில் பயன்படுகிறதோ, அந்தந்தப் பாடல் வகைகளை அந்தந்த வயதினரிடம் சேகரிப்பதே எளிதானதும் பயன் தரத் தக்கதுமாகும். அதை அறிந்து, அதற்கேற்றபடி பாடல்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

சான்றாக :

ஏற்றப் பாடல்கள், மீன்பிடிப்புப் பாடல்கள், வளைகாப்புப் பாடல்கள் முதலியன வயதானவர்களிடம் மட்டுமே கிடைக்கக் கூடியவை.

- சாதி அடிப்படையில்

பலவிதமான சாதிகளைக் கொண்டது சமூகம். ஒவ்வொரு சாதிக்கும் என்று தனிப்பட்ட அடையாளம் காணப்படுகிறது. களப்பணியை மேற்கொள்கிற ஆய்வாளன் பலதரப்பட்ட சாதியைச் சார்ந்த தகவலாளிகளைக் காண நேரிடும். எனவே ஆய்வாளன் தான் சந்திக்க இருக்கும் தகவலாளி எந்தச் சாதி, சமூகத்தைச் சார்ந்தவர் என்பதை அறிந்து,

அந்தச் சாதியின் தனிப்பட்ட அடையாளங்கள், சடங்குகள், பழக்க வழக்கம் போன்றவற்றை அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடன் நெருங்கிப் பழகி உறவினை ஏற்படுத்திக் கொள்ள இயலும்.

## 5.2 தரவுகளின் வகைகள்

ஆய்வாளர் தன் ஆய்வுக்குப் பயன்படுத்தும் தரவுகளை இரண்டு வகையாகப் பகுக்கலாம்.

1) முதல் நிலைத் தரவுகள்

2) துணை நிலைத் தரவுகள்

### 5.2.1 முதல் நிலைத் தரவுகள்

ஆய்வுக் களத்திற்கு நேரடியாகச் சென்று காட்சி, உற்று நோக்கல், நேர்காணல், வினாத் தொகுப்பு போன்ற கருவிகளைக் கொண்டு திரட்டப்படும் தரவுகள் முதல் நிலைத் தரவுகளாகக் கொள்ளப்படும். பிறரால் சிதைக்கப்படாமலும், புனையப்படாமலும் ஆய்வாளருக்குக் கிடைக்கும் இத்தரவுகள் நம்பிக்கைக்கு உரியவையாகும். இவ்வாறு திரட்டப்படும் தரவுகள் ஆய்வாளரின் கருதுகோளை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ பயன்படுகின்றன. களப்பணியின் வாயிலாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் களப்பணியில் ஆய்வாளரால் தொகுக்கப் பெறும் வழக்காற்றுத் தரவுகளே மூல ஆதாரங்களாக, முதல் நிலைத் தரவுகளாக அமைகின்றன.

### 5.2.2 துணை நிலைத் தரவுகள்

ஆய்வுப் பொருள் தொடர்பாகத் தொகுக்கப்பட்டுள்ள முதல் நிலைத் தரவுகளோடு பொருந்தியும், துணையாகவும் வரும் பிற தரவுகள், துணை நிலைத் தரவுகளாகக் கொள்ளப்படும். இத்தரவுகளால் ஆய்வின் அடித்தளம் விரிவுபடுகின்றது. மூலத் தரவுகளைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட தனது ஆய்வின் முடிவுகளைத் துணை நிலைத் தரவுகள் மூலம் ஆய்வாளர் சரிபார்த்துக் கொள்ள இயலும். அச்சு வடிவில் வெளி வந்துள்ள செய்தி ஏடு, இதழ்கள், ஆய்விதழ், வானொலி உரைகள் போன்றவை துணை நிலைத் தரவுகளில் இடம் பெறுகின்றன.

சான்றாக :

‘தெருக்கூத்து’ பற்றிய ஆய்வில் தெருக்கூத்தைப் பல்வேறு சூழல்களில் உற்று நோக்கிக் கள ஆய்வில் திரட்டிய தகவல்கள், கூத்துக் கலைஞர்கள், பார்வையாளர் போன்றோரிடம் நிகழ்த்திய நேர்காணலின் வாயிலாகக் கிடைத்த தகவல்கள்; கூத்து தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள் ஆகியவற்றை முதல் நிலைத் தரவாகக் கொள்ளலாம். கூத்து, தமிழ் நாடகம் பற்றி வெளிவந்துள்ள ஆய்வேடுகள், நூல்கள், கட்டுரைகள் போன்றவற்றைத் துணை நிலைத் தரவாகக் கொள்ளலாம்.

## 5.3 அணுகுமுறைகள்

ஆய்வாளர் தன்னுடைய சுய விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்காமல் தரவுகளைச் சேகரிக்கும் திறன் உடையவராகவும், நம்பிக்கை உடையவராகவும் தகவலாளர்களிடம் இருந்து தரவுகளை முழுமையாகப் பெற்றுச் சேகரிக்கும் திறன் உடையவராகவும் இருக்க வேண்டும். சமூகம் ஏற்றுக் கொண்டவை பற்றியோ அல்லது ஏற்றுக் கொள்ளாதவை பற்றியோ கருத்தில் கொள்ளாமல் தரவுகளைச் சேகரிக்க வேண்டும். ஆய்வுக்கான தரவுகளைச் சேகரிப்பதில் பல்வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. அவை,

1) உற்று நோக்கல்

2) நேர் காணல்

3) வினாத் தொகுப்பு

இவற்றில் நுட்பமான உத்திகள் பலவும் மேற்கொள்ளப்படும்.

### 5.3.1 உற்று நோக்கல்

களப்பணித் தரவுச் சேகரிப்பில் முதன்மையான கருவி உற்று நோக்கல் என்பதாகும். உற்று நோக்கல் என்பது குறிப்பிட்ட நோக்கத்தை மனத்தில் வைத்துக் கொண்டு நடைபெறும் அல்லது நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு நிகழ்வை நுணுக்கமாக நோக்குவதாகும்.

உற்று நோக்கலின் வகைகள் :

1) பங்கு பெறும் உற்று நோக்கல் (Participant observation)

2) பங்கு பெறா உற்று நோக்கல் (Non-Participant observation)

3) செய்காட்சி முறை (Arrangement observation)

- பங்கு பெறும் உற்று நோக்கல்

பங்கு பெறும் உற்று நோக்கலில் நாட்டுப்புற வழக்காற்று நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் போது, அதில் ஆய்வாளரும் முழுமையாகப் பங்கு கொண்டு செயல்களில் விவாதங்களில் கலந்து கொள்வதாகும்.

சான்றாக :

நாட்டுப்புறப் பாடல்கள் சேகரிப்பில் பின்பாட்டுப் பாடுபவராகவோ, விடுகதைகளைப் போடுபவராகவோ, வில்லுப் பாட்டில் கதை கேட்கும் உதவியாளராகவோ வழக்காற்று நிகழ்வுகளில் தம்மை இணைத்துக் கொண்டு உற்று நோக்கலில் ஈடுபடலாம்.

- பங்கு பெறா உற்று நோக்கல்

ஆய்வாளர் ஆய்வுச் சூழல் மற்றும் நிகழ்விலிருந்து தன்னை முற்றிலுமாக விலக்கிக்

கொண்டு தரவுகளைத் திரட்டும் முறை பங்கு பெறா உற்று நோக்கல் எனப்படும். சமூகப் பண்பாட்டுச் சூழல்களையும், சிக்கல்களையும் ஆய்ந்திடப் பங்கு பெறா உற்று நோக்கல் சிறந்த முறையாகும். பங்கு கொள்ளாமல் பார்வையாளராக ஒதுங்கியிருந்து நிகழ்ச்சியைக் கவனிக்கும் போது, சேகரிப்பாளர் நிகழ்ச்சியின் இயற்கையான போக்கில் குறுக்கிடாமல் இருக்கின்றார். குறிப்புகள் எடுத்துக் கொள்ளவும், நிகழ்ச்சியினை ஒலிப்பதிவு செய்யவும், புகைப்படம் எடுக்கவும் அவருக்கு வாய்ப்புகள் உள்ளன. மேலும் தகவலாளிகளின் கவனத்தைத் திருப்பாமலும் இருக்கும். பங்கு பெறும் உற்று நோக்கலை மேற்கொள்ளும் ஆய்வாளருக்குக் கிடைக்கும் அனுபவப் பரப்பும், தகவல் அளவும் பங்கு பெறா உற்று நோக்கலை மேற்கொள்பவருக்குக் கிடைப்பதில்லை. மேலும் ஆய்வாளர் தம்முள் ஒருவராகக் கலக்காமல் பட்டும் படாமல் இருப்பதைப் பல நேரங்களில் தகவலாளர்கள் விரும்புவதில்லை. இத்தகைய இடர்ப்பாடுகள் இதில் காணப்படுகின்றன.

- செய்காட்சி முறை

செய்காட்சி முறை என்பது பரிசோதனை முறையில் ஆய்வாளர் தாமே ஒரு நிகழ்விற்கு ஏற்பாடு செய்து, தம் தேவைக்கேற்ப நிகழ்வின் காரணிகளைக் கட்டுப்படுத்தியும் நீக்கியும் உற்று நோக்குவதாகும். ஆய்வாளரே ஒரு நிகழ்வை உருவாக்கிச் செய்து காண்பதால் இது செய்காட்சி முறை எனப்படுகிறது.

ஆய்வாளர் இம்முறையைப் பயன்படுத்தித் துல்லியமான விடை காணும் வரை, எத்தனை முறை வேண்டுமானாலும் நிகழ்வை மீண்டும் மீண்டும் உருவாக்கி அறிந்து கொள்ளலாம். நிகழ்கலைகளின் ஆட்ட முறைகளைத் துல்லியமாகப் படம் எடுப்பதற்குச் செய்காட்சி முறை பயன்படுகிறது.

### 5.3.2 நேர்காணல்

ஆய்வாளர் தகவலாளரை நேரில் சென்று கண்டு உரையாடுவது நேர்காணல் ஆகும். இதனைப் பேட்டி முறை என்றும் குறிப்பிடுவர். நாட்டுப்புற வழக்காற்றுத் தகவலாளர்களில் பெரும்பாலானோர் கல்வியறிவு பெறாதவர்கள். ஆதலால், அவர்களிடம் தரவுகள் சேகரிக்க நேர்காணல் முறையே சிறந்ததாக அமைகிறது. நேர்காணலுக்கான இணக்கமான சூழ்நிலையை உருவாக்குவதும் உருவாக்கித் தருவதும் நேர்காணலின் முதல்படியாகும். தகவலாளரின் ஒத்துழைப்பின்றி நேர்காணலை வெற்றிகரமாக நடத்த இயலாது. நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு அதன் அடிப்படையில் நடத்தப்படும் நேர்காணலே சரியான தகவல்களைத் திரட்டித் தரும்.

களப்பணியில் தகவல் திரட்டுவதன் அடிப்படையில் நேர்காணலை இருவகைப் படுத்தலாம்.

1) கட்டமைப்புடைய நேர்காணல் (Structured Interview)

2) கட்டமைப்பில்லா நேர்காணல் (Unstructured Interview)

- கட்டமைப்புடைய நேர்காணல்

நேர்காணலின் நோக்கம், பயன், வினாக்கள், அணுகுமுறை ஆகிய அனைத்தையும் முன்னரே தீர்மானித்துத் திட்டமிட்டு நடத்தப் படுவதாகும். தரவுகளைத் துல்லியமாகப் பெற இம்முறை உதவும். ஆனால் இம்முறை இயல்பான சமூகச் செயலாக இல்லாமல் எந்திரத்தனமாகவும் செயற்கைத் தன்மையுடையதாகவும் ஆகிவிடலாம்.

- கட்டமைப்பில்லா நேர்காணல்

நேர்காண்போரின் திறமை, தகவலாளியின் மனநிலை, சூழல் இவற்றிற்கேற்ப அந்தந்த நேரத்தில் அமைத்துக் கொள்வது கட்டமைப்பில்லா நேர்காணல் ஆகும். இது நெகிழ்ச்சியும், இயல்புப் போக்கும் உடையது. முன்னரே வினாக்களை உருவாக்காமல் தகவலாளியை அணுகி நேர்காணலைத் தொடங்குவார். தகவலாளியும் பரந்த அளவில் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகள், வழக்காற்று அனுபவங்கள், எண்ணங்கள், உணர்வுகள் போன்றவற்றை இயல்பான போக்கில் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைப்பார். அதிலிருந்து ஆய்வாளர் தேவையானதை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். நாட்டுப்புற வழக்காற்றுக் களப்பணிக்குக் கட்டமைப்பில்லா நேர்காணல் மிகவும் பயன் தரும்.

### 5.3.3 வினாத் தொகுப்பு

ஆய்வுப் பொருள் குறித்த வினாக்களை எழுத்து வடிவில் பட்டியலாகத் தொகுத்துத் தகவலாளர்களிடம் கொடுத்துப் பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்வது வினா நிரல் முறை ஆகும். வினா வரைவு என்பது எழுத்துரையாக வரிவடிவில் அமைகின்றது. ஒரு பெருங்குழுவின் (சமூகக் குழு அல்லது இனக்குழு) சார்பாளராக உள்ள சில தகவலாளிகளைத் தேர்ந்தெடுத்து வினா நிரலை வழங்க வேண்டும். அவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளை ஆராய்ந்து அதில் கிடைக்கும் முடிவுகளை இறுதியானவைகளாகக் கொள்ள வேண்டும். இந்த முடிவுகள் பெருமளவில் அக்குழு முழுவதற்கும் பொருந்துவதாக அமையும். அப்பெருங்குழு முழுமைக்கும் பொதுவானதாக அமையும் தன்மை இவ்வினா நிரலுக்கு உண்டு. இனவரைவியல், நிகழ்கலைகள், வழக்காறுகள் குறித்த கருத்துக் கணிப்புகளுக்கு வினா நிரல் முறையைப் பயன்படுத்தி விடை காணலாம். ஆனால் நாட்டுப்புறவியல் ஆய்வுகளைப் பொறுத்த வரையில் வினா நிரலின் பயன்பாடு குறைவு என்றே கூறலாம்.

நாட்டுப்புற வழக்காறுகளை எடுத்துரைப்போர் நிகழ்கலைக் கலைஞர்கள், நாட்டுப்புறப் பார்வையாளர்கள், சடங்குகளை நிகழ்த்துவோர் ஆவர். அவர்கள் பெரும்பாலும் கல்வியறிவு குறைந்தவர்களாக உள்ளனர். இவர்களிடம் வினா நிரலைக் கொடுத்துத் தகவலைப் பெறுதல் என்பது இயலாத செயல்.

- உதவியாளர் மூலம் அணுகுதல்

ஆய்வாளர் தரவுகளைச் சேகரிக்கக் களத்திற்குத் தானாக நேரடியாகச் செல்லாமல், அக்களப்பகுதியில் வாழும் நண்பர், உறவினர் போன்றவரின் மூலம் அம்மக்களோடு தொடர்பு கொண்டு, உறவினை ஏற்படுத்திக் கொள்ளுதல் மற்றொரு முறை. இவ்வாறு உதவுபவர் அவருக்குத் தகவலாளியாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை.

ஆய்வாளர் அரசு அதிகாரிகளையும் தமக்கு உதவுபவர்களாக வைத்திருக்கக் கூடாது. அவர்களுடன் தொடர்பு இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் மூலம் மக்களை அணுகக் கூடாது. அவ்வாறு அணுகும் போது ஆய்வாளருக்குப் பல வேளைகளில் உண்மையான தகவல்கள் கிடைக்காமல் போகலாம்.

இவ்வாறு நமக்கு உதவுபவரைத் தெரிவு செய்வதில் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் ஒருவரைத் தெரிவு செய்தபின் ஆய்வுக் களத்தில் உள்ள மக்கள் ஆய்வாளரை அவரது நண்பராகவோ அல்லது உறவினராகவோதான் பார்ப்பர். அவரை மக்கள் எவ்வாறு நோக்குகிறார்களோ அவ்வாறே ஆய்வாளரையும் நோக்குவர். எனவே

ஆய்வாளர் இதில் கவனமாகச் செயல்பட்டால் கள ஆய்வின் போது பல தொல்லைகளைத் தவிர்க்கலாம்.

### தன்மதிப்பீடு : வினாக்கள் – I

## 5.4 தொழில் நுட்பக் கருவிகளின் பயன்பாடு

இன்றைய ஆய்வுகள் அறிவியல் அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆதலால் ஆய்வில் பயன்படுத்தப்படும் கருவிகளும் அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்தவைகளாகவே உள்ளன. பொதுவாக ஆய்வுப் பொருள் தொடர்பான தரவுகள் மூன்று வழிகளில் சேகரித்துப் பதிவு செய்யப்படுகின்றன. அவை,

1) மரபு வழிச் சேகரிப்பு முறை (Traditional Media)

2) அச்சுச் சாதனங்களின் வழிச் சேகரிப்பு முறை (Printing Media)

3) மின்னணுச் சாதனங்களின் வழிச் சேகரிப்பு முறை (Electronic Media)

### 5.4.1 மரபுவழிச் சேகரிப்பு

தொழில் நுட்பக் கருவிகளின் துணையின்றித் தரவு சேகரிக்கும் முறை. தொடக்கக் காலத்தில் களப்பணி ஆய்வு மேற்கொண்டோர் தகவலாளர்களிடமிருந்து பெறும் தரவுகளையும் தகவல் அறிக்கைகளையும் களப்பணிக் குறிப்பேடுகளில் குறிப்பெடுத்துப் பதிவு செய்து கொண்டனர். நாட்டுப்புற வழக்காறுகள், நிகழ்கலைகள், சடங்குகள், திருவிழாக்கள் தொடர்பான தகவல்களை உற்று நோக்கல், நேர்காணல் மற்றும் வினா நிரல்களின் மூலம் கண்டறிந்து ஆய்வாளர்கள் குறிப்பேடுகளில் பதிவு செய்து அவற்றை ஆய்விற்கு உட்படுத்தினர். இத்தகைய சேகரிப்பு முறை கட்டுப்பாடற்றது, சுதந்திரத் தன்மையுடயது; பொருளாதாரச் சிக்கனமுடையது.

### 5.4.2 அச்சுச் சாதனங்களின் வழிச் சேகரிப்பு

நாட்டுப்புறக் கலைஞர்கள், திருவிழா, தெய்வ வழிபாடுகள் குறித்து வெளிவரும் செய்திகளை அறிந்து, அவை ஆய்விற்குத் தேவைப்படுமானால், உடனே களப்பணி செய்து தகவல்களைத் திரட்ட இம்முறை வாய்ப்பு ஏற்படுத்தித் தருகின்றது. மேலும் நம் ஆய்விற்குத் தேவையான தகவல்களைப் பத்திரிகைகளின் வாயிலாக விளம்பரம் செய்து வெளியிட்டு, அதன் மூலம் தகவல்களைச் சேகரிக்கும் வழியும் இதில் உள்ளது. அச்சிட்டு வெளியிடப்படும் ஏடு, மலர்கள், நூல்கள், ஆய்விதழ்கள், வரலாற்றுக் குறிப்புகள் போன்றவற்றில் இடம்பெறும் செய்திகளைத் தகவல்களாக மாற்றிக் கொள்ளுதல் ஆகிய பயன்பாடு அச்சுச் சாதனச் வழிச் சேகரிப்பு முறையில் உள்ளது.

### 5.4.3 மின்னணுச் சாதன வழிச் சேகரிப்பு

ஒலிப்பதிவுக் கருவி, ஒளிப்படக் கருவி, ஒலிஒளிப்படக் கருவி, இணையம் (Internet) ஆகிய சாதனங்கள் மின்னணுச் சாதனங்களாக இங்குக் குறிப்பிடப்படுகின்றன. தொழில்நுட்பக் கருவிகள், களப் பணியைப் பொறுத்தவரை, தகவல்களை நுட்பமாகவும் நுணுக்கமாகவும் பெற்றுத் தருவதிலும், தரவுகளை ஆவணப்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றி வருகின்றன.

## 5.5 பதிவு செய்தல்

வழக்காறுகளைப் பதிவு செய்வதில் மூன்று முறைகள் உள்ளன. அவை,

1) இயற்கைச் சூழலில் பதிவு செய்தல்

2) செயற்கைச் சூழலில் பதிவு செய்தல்

3) செயற்கைச் சூழலை இயற்கைச் சூழலாக மாற்றிப் பதிவு செய்தல்

### 5.5.1 இயற்கைச் சூழல்

இயற்கைச் சூழலில் பாடல்களைச் சேகரிப்பது என்பது எளிதில் இயலாத ஒன்றாகும். ஏனென்றால் இயற்கைச் சூழல் என்பது பாடல் வழங்கப்படும் சமுதாயச் சூழலாகும். இயற்கைச் சூழலில் பாடல்களைச் சேகரிக்க ஆய்வாளர் பல ஆண்டுகள் நேரத்தைச் செலவிட வேண்டும். சில சமயங்களில் ஆய்வாளர் முழுமையான வெற்றி அடையாமலும் போகலாம். காரணம், ஒப்பாரிப் பாடலை அது பாடப்படும் சூழலில் பதிவு செய்ய முனைவது நாகரிகமற்ற செயலாகக் கருதப்படும். அதே போன்று தொழிற் பாடல்களை அவை வழங்கப்படும் சூழலில் பதிவு செய்ய முயல்வது அவர்களின் கவனத்தைத் திசை திருப்பலாம். பதிவு செய்யப்படும் பாடலும் தெளிவாக இருக்காது. மேலும் ஆய்வாளர் ஆணாக இருந்தால் இளம் பெண்கள் கும்மியடிக்கும் இடங்களுக்குச் சென்று பாடல் பதிவு செய்வதைச் சமுதாயக் கட்டுப்பாடு அனுமதிக்காது. இது போன்ற பிரச்சனைகள் ஆய்வாளருக்கு ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

### 5.5.2 செயற்கைச் சூழல்

ஆய்வாளர் பாடல்கள் சேகரிப்பதற்காகத் தகவலாளியை ஓரிடத்திற்கு வரவழைத்து, தாலாட்டு, தொழிற் பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், இழப்புப் பாடல்கள் முதலிய பல்வேறு சூழல்களில் பாடப்படும் பாடல்களைப் பாடச் செய்து பதிவு செய்தல், செயற்கைச் சூழலில் பாடல்களைப் பதிவு செய்யும் முறையாகும். சிறுமியர் பாட்டு, கும்மிப் பாட்டு, விளையாட்டுப் பாடல்கள் போன்ற சிறுசிறு பாடல்களை இம்முறையில் பதிவு செய்தல் எளிது. ஆனால் நீண்ட பாடல்களை இம்முறையில் சேகரிக்கும்போது சில இடர்ப்பாடுகள் ஏற்படலாம்.

சான்றாக :

ஒரு சிலர் மட்டுமே செயற்கைச் சூழலில் பாடும் திறன் உடையவர்களாக இருப்பர். பெரும்பான்மையோர் பாடப்படும் சூழலில் தங்களை மறந்து ஈடுபடும் நிலையில் மட்டுமே சரளமாகப் பாடுவர். மற்ற சூழ்நிலைகளில் பாடும்போது பாடல்கள் சரளமாக வராமல் இடையில் நிறுத்தி விடுவர்.

### 5.5.3 சூழல் மாற்றம்

செயற்கைச் சூழலில் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக ஆய்வாளர் பாடல் பாடப்படும் இயற்கையான சூழலையோ அல்லது அதே போன்றதொரு சூழலையோ தோற்றுவித்துப் பாடலைப் பதிவு செய்யும் முறை.

சான்றாக :

கும்மிப் பாடலைச் சேகரிக்க வேண்டுமென்றால் ஒருவரை வரவழைத்துப் பாடச் சொல்லாமல், ஒரு குழுவினரை அழைத்துக் கும்மியடித்துப் பாடச் செய்வது. இல்லையென்றால், ஓரிடத்தில் இருந்து கொண்டே குழுவினரைக் கையைச் சீராகத் தட்டச் செய்து, பின்பாட்டுப் பாடச் செய்ய வேண்டும். இச்சூழலில் சேகரிக்கப்படும் பாடல்கள் இயற்கைச் சூழலில் பாடப்படும் பாடல்களை ஒத்திருக்கும்.

## 5.6 தொகுப்புரை

நாட்டுப்புறவியல் ஆய்வாளர் தனது ஆய்விற்கான தரவுகளைத் தகவலாளியிடமிருந்து பெறுவதற்குத் தாமே நேரடியாகக் களத்திற்குச் சென்று சேகரிக்கின்றார்.

களத்தினைத் தேர்ந்தெடுத்தல், உதவியாளரைத் தேர்ந்தெடுத்தல், களத்திற்குச் செல்வதற்கு முன்-பின் தான் கவனிக்க வேண்டியவை இவற்றை ஆய்வாளர் முன் கூட்டியே சரியாகத் திட்டமிட்டுக் கொள்கிறார்.

ஆய்வாளர் தரவுகளைச் சேகரிக்கக் கையாளும் அணுகுமுறைத் திறன் முக்கியமானது. அதற்காகப் பயன்படும் தொழில்நுட்பக் கருவிகளும், அவற்றின் பயனும் சொல்லப்பட்டுள்ளது.

கள ஆய்வினைத் திட்டமிட்டுத் தெளிவோடு நிறைவேற்றினால், ஆய்வாளர் தனது ஆய்வுப் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும். இவ்வாறு கள ஆய்வு குறித்தும் தரவுகளின் சேகரிப்புக் குறித்தும் அறிந்து கொண்டு படிக்கத் தொடங்குங்கள்!

தன்மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 6

# A06116 நாட்டுப்புறவியல் கோட்பாடுகள்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

நாட்டுப்புறவியல் வழக்காறுகளை ஆராய்ச்சி செய்த நாட்டுப்புறவியல் அறிஞர்கள் சில கருத்துகளை வரன்முறைப்படுத்தி எடுத்துரைத்துள்ளனர். இத்தகு வரன்முறைகளைக் கோட்பாடுகள் என்று கூறலாம். இக்கோட்பாடுகளை விளக்குவதே நாட்டுப்புறவியல் கோட்பாடு என்ற இப்பாடப் பகுதி.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படித்து முடிக்கும்போது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறுவீர்கள்.

- நாட்டுப்புறவியல் வழக்காறுகள் எங்ஙனம் ஒரு கட்டமைப்புக்குள் (Structure) அமைந்துள்ளன என்பதை அறியலாம்.
- இலக்கியம், கலை என்பனவற்றைப் பற்றிய கூடுதல் விளக்கத்தைக் கோட்பாடுகள் எடுத்துரைக்கின்றன.
- ஆய்வு மேற்கொள்வதற்கும், வழக்காற்றினை நன்கு புரிந்து கொள்ளவும் இப்பாடப் பகுதி உதவும்.
- கோட்பாட்டு விளக்கம் என்பது நாட்டுப்புற வழக்காற்றின் வளத்தினை, சிறப்பினைக் கூறுவதேயாகும்.

# பாட அமைப்பு

6.0 பாட முன்னுரை
6.1 கோட்பாடு
6.2 அமைப்பியல் கோட்பாடு
6.3 வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
6.4 சூழல் கோட்பாடு
6.5 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 6.0 பாட முன்னுரை

நாட்டுப்புற வழக்காற்றிலுள்ள இலக்கிய வகைப்பாடுகளையும், கள ஆய்வினையும் புரிந்து கொண்டீர்கள், இவற்றை ஒரு குறிப்பிட்ட கட்டமைப்புக்குள் எங்ஙனம் அமைத்துள்ளனர் என்பதை இப்பாடப் பகுதி வாயிலாகத் தெரிந்து கொள்ள முடியும். ‘நாட்டுப்புறவியல் வரலாறு’ என்ற தலைப்பிலான பாடப் பகுதியில், முன்னுரைப் பகுதி ‘நாட்டுப்புறவியல் – ஓர் அறிமுகம்’ என்றால், முடிவுரையாக அமைவது ‘நாட்டுப்புறவியல் – கோட்பாடுகள்’ என்ற பாடப் பகுதியாகும்.

# 6.1 கோட்பாடு

இப்பாடப் பகுதியில் நாட்டுப்புறவியல், கோட்பாடுகள் என்ற இரு பகுதிகள் உள்ளன. இதில் நாட்டுப்புறவியல் குறித்த விளக்கங்களை முந்தைய ஐந்து பகுதிகளும் விளக்கியுள்ளன. எனவே கோட்பாடு என்ற சொல்லாட்சி விளக்கத்தோடு, நாட்டுப்புறவியலில் இக்கோட்பாடு எங்ஙனம் பொருந்தியுள்ளது என்பதையும் எடுத்துரைப்பது இப்பாடப் பகுதியாகும். கோட்பாடு என்பதை ஒரு கருத்தாக்கம் (ideology) என்பர் அறிஞர்கள். கொள்கையின் தன்மையினைக் கொண்டதே கோட்பாடு.

- சொல்லாட்சி

‘கற்பு’ என்பது ஒரு கோட்பாடு. நடைமுறை வாழ்வில் நாம் ஏற்றுக் கொண்டுள்ள கோட்பாடு. இதன் வாழ்வியல் நெறிமுறை (Standard of life) என்னவென்றால், ‘ஒருவனுக்கு ஒருத்தி’ என்பதாகும். எனவே ஓர் ஆணும், ஒரு பெண்ணும் மட்டுமே, சமுதாய நிகழ்வாகிய திருமணச் சடங்கின் மூலம் இணைந்து வாழும் வாழ்க்கையே கற்புக் கோட்பாட்டினைக் கொண்டது என்று கூறப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு கொள்கையின் சிந்தனைத் தெளிவினாலும் – ஏற்றுக் கொள்ளல் என்பதாலும் – சமுதாய நிலைப்பாட்டினாலும் கோட்பாடுகள் உருவாகின்றன.

## 6.1.1 நாட்டுப்புறவியல் கோட்பாடு

நாட்டுப்புற வழக்காறுகளைப் புரிந்து கொள்வது என்பது அவற்றைச் சேகரிப்பதிலும், தொகுப்பதிலும், வெளியிடுவதிலும், ஆவணப் படுத்துவதிலும் மட்டும் அடங்கி இருப்பதில்லை; அதனையும் தாண்டி, பல்வேறு கோட்பாடுகளின் அடிப்படையில் அவற்றைப் புரிந்து கொள்வதிலும் அர்த்தப்படுத்துவதிலும்தான் அடங்கி இருக்கிறது.

- கோட்பாடுகளின் நோக்கம்

உலகளாவிய நாட்டுப்புறவியல் ஆய்வு என்பது நாட்டுப்புறவியலின் தனித்த சிறப்பான விரிந்த நோக்கப் பார்வையாகும். அதாவது நாட்டுப்புற வழக்காறுகளை வட்டார, தேசிய, சர்வ தேசிய அளவில் புரிந்து கொள்ளுதல்; இதற்குப் பல்வேறு வகையான வழக்காறுகளை, பல்வேறு வட்டார, மொழி, பண்பாட்டுச் சூழல்களிலிருந்து திரட்டி அவற்றை ஒப்பாய்வு செய்தல்; அவற்றுக்கு இடையில் காணப்படும் உலகளாவிய கூறுகளைக் கண்டுபிடித்தல் ஆகியவையே இதன் அடிப்படை நோக்கமாகும். மேலும் நாட்டுப்புற வழக்காறுகளில் பண்பாட்டுத் தனித் தன்மைகளையும், அத்தனித் தன்மைகளுக்கான காரணங்களையும் அறிவதும் இக்கோட்பாடுகளின் நோக்கமாகும்.

## 6.1.2 கோட்பாடுகளின் பயன்பாடு

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த நாட்டுப்புறவியல் பேரறிஞர் ரிச்சர்ட் எம். டார்சன் பன்னிரண்டு ஆய்வுக் கோட்பாடுகளைப் பற்றிக் கூறுகின்றார். இவை அனைத்தும், அக்கோட்பாடுகள் தோன்றிய காலக்கட்டங்களில் செல்வாக்குச் செலுத்திய அறிவியல், சமூக அறிவியல் முதலிய அறிவுப் புலங்கள் முன்வைத்த வாய்பாடுகளின் (Paradigms) அடிப்படையில் உருவானவை ஆகும். 19ஆம் நூற்றாண்டைப் பொறுத்த வரை பரிணாம வாதம் (Evolutionism), தேசிய வாதம் (Nationalism), வரலாற்று மீட்டுருவாக்கம் (Historical Reconstruction) போன்றவை நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோட்பாடுகளுக்கு வழிகாட்டிகளாக அமைந்தன.

20ஆம் நூற்றாண்டில் அமைப்பியல் வாதம், பண்பாட்டியல் கோட்பாடு, சூழலியல் கோட்பாடு, நிகழ்த்துதல் கோட்பாடு முதலியன வழிகாட்டிகளாக அமைந்தன. 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலக்கியம் மற்றும் சமூக அறிவியல் புலங்களில் வளமடைந்த பின்நவீனத்துவம், குறியியல், பொருள் கோடலியல், உளப்பகுப்பாய்வு போன்ற கோட்பாடுகள் தோன்றின. இக்கோட்பாடுகள் இன்றைய நாட்டுப்புற வழக்காறுகளை ஆய்வு செய்வதற்கு மிகவும் பயனுள்ளவையாக உள்ளன.

நாம் மேற்கொள்ளும் கோட்பாடுகளில் எதை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தாலும் அவ்வாய்வு ஒரு குறிப்பிட்ட பண்பாட்டிற்குள் சுருங்கிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது, எந்த ஒரு கோட்பாட்டையும் பல பண்பாட்டுச் சூழல்களிலும் ஆராய்ந்து அக்கோட்பாடு பல பண்பாடுகளுக்கும் பொருந்துகிறதா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பொருத்தமாக அமைந்தால்தான் அக்கோட்பாடு உலகளாவிய பயன்பாட்டைக் கொண்டதாகக் கருதப்படும். அதே சமயம் அவ்வாறு சொல்லப்படுகின்ற கோட்பாட்டை அப்படியே எல்லாரும் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் சொல்ல முடியாது. ஆதரவு, எதிர்ப்பு, மாற்றம், எல்லாமே தோன்றும். ஆனால் அவை அனைத்தும் அக்கோட்பாட்டின் வளர்ச்சிக்கு உதவும். கோட்பாடு வெற்றி பெற வேண்டும் என்றால் அதில் நம்பகமான தரவுகள், ஆழமான பகுப்பாய்வு, அறிவுப் பூர்வமான அல்லது தர்க்கப் பூர்வமான விவாதங்கள், பல பண்பாடுகளுக்கும் பொருந்தும் தன்மை போன்றவைகள் இருப்பது முக்கியம் ஆகும்.

### 6.1.3 கோட்பாட்டின் வகை

நாட்டுப்புறவியல் கோட்பாடுகளை இருவகைப்படுத்தலாம்.

1) இருநிலைக் காலக் கோட்பாடுகள்(Diachronic Theories)

2) ஒருநிலைக் காலக் கோட்பாடுகள்(Synchronic Theories)

- இருநிலைக் காலக் கோட்பாடுகள் (DiachronicTheories)

இருநிலைக் காலக் கோட்பாடுகள் (Diachronic Theories) கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் இணைப்பவையாக அமையும். தோற்றம், பரிணாமம், மரபுகள், வரலாற்று மீட்டுருவாக்கம், தேசிய வாதம், காதலின்பம் (Romantic) பற்றிய கோட்பாடுகள் இந்த வகையைச் சார்ந்தவையாகும். இந்தக் கோட்பாடுகள் 19ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்றிருந்தன.

- ஒருநிலைக் காலக் கோட்பாடுகள் (Synchronic Theories)

20ஆம் நூற்றாண்டில் ஒருநிலைக் காலக் கோட்பாடுகள் முக்கியத்துவம் பெற்றன. இக்கோட்பாடுகள் நிகழ்காலத்திற்கு முக்கியத்துவம் தந்தன. அமைப்பு, வடிவம், அர்த்தம், பயன்பாடு முதலியவற்றுக்கு முக்கியத்துவம் தந்தன.

கோட்பாடுகள் என்பன முடிவானவை என்பதல்ல. அவை, நாட்டுப்புற மரபுகள், வழக்காறுகள் போன்றவற்றைப் புரிந்து கொள்ள உதவும் கருவிகளே. முன்னமே சொன்னது போல 12 கோட்பாடுகளை நாட்டுப்புற வழக்காற்று அறிஞர்கள் முன்வைக்கின்றனர். ஆனால் நம் பாடப் பகுதியில் பக்க வரையறை கருதி மூன்று கோட்பாடுகள் மட்டுமே விளக்கப் பெறுகின்றன. அவையாவன:

- அமைப்பியல் கோட்பாடு
- வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு
- சூழல் கோட்பாடு

## 6.2 அமைப்பியல் கோட்பாடு

அமைப்பியல் கோட்பாட்டினை அறிந்து கொள்வதற்கு முன் அமைப்பியல் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

நாட்டுப்புற வழக்காற்றுக் கதைகளின் பகுதிகளாகிய உறுப்புகளின் விளக்கமும், பகுதிகளாகிய உறுப்புகள் ஒன்றோடு ஒன்று கொள்ளும் உறவும், பகுதிகள் முழுமையோடு கொள்ளும் உறவும் அமைப்பியல் ஆகும். ஆக, அமைப்பியல் என்பது நாட்டுப்புற வழக்காற்றின் உள்ளடக்கத்தைப் பகுத்தும் – தொகுத்தும் – இணைத்தும் அறிந்து கொள்வது எனலாம்.

### 6.2.1 அமைப்பியல் கோட்பாட்டின் வளர்ச்சி

1960ஆம் காலக்கட்டத்தில் அமெரிக்காவின் நாட்டுப்புற அறிஞர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற கோட்பாடு அமைப்பியல் கோட்பாடு. இக் கோட்பாட்டின் தந்தை ருஷ்ய நாட்டுப் பேரறிஞர் விளாடிமிர் பிராப் ஆவார். பிராப் தம்முடைய நாட்டார் கதைகளின் உள்ளமைப்பு (Morphologija Skazki) என்ற நூலை 1928இல் வெளியிட்டார். இந்நூல் 1958இல் அமெரிக்காவில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது. இந்நூல் ‘நாட்டுப்புற வழக்காற்றியல்’ துறையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. பிராப்பின் கருத்தின்படி வழக்காற்றுக் கதைகளின் தோற்றம் பற்றி ஆய்வு செய்வதற்கு முன்னால் அக்கதைகள் பற்றி விளக்கம் செய்தல் வேண்டும். மேலும் அவர், எல்லா ஆய்வுகட்கும் அடிப்படை, வகைப்படுத்துதல்தான். ஆனால் அது சில முதல்நிலை ஆராய்ச்சிகளுக்குப் பின்னரே நடைபெற வேண்டும் என்கிறார், வகைப்படுத்துதல் புறப்பண்புகளைக் கொண்டு அமையாது. சான்று மூலங்களின் உட்பண்புகளைக் கொண்டே அமைய வேண்டும் என்கிறார். பிராப் தம்முடைய ஆய்விற்கு அஃபனேசவ் என்பார் தொகுத்த நூறு தேவதைக் கதைகளை (Narodnyc russkie skzhi by A.N.Afanasev) எடுத்துக் கொண்டார். தேவதைக் கதைகள் (Fairy Tales) தனித்ததொரு வகையின. ஆன்ட்டி ஆர்னி என்பார் தாம் வகைப்படுத்திய கதை வகை அமைவில் 300 முதல் 749 வரை உள்ளவற்றைத் தேவதைக் கதைகள் என்று குறிப்பிட்டார். பிராப் ஒப்பீடு செய்வதற்காகத் தேவதைக் கதைகளின் உறுப்புகளைத் தனித்ததொரு முறைகொண்டு பிரித்தார். உறுப்புகளின் அடிப்படையில் அவை ஒப்பிடப்பட்டன. அவ்வாறு ஒப்பிட்டதின் விளைவாக அமைப்பியல் உருவாயிற்று.

### 6.2.2 அமைப்பைக் கண்டறிதல்

இலக்கிய வகை ஒன்றின் அமைப்பைக் கண்டுபிடிப்பதற்கு எவை மாறாதவை (constants), எவை மாறுபவை (variables) என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும்.

சான்று

பிராப் சில வாக்கியங்களைக் கூறி அவற்றின் நிலைத்த கூறு என்று எவற்றைக் கூறலாம் என்பதையும் விளக்கியுள்ளார்.

1) ஒரு ஜார் ஒரு கழுகை ஒரு வீரனுக்குக் கொடுக்கிறான். அந்தக் கழுகு அந்த வீரனை வேறொரு நாட்டுக்குக் கொண்டு செல்லுகிறது. (ஜார் = ரஷிய மன்னர்)

2) ஒரு முதியவர் கசென்கோவிற்கு ஒரு குதிரையைக் கொடுக்கிறார். அந்தக் குதிரை

கசென்கோவை வேறொரு நாட்டிற்குக் கொண்டு செல்கிறது.

3) ஒரு மந்திரவாதி இவனுக்குப் படகைக் கொடுக்கிறான். அந்தப் படகு இவனை வேறொரு நாட்டுக்குக் கொண்டு செல்கிறது.

4) ஓர் இளவரசி இவனுக்கு ஒரு மோதிரம் கொடுக்கிறாள். அந்த மோதிரத்திலிருந்து சில இளைஞர்கள் தோன்றி இவனை வேறொரு நாட்டுக்குச் சுமந்து செல்கின்றனர்.

மேற்சொல்லப்பட்ட நான்கு கதைகளில் இரண்டு வகையான தன்மைகளைப் பார்க்க முடிகிறது.

1) நிலையானது.

2) நிலையற்றது.

நிலையற்றது என்று எடுத்துக்கொண்டால் கதைப் பாத்திரங்களின் பெயர்கள், இயல்புகள், அனுப்புகின்றவர், கொடுக்கப்படுகின்ற பொருள் இவைகள் வேறுபடுகின்றன.

நிலையானது என்று எடுத்துக் கொண்டால் பாத்திரங்களின் செயல்பாடுகள், அனுப்புவதும், போவதும், கொடுக்கப்படுவதும் நிலையானவை. இவைகளைத் தான் செயல் என்று கூறுகிறார் பிராப். இந்தச் செயல் (வினை- function) தான் கதைகளின் அடிப்படை அலகு.

பிராப் கதைகளின் மாதிரி (Model) அமைப்பினை உருவாக்கினார். அதில் முப்பத்தொரு வினைகளைப் பற்றிக் கூறுகின்றார். அந்த வினைகளுக்கான குறியீட்டையும் அமைத்துள்ளார். இந்தக் குறியீடுகள் பல்வேறு கதைகளை ஒப்பிடும் திட்டத்திற்குப் பின்னர் உதவும். கதைத் தொடக்கச் சூழலில் ஆரம்பித்து முப்பத்தொரு வினைகளையும், குறிகளையும் பார்க்க வேண்டும்.

இந்த 31 வினைகளும் ஒரே கதையில் இடம்பெற வேண்டும் என்ற கட்டாயமில்லை. சில வினைகள் சில தனித்த கதைகளில் இடம்பெறாமலும் அமையலாம். ஆனால் வினைகளின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். மேலும் அவற்றின் வரன்முறை அடுக்கு நிலையானதாகவும் அமையும். கதாபாத்திரங்களின் எண்ணிக்கை பெரும்பாலும் 7ஆக அமையும்.

### 6.2.3 நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள்

பிராப்பிற்கு பின்னர் வந்த ஆய்வாளர்கள் பிராப்பின் அமைப்பியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தம் ஆய்வை மேற்கொண்டாலும் சில தன்மைகளில் வேறுபட்டனர். அவற்றைப் பற்றி இனிப் பார்க்கலாம். அவை அமைப்பியல் வளர்ச்சி நிலையினை அறிய உதவும்.

- ஆலன் டண்டிஸ்

இவர் பிராப்பின் தேவதைக் கதைகளின் அமைப்பியல் மாதிரியை மாற்றியமைத்து வட அமெரிக்க இந்திய நாட்டார் கதைகளுக்குப் பொருத்தி ஆய்வு செய்தார். அமைப்பியல் ஆய்வை நாட்டார் கதைகளில் மட்டும் அல்லாமல் பழமரபுக் கதைகள், விளையாட்டுகள், பழமொழிகள், விடுகதைகள் போன்றவற்றிற்கும் பொருத்திப் பார்க்கலாம் என்பதை நிறுவினார். பிராப்பின் 31 வினைகளை 10 ஆகச் சுருக்கிக் காட்டினார்.

- ## கிளாட் பிரிமாண்ட்

கிளாட் பிரிமாண்ட், பிராப்பின் அமைப்பியல் மாதிரியைப் பின்பற்றி மற்றொரு அமைப்பியல் மாதிரியை முன் வைத்துள்ளார். அவர் பிரெஞ்சு நாட்டுத் தேவதைக் கதைகளைத் தமது ஆய்வுக்கு உட்படுத்தினார். பிரெஞ்சு தேவதைக் கதைகள் மூன்று இணை செயல்களைக் கொண்டவை என்ற கருதுகோளை முன்வைத்தார். அவை :

1) சேதப்படுத்தல் (deterioration) முன்னேற்றம் (improvement)
2) தகுதி (merit) பரிசளித்தல் (reward)
3) விரும்பத்தகாதது (unworthiness) தண்டனை (Punishment)

இம்மூன்று இணைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தப்படும். அத்தொடர்பு இவ்வாறு அமையும்:

'அ' சேதப்படுத்தல் 'அ' முன்னேற்றமடைதல்
'இ' உதவி செய்தவனுக்கு நன்றி 'இ' உதவி செய்தவனின் கொடை
'ஆ' விரும்பத்தகாத வில்லனின் காரணமாக 'ஆ' வில்லனுக்குத் தண்டனை

பிராப் கண்டறிந்த 31 வினைகளை ஆலன் டண்டிஸ் 10 ஆகச் சுருக்கிக் காட்டினார். பிரிமாண்டின் பிரெஞ்சு மாதிரி இதனிலும் சுருக்கி, 6 வினைகள் மூன்று இணைகளாக அமைந்துள்ளன என்று குறிப்பிடுகின்றது. இம்மூன்று இணைகளுக்கும் பிராப்பின் செயல்களுக்கும் இடையே உள்ள தொடர்பையும் விளக்கியுள்ளார் பிரிமாண்ட்.

- ## லெவி ஸ்ட்ராஸ்

பிராபைத் தொடர்ந்து மொழியியலை அடிப்படையாக வைத்து நாட்டுப்புற வழக்காறுகளை அமைப்பியல் கோட்பாட்டின்படி ஆராய்ந்தவர் லெவி ஸ்ட்ராஸ் என்னும் மானிடவியல் பேரறிஞர். 'The Structural Study of Myth' என்ற ஆய்வுக் கட்டுரையில் புராணங்களைப் புதிய நோக்கில் ஆராய்கின்றார். லெவி ஸ்ட்ராஸ், பிராப்பின் முறையினின்றும் சிறிது விலகிச் சென்றாலும், அமைப்பியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே ஆராய்கிறார்.

## 6.3 வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு

வாய்பாடு என்பது பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட சூழலில் தேவைப்படும் போதெல்லாம் பயன்படுத்தப்படும் சொற்றொடராகும். இவ்வாய்பாடுகள் எல்லாம் ஒரே தன்மையும் பயனும் உடையனவாகும்.

### 6.3.1 வாய்பாட்டுக் கோட்பாடு

நாட்டுப்புறவியல் கோட்பாடுகளில் பெரும்பாலானவை 'பனுவல்' (text) என்பதை வைத்தே ஆய்வு செய்யப்பட்டன. கதை சொல்பவருக்கோ, பாடல் பாடுபவருக்கோ முக்கியத்துவம் தரப்படவில்லை. முதன் முதலில் இக்கோட்பாட்டில்தான் பாடகருக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இந்தக் கோட்பாடானது பாடகரின் மனத்தில் பாடல் உருவாகும் படிமுறைகளையும் அவர் பாடல் அல்லது காவியத்தை நிகழ்த்துவதற்குப் பயன்படுத்தும் உத்திகளையும் கவனத்தில் கொண்டது. குறிப்பிட்ட பாடகர் வெறுமனே மனப்பாடம் செய்வதன் மூலம் பாடுகிறாரா அல்லது பாடும் போது தாமாகவே உருவாக்குகின்றாரா? என்று அறிவது இக்கோட்பாட்டின் அடிப்படையாகும்.

இக்கோட்பாட்டை முதன்முதலில் உருவாக்கியவர் மில்மன் பாரி என்பவர் தான். இவர் இலியட், ஒடிசி ஆகிய காப்பியங்களின் வாய்பாட்டு அமைப்புகளை (Formulaic compositon) ஆராய்ந்தார். அதன்பின் 1933 முதல் 1935 வரை யுகோஸ்லேவியப் பகுதியில் வாழும் நாட்டுப்புறப் பாடகர்களின் பாடல்களைச் சேகரித்தார். சேகரித்த பாடல்களைப் புத்தகமாக எழுத ஆரம்பித்து எதிர்பாராத விதமாக அவர் இறந்துவிடவே, அவர் சீடர் ஆல்பர்ட் லார்டு ஆய்வினைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

ஆல்பர்ட் லார்டு தம் ஆய்வின் படி வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாட்டைக் கீழ்க்கண்டவாறு வரையறுக்கிறார்.

- குறிப்பிட்ட இன்றிமையாத ஒரு கருத்தை வெளிப்படுத்துவதற்காக ஒரே விதமான யாப்புச் சந்தத்தில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொகுதி.
- பாடகர் வாய்பாடுகளை மனப்பாடம் செய்து கொண்டு நாட்டுப்புறக் காப்பியங்களின் நிகழ்த்துதலில் பலமுறை பயன்படுத்துகிறார்.
- இந்த வாய்பாடுகள் இசை, சந்தம், சொற்றொடர், ஓசைப்புலன் சார்ந்த தோரணைகளால் உருவாக்கப்படுகின்றன.
- இவை ஓர் இளம்பாடகன் பாட ஆரம்பிக்கும் முன்னரே அவனது சிந்தனையில் சேர ஆரம்பிக்கின்றன. இந்த வாய்பாடுகள் வாய்மொழி எடுத்துரைப்பு நடையின் அடிப்படை ஆகும்.
- வாய்மொழிக் காப்பியங்களை எழுத்துக் காப்பியங்களிலிருந்து வேறுபடுத்தும் எண்ணத்தில் பயிலும் நமக்கு மிகவும் உதவும் ஒரு கூறு வாய்பாடு ஆகும்.
- இது எந்த ஒரு வரி மற்றொரு வரியுடனும் அடிக்கருத்துடனும் தொடர்புடையது எனப் படிப்பதற்கும், மொத்தத்தில் பாடலின் வடிவத்தைப் படிப்பதற்கும் உதவுகிறது.
- அடிக்கருத்துகள் என்பவை மரபுவழிப் பாடலின் வாய்பாட்டு நடையில் ஒரு கதையைச் சொல்லுவதற்காக வழக்காகப் பயன்படுத்தப்படும் கருத்துகளின் தொகுதிகள் ஆகும்.

இந்த அடிக்கருத்துகள் அதே அடிப்படை நிகழ்வுகளையும் விளக்கங்களையும் குறிக்கின்றன.

### 6.3.2 வாய்மொழி வாய்பாட்டின் பயன்பாடு

- கதைப் பாடல்களைப் பாடுவோர் சில அடிகளைத் திரும்பத் திரும்பப் பாடும் பொழுது அவ்வடிகள் கேட்போருக்கு மட்டுமன்றிப் பாடுவோருக்கு அதைவிட மிகுந்த உதவியாக இருக்கும்.

- கேட்போர் கதையை நன்கு நினைவில் கொள்ளுதலும், சொல்வோர் நினைவு படுத்திக் கொள்ளுதலும் இதனால் எளிதாகின்றன.

- இதுவே எழுத்து இலக்கியத்திற்கும் வாய்மொழி இலக்கியத்திற்கும் உள்ள பெரிய வேறுபாடு ஆகும்.

- கேட்டுக் கேட்டு மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டியிருத்தலால் இந்த ‘மீண்டு வரல்’ உத்தி (technique), கதை (story or tale), பாடல் (song), கதைப்பாடல்(Ballad) ஆகியவற்றில் பயன்படுத்தப் படுகிறது.

- பாடுபவர் காலத்தைச் சூழ்நிலைக்கு ஏற்ப நீட்டிக்கவும் பயன்படுத்திக் கொள்கிறார். பார்வையாளரைத் தன்வயப்படுத்தவும் பாடுவோருக்கு உதவுகிறது.

சான்று

இந்த உத்தி கதைப் பாடல்களில் மீண்டும் வரல், மாறுபட மீண்டும் வரல், இடை இடையே மீண்டும் வரல் எனக் காணப்படுகின்றது.

ஆறான மாசமதில் அரகரா தஞ்சமென்பாள்
ஏழான மாசமதில் இறையவரே தஞ்சமென்பாள்
எட்டான மாசமதில் ஈசுவரரே தஞ்சமென்பாள்
ஒன்பதான மாசமதில் உடையவரே தஞ்சமென்பாள்

என்ற பாடலில் தஞ்சமென்பாள் என்ற வார்த்தை மீண்டும் மீண்டும் வருகிறது. இவ்வாறு அமைவது ஒரு குறிப்பிட்ட வாய்பாடாகும். இது வாய்மொழி வழக்காற்றில் அமைய, அதனை வாய்மொழி வாய்பாடு என்கின்றனர்.

தன்மதிப்பீடு : வினாக்கள் -I

# 6.4 சூழல் கோட்பாடு

நாட்டுப்புற வழக்காற்றை ஆராயும் அறிஞர்கள் வழக்காறுகளின் சுவையும் பண்புகளும் அதைச் சொல்லும் முறையிலேயே அமைந்துள்ளன என்பதை உணர வேண்டும். கதை சொல்லும் நிகழ்வை, சொல்லுகின்ற காலச் சூழல், நேரம், பருவகால நிலை முதலானவற்றோடு இணைத்துப் பார்க்க வேண்டும். இவற்றைப் பனுவலோடு (Text) உற்றுநோக்கி ஆராய வேண்டும். அந்தந்த மண்ணில் தான் கதைகள் வாழ்கின்றன. அவை எழுதப்படும் தாள்களில் வாழ்வதில்லை. சூழல்களைப் புறக்கணித்து விட்டு ஆய்வாளர் ஒருவர் ஆய்வு செய்தால் அவ்வாய்வு உயிருள்ளதாக அமையாது. சூழல் கருத்தாக்கம் என்பது இதுவே.

மேற்கண்ட ‘சூழல்’ என்ற கருத்தாக்கத்தை முதன்முதலில் 1935இல் மாலினோவிஸ்கி என்பவர் முன்வைத்தார். தன்னுடைய மொழியியல் இனவரைவியல் கோட்பாட்டின் ஒரு பகுதியாகப் பொருளின் சூழல் இன்றியமையாமையை இதன் வழிக் குறிப்பிட்டார். அதன்பின்னர் 1960இல் இந்தியானா மற்றும் பென்சில்வேனியா பல்கலைக் கழகங்களில் பயிற்சி பெற்ற இளம் அமெரிக்க வல்லுநர்கள் பனுவல், மொழி, பாவனைகள், கருத்துப் பரிமாற்ற மொழியியல், உளவியல், சமூகவியல், குறியியல் போன்ற சமூக அறிவியல்கள் எவ்வாறு சூழலைச் சார்ந்துள்ளன என்று கண்டனர்.

அதன் பிறகு ரோஜர் ஆபிரகாம், டான்பென் ஆமோஸ், ஆலன் டண்டிஸ், ராபர்ட் ஜார்ஜஸ் மற்றும் கென்னத் போல்ட்ஸ்டின் போன்றோர் நாட்டுப்புற வழக்காறுகளை, சமூகத்தின் உண்மையான தொடர் நிகழ்ச்சியாகப் பார்த்தனர். அதனால் அவர்கள், வாய்மொழி நடத்தைகளை (Verbal behaviour) மொழியியிலிருந்தும், இயங்கியலை (Dialectics) மானுடவியலிலிருந்தும், தனி நபரின் பங்கேற்பைச் (Role- playing) சமூகவியலிலிருந்தும், தான் என்ற தன்முனைப்புக் (ego) கருத்தை உளவியலிலிருந்தும் பெற்றனர். அதுமுதல் பல துறைகளில் இருந்து நாட்டுப்புறவியலுக்கு வந்த ஆய்வாளர்கள், வாய்மொழி மரபுகளைச் சூழலிலிருந்து தனிப்படுத்திச் சிந்திக்காமல், அதன் பன்முகங்களைப் பண்பாட்டுச் சூழல்களிலும் பொதுவான சமூகக் கட்டமைப்பு நிலைகளிலும் ஆராயத் தொடங்கினர்.

## 6.4.1 சூழல்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவரிடையே உள்ள இந்த வேறுபாட்டைப் பாருங்கள். இதற்குக் காரணம் சூழலே ஆகும். மாமியார் 75 வயதானவர். பழைய மரபுகளில் ஊறியவர். எனவே, அவர் வயலுக்குச் சொந்தக்காரரை ‘எங்க ஆண்ட’, ‘எங்க அய்யா’ எனப் பயபக்தியோடு பணிவோடு விளித்துப் பாடுகிறார். இது அவர் வளர்ந்த – வாழ்ந்த சூழலின் பாதிப்பு.

மருமகள் 30 வயதானவர். சாதிகள் குறித்துக் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட சிந்தனைகள், அவருக்கு ‘எங்க ஆண்ட’, ‘எங்க அய்யா’ என்று பாடவேண்டிய தேவை இல்லை என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

அவர்களின் பாடல்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், முதலில் அவர்கள் வளர்ந்த, இப்பொழுது வாழ்கின்ற சூழலைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அப்பாடலின் வேற்றுமைக்குக் காரணத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

## 6.4.2 சூழலின் வகைகள்

1983இல் நாட்டுப்புறவியல் சூழல் ஆய்வில் ரிச்சர்டு பாவ்மென் ஆறு வகையான சூழல்களை விளக்குகிறார். நாட்டுப்புற வழக்காறுகளை நுட்பமாக உற்று நோக்குகிறார். சூழல் உறவுகளைப் பண்பாட்டுச் சூழல் என்றும், சமூகச் சூழல் என்றும் வகைப்படுத்துகிறார்.

- பண்பாட்டுச் சூழல் பொருள்களின் அமைப்புகளையும்
- சமூகச் சூழல் சமூக அமைப்பையும், பரிமாற்றங்களையும் விளக்குகின்றன.

- பொருள் சூழல்

நாட்டுப்புற வழக்காற்று வகை ஒன்றைப் பற்றி அச்சமூக உறுப்பினர்களின் ஒட்டு மொத்தமான பொருள் கொள்ளும் முறையாகும்.

- நிறுவனச் சூழல் (Institutional Context)

அவ்வகைப் பண்பாட்டிற்குள் அது எங்கே பொருந்தி வருகிறது என்பதாகும்.

- தொடர்புமுறைச் சூழல் (Context of Communication System)

அது எவ்வாறு பிற நாட்டுப்புற வழக்காற்று வகைகளோடு தொடர்பு கொள்கிறது என்பதாகும்.

- சமூக அடித்தளம் (Social base)

அவ்வகையைக் கொண்டிருப்பவர்கள் என்ன வகையான மக்கள்?

- தனிமனிதச் சூழல் (Individual context)

அது எவ்வாறு ஒரு தனிமனிதன் வாழ்வில் செயலாற்றுகிறது?

- சுற்றுச் சூழமைவுகளின் சூழல் (Context of Situation)

சமூகப் பின்னணிகளில் அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதாகும்.

இந்த ஆறு சூழல்களும் தம்முள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. ஆய்வுக்கு மிகவும் இன்றியமையாதவை.

### 6.4.3 சூழல் கோட்பாட்டின் பயன்பாடு

- பனுவலின் பொருள் அதன் சூழலில் தான் உள்ளது.
- இவ்வகை ஆய்வுகள் காரணங்களைத் தேடுவதைக் காட்டிலும் பொருளைத் தேடுகின்றன.
- ஒரு நாட்டுப்புற வழக்காற்றுப் பனுவலை, மாறுபட்ட சமூக வரலாற்றுப் பண்பாட்டுச் சூழலுக்கு மாற்றும் போது 'பனுவல், அதன் உட்பொருளை விட நிலையானது' என்ற நிலைக்குச் செல்கிறது. ஆயின் உண்மையான விளக்கம் பனுவலை அதன் சூழலில் ஆய்வதே ஆகும்.
- நாட்டுப்புறவியலிலுள்ள 'சூழல்' என்ற கருத்தாக்கம் மானுடவியல், மொழியியல், சமூகவியல், உளவியல் மற்றும் தத்துவவியல் போன்ற பிற துறைகளுக்கும் பெரும் பங்களிக்கிறது.

சான்று

நாட்டுப்புற வழக்காறு ஒன்றின் உண்மையான பொருள் பின்னணிச் சூழலிலிருந்து தான் பெறப்படுகிது, பொருள் சூழலிலோ அல்லது தோராயமான பொருள் கொள்ளுதலிலோ இருந்து அல்ல.

முன்பு நாம் பார்த்த ஒரே வீட்டைச் சார்ந்த மாமியார், மருமகள் இருவரும் வயலில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். அப்பொழுது அவ்வயலுக்குச் சொந்தக்காரர் வருகிறார். அவ்வேளையில் இருவரும் பாடல் பாடுகின்றனர். அப்பாடல்கள் பின்வருமாறு :

மாமியார் பாடிய பாடல் :

வட்டக் குடிபிடிச்சே – எங்க ஆண்ட
வயப்பாக்க வாராக
வயலுங் கருதாகும் – அவுக
வந்தெடமுந் தோப்பாகும்
நீளக் குடபிடிச்சே – எங்க அய்யா
நிலம் பாக்க வாராக
நிலமுங் கருதாகும் – அவுக
நின்னெடமுந் தோப்பாகும்.

மருமகள் பாடிய பாடல் :

வட்டக் குடபுடிச்சே
வயப்பாக்க வாராக – அவுக
வயலுங் கருதாகும்
வந்தெடமுந் தோப்பாகும்
நீளக் குடபிடிச்சே
நிலம் பாக்க வாராக – அவுக
நிலமுங் கருதாகும்
நின்னெடமுந் தோப்பாகும்.

## 6.5 தொகுப்புரை

- கோட்பாடு என்றால் என்ன, அதன் சொல்லாட்சி விளக்கம் போன்றவை முதலில் தரப்பட்டுள்ளன.
- நாட்டுப்புற வழக்காற்றை உலகளாவிய ஆய்வாக உருவாக்கிய தன்மை, அதற்கென்று சில கோட்பாடுகள் உருவாக்கப்பட்ட காரணிகள் ஆகியவை சுட்டப்பட்டுள்ளன.
- உருவாக்கப்பட்ட கோட்பாடுகளில் மூன்று கோட்பாடுகள் மட்டும் எடுத்து விளக்கப்பட்டுள்ளன.
- அமைப்பியல்-அமைப்பியல் கோட்பாடு – உருவான திறன் – பயன்பாடு- வரையறை போன்றவையும் விளக்கப்பட்டுள்ளன.
- அடுத்ததாக, வாய்மொழி வாய்பாடு – வாய்பாடுக் கோட்பாடு – வரையறை – பயன் – சான்றுடன் காணப்பட்டுள்ளது.
- இறுதியாகச் சூழல் என்றால் என்ன? எதற்காகக் கோட்பாடாக உருவானது? விளக்கப்பட்டு – வரையறை – பயன் – சான்றுடன் கூறப்பட்டுள்ளது.

தன்மதிப்பீடு : வினாக்கள் -II

# A06111 தன் மதிப்பீடு : விடைகள் - I

1) நாட்டுப்புறவியல் என்ற சொல்லாட்சியின் விளக்கங்கள் யாவை?

**(விடை):**அகராதி கூறுவது : மக்களுடைய அல்லது நாட்டினுடைய அல்லது இனத்தினுடைய கற்றல் மற்றும் அறிவு. வழிவழியாக வழங்கி வருவது. அறிஞர்கள் கூறுவது : கல்வியறிவற்றவர் – கிராமத்தில் வாழ்பவர் – தாழ்ந்த சமூகநிலையில் உள்ளவரின் வாய்மொழிப் படைப்பு.

2) நாட்டுப்புற இலக்கியத்தின் தன்மைகள் என்ன?

(விடை):வாய்மொழியாகப் பரவுவது. மரபு வழிப்பட்டது. திரிபுகளுக்கு உட்பட்டது. படைப்பாளர் இன்னார் என்று கூற முடியாதது. குறிப்பிட்ட வாய்பாட்டுக்குள் அடங்குவது.

3) நாட்டுப்புறக் கதைகள் – கதைப்பாடல்கள் என்ன வகையில் வேறுபடுகின்றன.

**(விடை):**கதைகள் அறக்கோட்பாட்டை வலியுறுத்த உருவாக்கப்பட்டவை. கதைப்பாடல்கள் என்பன கதையினைப் பாடலாகப் பாடுவன. பெரும்பாலும் வீரதீரமிக்க கதைத்தலைவனைக் குறித்துப் பாடப்பெறும்.

4) நாட்டார் யார்?

**(விடை)**:நாட்டார் என்பார் தேசத்தார் – நாட்டாண்மைக்காரர் – கள்ளர், செம்படவர் முதலிய சாதியினர் என்று தமிழ்ப் பேரகராதி கூறுகிறது. நாட்டுப்புற மக்கள் என்று நா.வானமாமலை கூறுவார்.

முன்

# A06111 தன் மதிப்பீடு : விடைகள் - II

1) வாய்மொழி இலக்கியம் என்றால் என்ன?

**(விடை)**:பாமர மக்களால் பாடப்பெற்றது – கூறப்பெற்றது – சொல்லப்பட்டது. எழுத்தில் இடம்பெறாத இலக்கியம் வாய்மொழி இலக்கியமாகும்.

2) எழுத்திலக்கியம் – விளக்கம் தருக.

**(விடை)**:அச்சுக் கருவியின் வருகைக்குப் பின்பு மனிதனால் படைக்கப்பட்ட இலக்கியம் அச்சில் ஏற்றப் பெற்ற பொழுது எழுத்து இலக்கியம் என்பதாயிற்று.

3) வாய்மொழி இலக்கியத்தின் தாக்கம் எழுத்திலக்கியத்தில் உண்டு என்பதைச் சான்றுடன் கூறுக.

**(விடை)**: “அகவன் மகளே அகவன் மகளே.....
பாடுக பாட்டே .... பாடுக பாட்டே”

என்ற சங்கப்பாடலில் வாய்மொழி இலக்கியத்தின் திரும்பத் திரும்ப வரும் கூறு அமைந்துள்ளதைக் காணலாம்.

4) நாட்டுப்புற இலக்கியத்தின் தனிச்சிறப்புகள் யாவை?

**(விடை)**:எளிமையானவை. இனிமையானவை. மக்களை விரைவில் ஒன்று சேர்க்கும் திறமிக்கவை.

முன்

# A06112 தன் மதிப்பீடு : விடைகள் - I

1) இந்திய நாட்டுப்புறவியலில் தமிழக நாட்டுப்புறவியலின் நிலை என்ன?
**(விடை):**இந்தியவியலின் ஒரு பகுதியாக உள்ள நாட்டுப்புறவியலில் தமிழக நாட்டுப்புறவியல் தமிழக நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை உள்ளது உள்ளபடி கூறும் தன்மையதாகும்.

2) நாட்டுப்புறவியல் வழக்காற்றின் பண்புகள் யாவை?
**(விடை):**இதற்கு நிலைத்த தன்மையும் உண்டு. நிலையற்ற தன்மையும் உண்டு. மக்கள் விரும்புவது, சமூக அடையாளங்களைக் காட்டும் தன்மையது.

3) நாட்டுப்புறக் கதைகளின் வகைகள் யாவை?
**(விடை):**புராணக்கதை, பழங்கதை, பொதுமக்கள் கதை என்பனவாகும்.

முன்

# A06112 தன் மதிப்பீடு : விடைகள் - II

1) தொடக்க காலத்தில் நாட்டுப்புறவியலின் வளர்ச்சிக்குத் துணை செய்த இதழ்கள் யாவை?
(விடை):தாமரை, கலைமகள், மஞ்சரி ஆகிய இதழ்கள் நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறப் பழமொழிகள் போன்றவற்றை வெளியிட்டு, நாட்டுப்புறவியல் வளர்ச்சிக்குத் துணை செய்தன.

2) நாட்டுப்புறவியல் எதிர்காலத்தில் நிலைத்த பேற்றினைப் பெறுமா? எடுத்துரைக்க.
(விடை):நாட்டுப்புறவியல் மக்கள் உள்ள காலம் வரையிலும் வாழும் நிலைத்த பேற்றினைக் கொண்டது. கல்வி நிறுவனங்களின் ஆய்வுகளும் மக்களின் பயன்பாடும் தொடர்ந்து கொண்டே இருப்பதால் நாட்டுப்புறவியல் எதிர்காலத்தில் சிலமாற்று வடிவங்களோடு மறையாது விளங்கும்.

3) நாட்டுப்புறவியல் இலக்கியம் எங்ஙனம் பிற இலக்கிய வகைகளிலிருந்து (எழுத்து இலக்கியம்) வேறுபட்டு விளங்குகிறது?
(விடை):எல்லாவகையான இலக்கிய வகைகளிலும் உளவியல், மொழியியல், சமுதாயவியல் போன்றவற்றின் உள்ளீடாக நாட்டுப் புறவியல் விளங்குகிறது. பிற இலக்கிய வகைகள் எழுத்து வடிவம் பெறுவதற்கு முன்பே தோன்றியது நாட்டுப்புற இலக்கியம்.

முன்

# A06113 தன் மதிப்பீடு : விடைகள் - I

1)நாட்டுப்புறவியலின் வகைமைப்பாடு குறித்து எழுதுக.

**(விடை):**நாட்டு◌ப்புறவியலின் வகைமைப்பாடு இரண்டு வகையாகும்.

1) இனவகைமை

2) ஆய்வு வகைமை

என்பவைகளாகும்.

2)நாட்டுப்புற இலக்கியத்தின் (Folk Literature) சிறப்புகள் யாவை?

**(விடை):**நாட்டுப்புற இலக்கியம் மண்ணின் மணத்தைப் பரப்பும் சிறப்பினைக் கொண்டது. நாட்டுப்புற இலக்கியம் மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ அதைக் குவித்து வைத்துள்ளது.

3)கதைப்பாடல் அமைப்பின் முக்கியப் பகுதிகள் யாவை?

**(விடை):**காப்பு அல்லது வழிபாடு, குருவணக்கம், வரலாறு, வாழி என்னும் நான்கு பகுதிகளாகும்.

4)விடுகதையின் வகைகள் யாவை?

**(விடை):**விளக்க விடுகதைகள், நகைப்பு விடுகதைகள், கொண்டாட்ட விடுகதைகள், பொழுதுபோக்கு விடுகதைகள் என நான்கு வகைப்படும்.

முன்

# A06113 தன் மதிப்பீடு : விடைகள் - II

1) நாட்டுப்புற இசையினை எதில் காணலாம்?
**(விடை)**:நாட்டுப்புற இசையினை வில்லுப்பாட்டில் காணலாம்.

2) நாட்டுப்புற மருத்துவத்தை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை?
**(விடை)**: இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை :

1) மந்திரசமய மருத்துவம்

2) இயற்கை மருத்துவம்.

3) சிற்பங்கள் எவற்றில் செதுக்கப்படுகின்றன?
**(விடை)**:மரத்திலும், உலோகத்திலும், கல்லிலும் செதுக்கப்படுகின்றன.

4) கூத்து எத்தனை வகைப்படும்?
**(விடை)**:கூத்து மூன்று வகைப்படும்.

முன்

# A06114 தன் மதிப்பீடு : விடைகள் - I

1)நாட்டுப்புறவியல் துறையைப் பிற துறைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான காரணத்தைஆராய்க.

**(விடை):**நாட்டுப்புறவியல் துறையில் பிற துறைகளாகிய உளவியல், மொழியியல், சமூகவியல், மானுடவியல் போன்ற கூறுகள் உள்ளன. எனவே நாட்டுப்புறவியலைப் பிற துறைகளோடு இணைத்துப் படிக்க வேண்டும்.

2)நாட்டுப்புறவியலில் மொழியியல் பெறும் இடம் யாது?

**(விடை):**மொழிக்கூற்றில் ஒரு சொல்லானது திரும்பத் திரும்ப வருதல் என்பது உண்டு. இது நாட்டுப்புறவியல் இலக்கியத்தில் குறிப்பாகப் பாடல்களில் காணப்படுகிறது.

3)ஃபிராய்டின் உளப்பகுப்பாய்வின் போக்கும் அது நாட்டுப்புறவியலில் இடம்பெறும் தன்மையையும் விளக்குக.

(விடை):நாட்டுப்புறக் கதைகள், புராணங்கள், தொல்பழங்கதைகள், பழமொழிகள், குலக்குறி வழிபாடு, விலக்குகள் (Taboos) மற்றும் பல பிற வழக்காறுகளின் அர்த்தங்களின் ஆழத்தைக் கண்டறிய ஃப்ராய்டின் சிந்தனை வழிகாட்டியது.

4)நாட்டுப்புறவியல் சமூகவியல் துறைக்குப் பயன்படும் விதத்தை எழுதுக.

(விடை):நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் கதைகள், பழமொழிகள், விடுகதைகள் போன்ற கூறுகளைக் கொண்டு அம்மக்களின் வாழ்வியலைக் கணிப்புச் செய்யச் சமூகவியல் துறைக்குப் பயன்படுகிறது.

5)நாட்டுப்புறவியலில் சமூகவியல் கூறுகள் இடம்பெறும் பாங்கினை விளக்குக.

**(விடை):**குடும்பம், கூட்டுக் குடும்ப அமைப்பு, சாதிப் பிரச்சனை, சொத்துரிமை, மகளிர் நிலை போன்றவை நாட்டுப்புறவியலில் காணப்படும் சமூகவியல் கூறுகளாகும்.

முன்

# A06114 தன் மதிப்பீடு : விடைகள் - II

1) நாட்டுப்புறவியலைப் பிற துறைகளோடு இணைத்துப் பார்க்க வேண்டிய அவசியம் அல்லது தேவை பற்றி ஆராய்க.
**(விடை):**நாட்டுப்புறவியலைப் பிற துறைகளோடு இணைத்துப் பார்க்கும் பொழுது கூடுதல் தரவுகளையும் கருத்துகளையும் பெற முடிகிறது. எனவே அது தேவையாகிறது.

2) நாட்டுப்புறவியலில் காணப்படும் பண்பாட்டுக் கூறுகள் பற்றி விவரிக்க.
(விடை):மக்கள் வாழ்வில் காணப்படும் குடும்பச் சமுதாயப் பழக்க வழக்கங்கள், வாழ்வியல் முறைகள், உறவுகளின் பிணைப்பு ஆகியவை பண்பாட்டுக் கூறுகள் எனலாம். இவற்றை நாட்டுப்புறவியல் வழக்காறுகளின் வழி அறியலாம்.

3) நாட்டுப்புறவியல் – மானுடவியல் இரண்டிற்கும் உள்ள தொடர்பினை எழுதுக.
(விடை): மனிதனின் பிறப்புத் தொட்டு இறப்பு வரை உள்ள அவனது உருவத் தோற்றப் பண்பாட்டு வளர்ச்சியை ஆராய்வது மானுடவியலாகும். இது நாட்டுப்புற மக்களைக் கருவாகக் கொண்டு ஆராய்வதால் நாட்டுப்புறவியலோடு மானுடவியல் தொடர்பு உடையதாகிறது.

4) நாட்டுப்புறவியல் – மண்ணியல் இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு யாது?
(விடை):பூமி பல மண் அடுக்குகளைக் கொண்டது. இதில் பல உயிரியல் எச்சங்கள் படிந்துள்ளன. இத்தகு மண்ணின் மைந்தர்கள் எங்ஙனம் வாழ்ந்தனர் என்பதை நாட்டுப்புறவியல் வழக்காறுகள் கூறுகின்றன. இதில் மண்ணியல் தொடர்பான செய்திகளும் உள்ளன. எனவே இரண்டிற்கும் தொடர்புண்டு எனலாம்.

5) நாட்டுப்புறவியலில் காணப்படும் வரலாற்றுச் செய்திகள், சமூக வரலாறு பற்றி எழுதுக.
(விடை):நாட்டின் கடந்த கால நிகழ்வினைக் கூறுவது வரலாறு. நாட்டுப்புறவியலில் கதைப் பாடல்களில் இராமப்பய்யன் அம்மானை, கட்டபொம்மன் கதைப் பாடல் என்பன வரலாற்றுச் செய்தியையும், ஆங்கிலேயர் எதிர்ப்பு ஆகிய சமூக வரலாற்றினையும் கூறுகின்றன.

முன்

# A06115 தன் மதிப்பீடு : விடைகள் - I

1) நாட்டுப்புறப் பாடல்களின் சிறப்புகள் யாவை?

**(விடை)**:நாட்டுப்புறப் பாடல் மக்கள் வாழ்க்கையில் பிறந்து மக்களோடு வளர்ந்து மக்களுக்கே பயன்படும் ஒன்றாகும். அவர்களது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் இரண்டறக் கலந்த சிறப்பினைக் கொண்டதாகும்.

2) தரவுகளைச் சேகரிக்கும் பணிகள் யாவை?

**(விடை)**:தரவுகள் சேகரிப்பில் முதற்கண் ஆய்வாளர் ஆய்வுக் களத்தைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும். ஆய்வுக் களம் பற்றிய அறிவுத் தெளிவு உடையவராக இருத்தல் வேண்டும். தகவலாளியிடம் தரவுகளைப் பெறுவதற்கு ஏற்ற திறன் மிக்கவராகவும் விளங்க வேண்டும்.

3) தரவுகளின் வகைகளைக் கூறுக.

**(விடை)**: தரவுகளில் 1) முதல் நிலைத் தரவுகள் (Primary sources), 2) துணைநிலைத் தரவுகள் (Secondary sources) என்று இருவகைகள் உண்டு.

முன்

# A06115 தன் மதிப்பீடு : விடைகள் - II

1) மின்னணுச் சாதனங்கள் எவை?

**(விடை):** ஒலிப்பதிவுக் கருவி, ஒளிப்படக் கருவி, ஒலி ஒளிப்படக் கருவி, இணையம் ஆகியவை மின்னணுச் சாதனங்கள்.

2) வழக்காறுகளை எத்தனை முறைகளில் பதிவு செய்யலாம்?

**(விடை):** மூன்று முறைகளில் பதிவு செய்யலாம்.

3) சூழல் மாற்றம் என்றால் என்ன?

**(விடை)**:செயற்கைச் சூழலில் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக இயற்கையான சூழலையோ அல்லது அதே போன்றதொரு சூழலையோ தோற்றுவித்துப் பாடலைப் பதிவு செய்தல் சூழல் மாற்றம் என்று அழைக்கப்படுகிறது.

முன்

# A06116 தன் மதிப்பீடு : விடைகள் - I

1) நாட்டுப்புறவியல் – கோட்பாடுகள் – விளக்கம், வரையறையினைக் குறித்து எழுதுக.

**(விடை):** கோட்பாடு என்பது கருத்தாக்கம் (Ideology) ஆகும். இது சமுதாய நிலைப்பாட்டினாலும் மக்களின் சிந்தனைத் தெளிவினாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாகும்.

2) அமைப்பியல் கோட்பாடு என்றால் என்ன?

**(விடை):** நாட்டுப்புற வழக்காற்றுக் கதைகளின் பகுதியாகிய உறுப்பும், விளக்கும், பகுதிகள் கொள்ளும் உறவும் அமைப்பியல் ஆகும். ரஷ்யாவின் ப்ராப் மற்றும் அறிஞர்கள் பலர் இதன் வளர்நிலைக்கு உதவி வருகின்றனர்.

3) நாட்டுப்புற இலக்கியத்தில் அமைப்பியலின் பயன்பாடு பற்றி எழுதுக.

**(விடை):** அமைப்பியல் கோட்பாட்டில் நிலையானது, நிலையற்றது என்ற இருவகையான தன்மைகளைச் சான்றுகள் மூலம் காண முடியும்.

4) நாட்டுப்புற வழக்காறுகளை உலக மயமாக்கல் என்றால் என்ன?

**(விடை):** உலகளாவிய திறத்தில் ஒரு பொதுவான வழக்காற்றினைக் கொண்டதாக நாட்டுப்புற வழக்காறு விளங்கும் தன்மையதே உலக மயமாக்கல்.

5) உலகளாவிய நாட்டுப்புறவியல் ஆய்வு பற்றி எழுதுக.

**(விடை):** நாட்டுப்புற வழக்காற்றுத் துறைகளைக் கொண்ட உலகிலுள்ள அனைத்து நாடுகளும் ஆய்வு செய்து கோட்பாடுகளை வரன் முறைப் படுத்தியுள்ளன.

6) வாய்மொழி வாய்பாடு என்றால் என்ன?

**(விடை):** இதில் வழக்காறுகள் ஒரே தன்மையும் பயனும் கொண்ட பொருளாக விளங்கும்.

7) வாய்பாடு உருவாக்கம், அதன் பயன் பற்றி விளக்குக.

**(விடை):** குறிப்பிட்ட கருத்தை வெளிப்படுத்தக் குறிப்பிட்ட யாப்பமைதி ஏற்படும். அது மனனம் செய்வதற்கு எளிய முறையாகும். இது ‘மீண்டும் வரல் உத்தி’ ஆகும்.

முன்

# A06116 தன் மதிப்பீடு : விடைகள் - II

1) சூழல் என்றால் என்ன?

**(விடை)**:நாட்டுப்புற வழக்காறுகள் ஒரு குறிப்பிட்ட சூழலில் தான் உருவாகின்றன. இந்தப் பின்புலத்தோடு அவற்றை ஆய்வு செய்யும் பொழுது கூடுதல் தரவுகளைப் பெறலாம்.

2) வாய்மொழி வழக்காற்றில் சூழல் எவ்வாறு பொருத்திப் பார்க்கப்படுகிறது?

**(விடை)**:பொருள் சூழல், நிறுவனச் சூழல், தொடர்புமுறைச் சூழல், சமூக அடித்தளம், தனிமனிதச் சூழல் மற்றும் சுற்றுச் சூழமைவுகளின் சூழல் என்ற வகைகளில் ஒரு குறிப்பிட்ட வழக்காற்றினைப் பொருத்திப் பார்க்க வேண்டும்.

3) இன்றைய நாளில் வழங்கப்படும் நாட்டுப்புறவியல் வழக்காற்றில் சூழல் புலப்படும் பாங்கினைக் கூறுக. **(விடை)**:எய்ட்ஸ், மக்கள் தொகைப் பெருக்கம் இவை பற்றிய விழிப்புணர்வுக்கான விளம்பரங்களில் நாட்டுப்புறக் கலை வடிவங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றில் இக்காலச் சமூகச் சூழல் புலப்படுவதைக் காண்கிறோம்

முன்